# ராணி முத்து

மார்ச் 16
2014



இந்திரா சௌந்தர்ராஜன்

## அங்கே நான் நலமா...?

ரூ.8

# என்னுரை...

**நா**ன் எழுதிய நாவல்களில் நூறு சதவிகித முழுமையுள்ள படைப்பு இது என்று கூறுவேன். ஒரே மூச்சில் இதைப் படிப்பவர்கள்– கொஞ்சம் இளகிய உள்ளம் படைத்தவர்களாக இருந்தால்– நிச்சயம் கதையின் முடிவில் கண்ணீர் விடுவார்கள்.

தெளிந்த நீரோடை போல எழுத்தோட்டம் இருக்க வேண்டும் என்பது என் விருப்பம். இதில் அது இருக்கும். சினிமா துறை பற்றி கதையில் சொல்லப்படுவதால் அந்தத் துறை சார்ந்த 'ஜிகினா' வேலைகளை இதில் கொஞ்சம் சேர்த்தேன்.

எனக்கு எப்போதுமே விறுவிறுப்பு மிக முக்கியம். கூடவே சிந்திக்க வைப்பதும் மிகப் பிடித்த விஷயம். இக்கதைக்குள் சித்தர் பாத்திரம் ஒன்று, அந்த சிந்தனையை மிகவே தூண்டியுள்ளது.

இது ஒரு குடும்பக் காவியம் – காதல் கதை – கொஞ்சம் மர்மக் கதையும்கூட....!

இந்த மூன்றின் கலவையாக இதை எழுதி முடித்த நிலையில், தலைப்புக்காக கொஞ்சம் தவித்தேன். இறுதியாக 'அங்கே நான் நலமா?' என்று கொஞ்சம் கவிதை – கொஞ்சம் விடுகதையாக இந்த தலைப்பை தேர்வு செய்தேன். உங்களுக்கும் நிச்சயம் பிடித்திருக்கும். கதைக்குள் நுழையுங்கள்... என் 'ஹீரோ' உங்களை உருகி அழ வைக்க தயாராக இருக்கிறான்!

நேசமுடன்...

இந்திரா சௌந்தர்ராஜன்





# அங்கே நான் நலமா?

இந்திரா சௌந்தர்ராஜன்

1

**அ**ந்தமனிதரைப் பார்த்தபோது ஒரு பிச்சைக்காரன் மாதிரிதான் தெரிந்தது. ஆனால், அதற்கேற்றபடி நாற்றமில்லை. மாறாக உடம்பில் இருந்து சந்தனமும்,

பன்னீரும் கலந்த மாதிரி ஒரு வாசம் வீசியது.

நந்தகுமாரை அந்த விஷயம் ஆச்சரியப்படுத்தியது. அவன் பார்த்துக்கொண்டே இருக்கும்போது பெரியவர் ஒருவர் காரில் வந்து இறங்கி ஓடிச் சென்று அவரது காலில் விழுந்தார்.

அவரோ அலட்சியமாக முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

"நீ உருப்பட மாட்டேடா... கொஞ்சம்கூட உருப்படமாட்டே..." என்று திட்டவும் செய்தார். அதைக் கேட்ட அந்தப் பெரியவர் முகத்தில் ஒரே சந்தோஷம்.

அப்படி அவர் திட்டினாலும் அது ஆசீர்வாதமாம்!

மிக உற்சாகமான மனநிலையில் இருந்தான் நந்தகுமார். இன்றைக்கு அவனுக்கு 'ஸ்கிரீன் டெஸ்ட்'. மணிரத்னம் போல ஓர் இயக்குநர் அவனை 'ஹீரோ'வாகப் போட்டு ஒரு படம் எடுக்கப்போகிறார். அவர் கதாநாயகன் தேர்வுக்காக எவ்வளவோ பேரைப் பார்த்துவிட்டார். ஒருவர்கூடத் தேறவில்லை. இறுதியாக தேறியவன்தான் நந்து என்கிற நந்தகுமார்.

இவனுக்கு பெரிய விஷயம் உடம்புதான். ஒரு நாளைக்கு மூணு வேளை குளியல், அப்புறம் வாரம் இரண்டு முறை எண்ணெய்க் குளியல். இது போதாது என்று தினசரி 'ஜாக்கிங்', 'ஜிம்'மில் உடற்பயிற்சி என்று மாய்ந்து போகிறவன்.

ஒரு சாதாரண ஜலதோஷத்துக்குக்கூட உடனே 'ஸ்பெஷலிஸ்ட்'டிடம் போய்விடுவான். அப்படியொரு உடம்புப் பைத்தியம். கல்லூரி நாட்களிலேயே அவனது உடம்புக் காதல் மிகவும் 'பேமஸ்'. சாதாரண வெயில்கூட மேலே படக்கூடாது. சில வாத்தியாரம்மாக்கள் போல குடை பிடித்துக்கொண்டுதான் வெளியே போவான். மழைக்கும் இது பொருந்தும். சாதாரணத் தூற்லில் நனைவதுகூட காய்ச்சலில் கொண்டு விட்டுவிடும் என்று கற்பனை செய்துகொள்கிறவன்.

மொத்தத்தில் உடம்புதான் அவன் உலகம்.

அதற்குப் பரிசு போலத்தான் 'ஹீரோ' வாய்ப்பு வந்துள்ளது. அவனது உடம்பையும், கட்டுறுதியையும் பார்த்த மாத்திரத்தில்



"நீதான் 'ஹீரோ'" என்று கூறிவிட்டார் டைரக்டர். சொன்ன கையோடு அஞ்சு லட்சம் சம்பளம் பேசி ஐம்பதாயிரம் முன்பணமும் கொடுத்துவிட்டார்.

நந்துவுக்கும் என்ன செய்வது என்றே தெரியவில்லை. முதல் காரியமாக நங்கநல்லூரில் இருக்கும் ஆஞ்சநேயரைப் போய் கும்பிட்டுவிட்டு வந்தான். அடுத்தது மாங்காடு காமாட்சி, பிறகு மயிலாப்பூர் கபாலீசுவரர் என்று சந்நிதி சந்நிதியாக ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறான். அவன் 'ஹீரோ'வாகிவிட்டது தெரிந்து ஓடி வந்தாள் நளினி. முதல் காரியமாக எல்லா சாமி பிரசாத விபூதிகளையும் நெற்றியில் இட்டு முடித்தாள். கிட்டத்தட்ட அதிலேயே பாதி பண்டாரமாகிவிட்டான்.

அப்படியே திருஷ்டி கழித்தவள், "என் நந்து இனிமே 'ஹீரோ'..." என்றாள் புன்னகையுடன்.

"இனிமே இல்லை... நான் எப்பவும் 'ஹீரோ'தான்..." என்றான் நந்து.

"ஆமா, பெரிய 'ஹீரோ'... எங்க என்கூட ஒரு கி.மீ. வெயில்ல நடந்து வாங்க பார்ப்போம்."

"எதுக்கு... தேவையில்லாம உடம்பைக் கருக்க வெச்சுக்கணும் நளினி?"

"ஒரு கிலோமீட்டர் நடந்தாலெல்லாம் கருக்காது 'ஹீரோ' சார்..."

"ஆளை விடு... நான் இப்படி பார்த்துப் பார்த்து உடம்பை வெச்சுக்கிட்டு இருக்கறதாலதான் டைரக்டர் என்னை 'ஹீரோ' ஆக்கி இருக்கார். அதை நீ ஞாபகம் வெச்சுக்கோ..." என்றவன், 'ஹாரன்' சப்தம் கேட்டு வாசல் பக்கம் பார்த்தான்.

பட கம்பெனியின் கார் வந்திருந்தது.

"வண்டி வந்துடிச்சு. நான் புறப்படுறேன்" – என்றபடி நடந்தவன்... நேராக தாய் சாந்தலட்சுமி, அப்பா அனந்தகிருஷ்ணன் காலில் விழுந்து எழுந்தான். அவர்களும் ஆசீர்வதித்து அனுப்பி வைத்தனர். மிடுக்காகப் போய் காரில் அமரவும்... காரும் புறப்பட்டது. நளினி

'டாட்டா' காட்டி அனுப்பிவிட்டு உள்ளே வந்தாள்.

"அத்தை... மாமா..." என்றபடியே சாந்தலட்சுமியையும், அனந்தகிருஷ்ணனையும் நெருங்கினாள்.

"நளினி... ஒரு நல்ல காப்பி போட்டுக் கொண்டு வந்து கொடேன்..." என்றபடி அன்றைய நாளிதழைக் கையில் எடுத்தார் அனந்தகிருஷ்ணன்.

சாந்தலட்சுமி முறைத்தாள்.

"போதும் சாந்தா... அப்படியெல்லாம் பார்க்காதே! அப்புறம் கண்ணு முழி தெறிச்சு விழுந்து 'ஆபரேஷன்' பண்ற அளவுக்கு போயிடப் போகுது. நளினி எப்பவும் சூப்பரா காப்பி போடுறவ. உன்னை மாதிரி கழுநீர்த் தண்ணியில போடுறவ இல்ல அவ..." என்று மனைவியை ஒரு வாரு வாரினார்.

சாந்தலட்சுமி அதற்காகக் கோபித்துக்கொள்ளவில்லை.

அவளுக்குத் தெரியும் – அவர் ஜாலியாக பேசுகிறார் என்பது. நளினியும் ஒருவித கர்வத்தோடு அத்தை, மாமாவுக்கு காப்பி போட்டு எடுத்து வந்து நீட்டினாள்.

"ஏம்மா... இன்னிக்கு காலேஜ் இல்லையா?"

" 'ஸ்டடி ஹாலிடேஸ்' அத்தை!"

"அப்ப நிறையவே படிக்கிற வேலை இருக்குன்னு சொல்லு..."

"ஆமா அத்தை... அத்தானுக்கு வாழ்த்து தெரிவிக்கத்தான் அப்பாகிட்ட சொல்லிட்டு ஓடி வந்தேன்."

"வாழ்த்து சொல்றது இருக்கட்டும். நாளைக்கு உன் கழுத்துல தாலி கட்டப் போறவன் ஏதோ பெரிய சினிமா 'சான்சு'ன்னு போயிருக்கான். அப்படியே அந்தப் பக்கமா வளர்ந்து, ஏதாவது நடிகை பின்னால் போயிட்டா என்ன பண்ணுவே?"

– சாந்தலட்சுமி ஆழம் பார்ப்பது போல அப்படியொரு கேள்வியைக் கேட்டதுதான் தாமதம், நளினி முகம்... அனலில் வாட்டிய வாழை இலை போல ஆகிவிட்டது.



செய்திகளுக்குள் ஊர்ந்தபடியே அனந்தகிருஷ்ணனும் கவனித்தார். "அவளை எதுக்கு சாந்தா சீண்டறே? உன் பையன் முதல்ல 'ஸ்கிரீன் டெஸ்ட்'ல 'பாஸ்' ஆகி– படத்துல நடிச்சு முடிச்சு– அந்தப் படமும் 'ரிலீஸ்' ஆகட்டும். அதுக்கப்புறம் அவனை ஜனங்க ஏத்துக்கறதுன்னு அடுத்த கட்டம் ஒண்ணு இருக்கு. அதுக்குள்ள அவன் 'ஹீரோ' ஆகிட்ட மாதிரி கனா காணாதே..."

"என்ன நீங்க... இத்தனை சாதாரணமா சொல்லிட்டீங்க! ஜாதகப்படி அவனுக்கு சுக்கிர திசை ஆரம்பம். அதுவும் இருபது வருஷத்துக்கு. நல்ல திசை ஆரம்பிக்கவும், சினிமா 'சான்ஸ்' வரவும் சரியா இருக்கு பாருங்க. சினிமா துறையும் சுக்கிரனோட துறைதானே! என் மகன் நிச்சயம் ஜெயிப்பான். நீங்க வேணா பாருங்க..." என்று தன் கருத்தில் தீவிரத்துக்குப் போனாள் சாந்தலட்சுமி.

"பாப்போம், பாப்போம்... உன் பையன் 'சூப்பர் ஸ்டாரா' வர்றானா, இல்ல விரல் சூப்புகிற 'ஸ்டாரா' வர்றானான்னு" – அனந்தகிருஷ்ணன் ஏனோ நம்பிக்கை இல்லாதவராகவே பேசினார்.

"ஏன் மாமா... அவர் ஜெயிப்பாருன்னு உங்களுக்குத் தோணமாட்டேங்குது...?" என்று நளினியும் வக்காலத்து வாங்கிக்கொண்டு முன்னே வந்தாள்.

"அம்மாடி... எல்லாரும் முதல்ல 'பாசிடிவா திங்க்' பண்ணி கடைசியில 'நெகடிவுக்கு' போவாங்க. நான் அப்படி இல்லை. எனக்கு எல்லாமே முதல்ல 'நெகடிவ்'தான்.

அதுலேயும் சினிமாதுறை பற்றி நான் கேள்விப்பட்ட அளவுல சொல்றேனே... அது அஞ்சு தலை நாகம் மாதிரி. அதன் மேல கிருஷ்ணனா இருந்தாத்தான் ஆட முடியும். இல்லேன்னா அது ஆட்டிப்புடும். நீ ஜெயிச்ச சிலரைத்தான் பார்க்கறே... ஜெயிக்க முடியாம போன பலரைப் பார்த்தவன் நான். கூட்டத்துல சும்மா ஜனங்களோடு ஜனமா கிடக்கணும்னா அதுக்கு ஒரு வழிமுறை இருக்கு. அதுல போய் தப்பி தவறி நின்னுட்டே... நீ சாகற வரை கூட்டத்துல நின்னே அழிஞ்சு போக வேண்டியதுதான்.

உன்னைப் பாராட்டி மேலே கொண்டு வரவே மாட்டாங்க.

அதேபோல உன் முதல் படம் 'அவுட்'டுன்னா... வாழ்க்கையும் 'அவுட்'. உன்னை ஒரு பயகூட 'செண்டிமெண்ட்'டா திரும்பிப் பார்க்கமாட்டான். கிட்டத்தட்ட அது ஒரு சூதாட்டம். ஒருத்தர் ஜெயிக்கறதுக்காக 999 பேர் தோக்கற கதை..."

அனந்தகிருஷ்ணன் ஒரு விரிவுரையே கொடுத்து முடித்துவிட்டார். நளினிக்குக்கூட அவர் பேச்சில் நிறைய பொருள் இருக்கிற மாதிரிதான் தோன்றிற்று. ஆனால், சாந்தலட்சுமி காதிலேயே வாங்கிக்கொள்ளவில்லை. 'என் மகன் நிச்சயம் பெரிய 'ஹீரோ'தான்' என்றபடியே காப்பியை உறிஞ்சினாள்.

அது ஆறிப் போயிருந்தது.

"சரி அத்தை... நான் கிளம்பறேன்"



## விநோத விழா

காஷ்மீர் மாநிலம் லடாக் மாவட்டம் தாணு என்ற இடத்தில் ஒரு பழங்குடி மக்களிடம் விசித்திரமான பழக்கம் இருக்கிறது. ஒரு பெண் தன் விருப்பத்துக்கு எத்தனை ஆண்களை வேண்டுமானாலும் மணந்துகொள்ளலாம்.

மூன்று ஆண்டுக்கு ஒரு முறை ஜூலை, ஆகஸ்டு மாதத்தில் பவுர்ணமியில் ஒரு விழா நடத்துகின்றனர். இந்த விழாவைக் 'கருத்தரிப்பு விழா' என்கின்றனர். அப்போது ஆண்களும், பெண்களும் திறந்தவெளியில் நிலவொளியில் ஒன்று கூடுவார்கள். தாங்கள் தயாரித்த மதுவை அனைவரும் அருந்துவார்கள். வாத்திய இசைக்கு ஏற்ப ஆடிப் பாடுவார்கள். நேரம் ஆக, ஆக போதையும் ஏறும். உடைகள் ஒவ்வொன்றாக குறைந்துகொண்டே போகும். முடிவில் நிர்வாண நடனம் ஆடுவார்கள்.

ஊர் எல்லையில் பலத்த காவல் போடப்பட்டு இருக்கும். இதை மீறி வேறு யாரும் உள்ளே போக முடியாது. இந்த இனத்தில் மொத்தம் மக்கள் தொகை வெறும் 500-க்கும் குறைவே!

- ஆர்.ஆர்.பூபதி, திண்டுக்கல்.



என்ற நளினி– காப்பி தம்ளர்களை எடுத்துச் சென்று சமையலறை 'வாஷ் பேசினில்' போட்டுவிட்டு– சுடிதாரின் துப்பட்டா முந்தியில் கைகளைத் துடைத்தபடியே கிளம்பினாள்.

"நளினி... உன் அப்பனை அப்புறமா வரச் சொல். 'நிச்சயதார்த்தத்துக்கு நாள் குறிச்சிட்டு வாடா'ன்னு சொல்லி இருந்தேன். சட்டுப்புட்டுன்னு அதை முடிக்கற வழியைப் பார்ப்போம்..." என்று முன்பே பேசி வைத்திருந்ததை திரும்ப ஞாபகப்படுத்தினாள்.

நந்து, நளினிக்கு சொந்த அத்தை மகன். இளம் வயதிலேயே 'இவனுக்கு அவள் – அவளுக்கு இவன்' என்று முடிவு செய்தாகிவிட்டது. இன்று வரை அதில் பழுதில்லை.

போன மாதம்தான் இருவருக்கும் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தாள். நிச்சயத்துக்கு நாள் பார்க்கவும் சொல்லிவிட்டாள் சாந்தலட்சுமி.

அன்று முதலே நளினியும் கனவு காணத் தொடங்கிவிட்டாள்.

"நம்ம கல்யாணத்துல துளிகூட 'திரில்'லே இல்ல. பிறந்ததுல இருந்தே உன்னை எனக்குத் தெரியும், என்னை உனக்குத் தெரியும். சுத்த போர்..." என்று நந்தகுமார்கூட 'கமெண்ட்' அடித்திருந்தான்.

வெளியே இருசக்கர வாகனத்தைக் கிளப்பும்போது அது ஞாபகத்தில் வந்தது.

எல்லாமே வழக்கம் போல் நடந்தது.

துளியும் எதிர்பார்க்காத ஒரு விஷயம் இந்த 'ஹீரோ சான்ஸ்'! நளினி, வீதியில் போகும்போது சினிமா பட 'போஸ்டர்'களை பார்த்துக்கொண்டே சென்றாள். 'எல்லோருமே பல ஆண்டுகளாக அந்த கனவுத் தொழிற்சாலையில் இருப்பவர்கள். இவர்களைப் புறம் தள்ளிக்கொண்டு நந்துவால் முன்னுக்கு வர முடியுமா?'

சற்று தயக்கமாக தெரிந்தது. அனந்தகிருஷ்ணன் சொன்ன மாதிரி முதல் படம் ஓடினால்தான் 'ஹீரோ'. இல்லாவிட்டால் 'ஜீரோ' அல்லவா?

## 2

வழியிலே ஒரு திண்ணை மேல் மரவட்டை போல சுருண்டு படுத்திருந்தார். அவரைச் சுற்றி ஒரு கூட்டமே நின்றுகொண்டிருந்தது. அதில் பலர் 'வி.ஐ.பி.'கள். நந்துவும் காரை நிறுத்தச் சொன்னான். அவர் தன்னைப் பார்த்துத் திட்டினால், தனது 'ஹீரோ' முயற்சி வெற்றி அடைந்துவிடும் என்று அவனுக்குள்ளும் ஒரு குட்டி நம்பிக்கை. முதலில் அவரை ஒரு பிச்சைக்காரனைப் போலத்தான் கருதினான். ஆனால் தேவை என்று வரும்போது கொள்கை பின்னால் போய்விட – ஆசை முன்னால் வந்துவிடுகிறதே!

அவரும் மெல்லக் கண் விழித்தார். எல்லோரையும் ஒதுக்கிவிட்டவராக நந்துவைப் பார்த்தவர் புன்னகையோடு ஆசீர்வாதம் செய்தார்.

நந்துவுக்குக் குழப்பமாகிவிட்டது. அவர் வரையில் திட்டினால்தானே நல்லது?

அந்தப் பட கம்பெனி அலுவலகத்துக்குள் அவன் நுழைந்தபோது வாசலிலேயே காத்திருந்தார் தயாரிப்பாளரின் உதவியாளர்.

"வாங்க சார்... வாங்க" – என்று மரியாதையாக அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார்.

அலுவலகம் கண்ணைப் பறித்தது. தரையே தெரியாதபடி 'கார்ப்பெட்' விரிப்பு. சிலுசிலுவென்று 'ஏ.சி.'! மெத்தென்று புஷ்டியான சோபாக்கள். சுவரில் சதுர சதுரமாக கண்ணாடிகள்.

உள்ளே நுழைந்த நொடி– நந்தகுமார், கண்ணாடியில் அவனது பிம்பங்களைப் பார்த்து கொஞ்சம் இறுமாந்துபோனான்.

"உட்காருங்க சார்... டைரக்டர் இப்ப வந்துடுவார்..." – என்று சொல்லிவிட்டு, உதவியாளரும் ஒரு கண்ணாடியைத் தள்ளிக்கொண்டு மறைந்து போனார். அவர் அப்படிப் போன பிறகுதான் தெரிந்தது – அது கண்ணாடியால் ஆன கதவு என்பது.

ஒரு நந்தகுமாருக்கு நாலு நந்த குமாருடன் அவனும் அங்கே அமர்ந்தான். மனதுக்குள் ஒருவித மெல்லிய படபடப்பு.



'நாயகியாக தன்னுடன் நடிக்கப்போவது யாராக இருக்கும்? பழைய நடிகையா... இல்லை அவளும் புதுமுகமா? சண்டைக் காட்சிகளில் 'டூப்' போட வேண்டியது இருக்குமா? இல்லை, நிஜமாவே சண்டை போடச் சொல்வாரா டைரக்டர்?'

இப்படி அவனுக்குள் பலவித எண்ண ஓட்டம்.

டைரக்டரும்... "ஹாய், யங் மேன்!" என்றபடி காற்று போல் உள்ளே நுழைந்தார். நந்து எழுந்து நின்றான்.

" 'நோ பார்மாலிட்டி'. உட்காரு முதல்ல..."

"............"

"சரி... நில்லு. நீ பண்ணப் போகிற இந்தப் படமும் நிக்கணும்..." – என்று, தான் எழுதும் 'டயலாக்' போலவே பேசினார்.

பதிலுக்கு அமர்த்தலாகச் சிரித்தான் நந்து. அப்போது உதவி இயக்குநரும் உள்ளே நுழைந்தார். அவரது அக்குளில் ஒரு கோப்பு.

"சார்... தியேட்டர் ரெடி" என்றார்.

"வா நந்து... போகலாம்" என்று அவனை கிளப்பிக்கொணடு நடந்தார் டைரக்டர். உதவி இயக்குநர் சொன்ன 'மேக்கப் தியேட்டர்' ஜிலுஜிலு ஏ.சி.யோடு ராட்சத கண்ணாடி– சிம்மாசனம் போன்ற சுழல் நாற்காலியுடன் காட்சி தந்தது. நந்துவுக்கு ஏதோ ஒரு புதிய உலகத்துக்குள் 'விசா– பாஸ்போர்ட்' இல்லாமல் நுழைந்துவிட்ட மாதிரி இருந்தது.

"உட்காருங்க..." என்றார் டைரக்டர்.

உட்கார்ந்தான். 'மேக்கப்' செய்பவனிடம் ஏதோ 'இன்ஸ்டிரக்ஷன்' தந்தார். அவரும் தலையாட்டிவிட்டு வந்து நந்துவின் கன்னத்தைப் பார்த்தவர், "சாமி கும்பிட்டுருவோமா?" என்று கேட்டவராக ஒரு தேங்காய் மேல் கற்பூரத்தை வைத்து ஏற்றியபடி எடுத்து வந்தார்.

'மேக்கப்' கண்ணாடியையும், நந்துவையும் ஒரு சுற்று சுற்றியவர் அப்படியே உதவியாளரிடம் அந்தத் தேங்காயைத் தந்துவிட்டு கைகளைக் கூப்பி வணங்கி முடித்தார்.

"முதல் முதலா உங்களுக்கு 'மேக்கப்' போடுறேன். நீங்களும் நல்லா வரணும். எனக்கும் நிறைய வாய்ப்பு வந்து, தொழில் அமோகமா நடக்கணும்" என்று பேசிக்கொண்டே மெத்து மெத்தென்ற 'ரோஸ் பவுடர் ஸ்பாஞ்சை' எடுத்து நந்து முகத்தில் தேய்க்கத் தொடங்கினார். ஒவ்வொரு ஆணுக்கும் முடி வெட்டும்போது அப்படியே தூங்கிவிட ஆசையாகத்தான் இருக்கும்.

உலகில் எவ்வளவோ சுகங்கள்! அதில் பிரதானமான சுகம், சலூனில் கிடைக்கும் இந்தச் சுகம். விலை மாதுக்கள் மிகவும் சிரமப்பட்டால்கூட இப்படியொரு சுகத்தை தர முடியாது. அதிலும் இரு கைகளின் பத்து விரல்களால் தலையைக் கழுவி– அப்படியே கீறிவிட்டு பிரித்து– பின் சீப்புக்குள் அதை அடக்கி உயர்த்திப் பிடித்து 'சர்ரக், சர்ரக்' என்று கத்தரியால் வெட்டும்போது அப்படியே நாள் முழுக்க இருக்கலாமா என்றிருக்கும்.

இங்கேயும் கிட்டத்தட்ட அப்படித்தான் இருந்தது. சுமாராக ஒரு மணி நேரம் வரை செயல்பட்டு நந்தகுமாரின் புருவம், மீசை என சகலத்தையும் மாற்றி... முகத்திலும் ஒரு புதிய ஒளியை உருவாக்கி– கண்ணாடியில் பார்க்கச் சொன்னபோது, நந்தகுமாரே அவரிடம் கேட்டான்... "யாருங்க இது?"

'மேக்கப்மேன்' சிரித்தார். டைரக்டரும் வந்து பார்த்தார். அப்படியும் இப்படியுமாக பல கோணங்களில் நின்று கவனித்தார். இறுதியாக "சூப்பர்" என்றார்.

'மேக்கப் மேனும்' பெருமூச்சுடன், "சார்... தப்பிட்டீங்க. நீங்கதான் 'ஹீரோ'..." என்றார்.

"அப்படி சொல்லித்தான் ஐம்பதாயிரம் பணமும் கொடுத்துட்டாரே...!"

"நீங்க வேற... 'ஷூட்டிங்' நடந்த நிலையில ஒருத்தரை போகச் சொல்லிட்டாரு. இது..."

"அய்யய்யோ... அப்படியெல்லாம்கூட நடக்குமா?"

"ஆமா... ஆள் அழகா இருந்துட்டா ஆச்சா. நடிப்பு வரணுமில்ல? பொம்மை மாதிரி நின்னுக்கிட்டிருந்தா யார் வந்து நடிப்பா...?"



## NOTICE

Statement of ownership and other particulars about "RANI MUTHU", CHENNAI.

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | 86, Periyar High Road, Chennai - 600 007. |
| 2. Periodicity of its Publication | : | Fortnightly |
| 3. Printer's Name | : | C. KALYANASUNDARAM |
| Nationality | : | Indian |
| Address | : | 86, Periyar High Road, Chennai - 600 007. |
| 4&5. Name of Publisher & Editor | : | R. BASKARAN |
| Nationality | : | Indian |
| Address | : | 86, Periyar High Road, Chennai - 600 007. |
| 6. Name and address of the Owner | : | M/s. Rani Syndicate, 86, Periyar High Road, Chennai - 600 007. |

I, R. BASKARAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 1-3-2014

Sd/- R. BASKARAN,
Publisher.

'மேக்கப் மேன்' எதார்த்தத்தை சொல்லி மிரட்ட, நந்துவுக்குள் கொஞ்சம் வயிற்றைக் கலக்கியது.

'ஒருவேளை தனக்கும் அப்படியொரு நிலை வந்துவிட்டால்...?' – பயந்துகொண்டே அடுத்தக்கட்டமான 'போட்டோ செஷனு'க்குத்

தயாரானான். அதற்கு முன்பாக 'மேக்கப் மேனின்' உதவியாளன் ஒருவன் வந்து நந்தகுமாரை அப்படியும் இப்படியுமாகப் பார்த்தான். பிறகு சற்றுத் தள்ளி சென்று ஒரு பெட்டியை எடுத்து வந்தான். அப்படி வரும்போது திடீர் பார்வை பார்த்தான். பின்



## உண்மை

பாலைவனங்கள் சுடுமாம்
உன் பார்வைகளைவிடவா?
வானவில் பேரழகாம்
உன் தோற்றத்தைவிடவா?
புதுக்கவிதைகள் சுகமாம்
உன் வார்த்தைகளைவிடவா?
எத்தனை பொய்
சொல்கிறார்கள்
பார் அன்பே!

– முத்து ஆனந்த், தொரப்பாடி.

அவனிடம், "எப்பவும் மீசையை இப்படித்தான் வெச்சுக்குவியா?" என்று கேட்டான்.

"ஆமாம்... ஏன் கேட்கிறீங்க?"

"இல்ல... உனக்கு சதுர மூஞ்சி. இப்படி மீசை வெச்சா சுமாராத்தான் இருக்கும். கீழ சின்னதா ஒரு பிரெஞ்சு தாடி வெச்சா பெரிய அறிஞர் 'லுக்'... இந்த முகத்துக்கு வந்துடும்" என்றவன் பெட்டியைத் திறந்தான். உள்ளே நிறைய 'மேக்கப்' சாதனங்கள், ஏராளமான பிரஷ்கள், கத்தரிக்கோல், 'லோஷன்'கள், ரோஸ் பவுடர், குட்டி மீசைகள், கிருதாக்கள்...

மனிதனைத் தலைகீழாக மாற்றும் ஓர் உலகமே அதற்குள் அடங்கி இருப்பதை அப்போதுதான் பார்த்தான் நந்தகுமார்.

கொஞ்சம் பட்டிக்காட்டான் போலவும் தன்னை உணர்ந்தான். வந்தவனோ வேலையை ஆரம்பித்துவிட்டான். "சட்டையைக் கழட்டிட்டு வந்து அந்த நாற்காலியில உக்காருங்க" என்றான்.

நந்தகுமாரும் அப்படியே செய்தான்.



"நான் நடிகர் திலகத்துக்கே 'மேக்கப்' போட்டவன்...!" என்றபடியே, நாற்காலியில் அமர்ந்துவிட்ட நந்துவின் தலையில் கை வைத்து முடியை கோதிவிட்டான். பின் விரல்களால் அளந்துவிட்டு வேலை காட்டத் தொடங்கினான்.

அரை மணி நேரத்தில் நந்தகுமார் தலைகீழாக மாறிவிட்டான். அவனுக்கே அவன் முகத்தைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. புதிதாக ஒரு ஜென்மம் எடுத்துவிட்டது போல்கூட உணர்ந்தான்.

"இது பெரிய 'பட்ஜெட்' படமாம்... வெளிநாட்டுலல்லாம் போய் செலவழிச்சு எடுக்கப்போறாங்க. படம் 'ஹிட்'டானா நீ பெரிய அளவு கல்லா கட்டிடலாம். அப்புறமா இந்த ஹைதரை ஞாபகத்துல வெச்சுக்குவியா?"

"உங்க பேர் ஹைதரா?"

"சரிதான். 'டைட்டில்' பார்க்கற பழக்கமில்லையா?"

"பார்ப்பேன். அதுல ஆயிரம் பேர்கள் வருது. எல்லாமா ஞாபகத்துல

## நட்பு

உடனுறை நண்பனாம்...
திரி கருகுகிறதே என்று
மெழுகு உருகுகின்றது...!

– வி.கே.வெங்கடேசன், பெங்களூர்.



இருக்குது...?"

"அதுவும் சரிதான். இப்ப சொல்றேன் கேட்டுக்கோ. ஒரு சினிமா உருவாக குறைந்தபட்சம் எண்பத்து அஞ்சு பேர் –அதிகபட்சம் நூத்தி பத்து பேர் வேணும். இதுல முதல் பத்துல வர்றவங்க 'மேக்கப் மேன்ஸ்'. நாங்க பார்த்து கிழவியைக் குமரியாக்குவோம். குமரியைக் கிழவி யாக்குவோம். உனக்கு நடிகை நங்கைஸ்ரீயைப் பிடிக்குமா?"

"ம்... 'கிளாமர் ஆர்ட்டிஸ்ட்' ஆச்சே, பிடிக்காம போகுமா?"

"அதெல்லாம் டுபாக்கூர். அவளுக்கு மார்புகூட கிடையாது. எல்லாம் என் ஏற்பாடு. ஒரு 'பிரா' இருக்கு. அதோட விலை பதினேழாயிரம் ரூபாய். அதைப் போட்டா யாரா இருந்தாலும் இருபது வயசைக் குறைச்சிடும்..."

"அப்ப இருபது வயசுப் பொண்ணு போட்டா பிறந்த குழந்தையாயிடுவாளா?" – நந்தகுமார் 'ஜோக்' அடித்தான்.

சிரித்தான் ஹைதர் என்கிற அந்த 'மேக்கப் மேன்'.

இறுதியாக 'மேக்கப்' முடிந்து ஒரு நோட்டை எடுத்து நீட்டினான்.

"என்ன இது?"

"அன்பளிப்பு... எனக்கு எவ்வளவு தருவேன்னு எழுது..."

"அன்பளிப்பா...?"

"ஆமா... நான் 'மேக்கப்' போட்ட இந்த முகத்தைத்தான் 'போட்டோ' எடுக்கப் போறாங்க. இதே முகத்தோட நீ நடிச்சு ஜெயிச்சா நான்தானே காரணம்?"

"ஜெயிச்ச பிறகு பேசிக்குவோம்..."

"அப்ப பேச்சு மாறிட்டா...?"

"அதெல்லாம் மாறமாட்டேன். இதென்ன புதுவித வசூல் முறையா இருக்கு?" – என்றான். பிறகு 'போட்டோ' எடுக்கப்படும் இடத்துக்கு அழைத்து வரப்பட்டான். அங்கே அவனுக்கு ஆடைகளை போட்டுப் பார்த்தனர். கிட்டத்தட்ட இருபது 'பேண்ட்– சர்ட்'களைப் போட்டுக் கழட்டினான். கை, கால் அலுத்துவிட்டது. கழட்டிப் போட்ட அவ்வளவும் ஒரு 'ரெடிமேடு' கடைச் சரக்கு. அதைக் கொடுத்தவனே எடுத்து மடித்து வைத்துக்கொண்டான். இறுதியில் ஒரு உடை ஓ.கே. ஆகவும், "இதை கடைக்கே கொண்டு போயிடுங்க" என்றான்.

"அதை எல்லாம் என்ன பண்ணுவீங்க?"

"குப்பையிலயா போட முடியும்? துணியோட துணியா கலந்து தள்ள வேண்டியதுதான்..."

"அய்யோ... வாங்கறவங்க..."



"நீங்க வந்த வேலையைப் பாருங்க..."

நந்தகுமார் முகத்தில் பல கோணங்களில் வெளிச்சம் வந்து விழுந்தது. வரும் வெளிச்சத்தை வடிகட்டும் 'பில்டர்'களை சிலர் பிடித்துக்கொள்ள... ஒரு படம் எடுக்க இவ்வளவு கூத்தா என்று தோன்றியது.

இறுதியாகப் படம் எடுக்கப்பட்டு– அதை கம்ப்யூட்டர் திரையில் போட்டுப் பார்த்தபோது, நந்தகுமார் 'ஹீரோ'வாக உறுதி செய்யப்பட்டான். அதுவரை அவன் கண்ணில்பட்டிராத தயாரிப்பாளர் என்பவர் சரேலென்று அவன் முன் பிரசன்னமாகி கை குலுக்கி வாழ்த்து சொன்னார்.

"தம்பி... உங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. கடுமையா உழைச்சா தமிழ்நாட்டுல நீங்க இருபது, இருபத்தி அஞ்சு வருஷம் ஜமாய்க்கலாம். 'ஹீரோ'ன்னா ரசிகர்களை பைத்தியம் புடிக்க வைக்கணும். அப்படியே மின்சாரம் மாதிரி நிக்கணும்"– என்று அவரும் தனக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்லி கம்பெனி காரிலேயே அனுப்பி வைத்தார்.

நந்தகுமாருக்கு எல்லாமே வித்தியாசமான– புதிய அனுபவங்கள். 'மேக்கப்'பைக் கலைத்துக்கொள்ளாமல் அப்படியே அப்பா– அம்மா எதிரில் போய் நின்றான். இருவருமே மிரண்டுதான் போனார்கள்.

"நந்தா... நீயாடா?"

"நானேதான்... இந்த அவதாரப்படி என் பேர் கண்ணா..."

"அய்யோ... எவ்வளவு அழகாக இருக்கேடா நீ..."

"காரணம்... 'மேக்கப்மேன்'ங்கற பிரம்மா. அம்மைத் தழும்புல இருந்த கரும்புள்ளி வரை சகலத்தையும் அவரது 'பிரஷ்' வாரிக் கொட்டிடும்..."

"உண்மைதான்... இப்பவே நீ இவ்வளவு அழகா இருக்கியே... உன்னோட படம் ஜெயிச்சு இன்னும் பிரபலமானா எவ்வளவு ஜோரா இருக்கும்?"

"நீதான் சொல்லிட்டியேம்மா... இனி சுக்கிரதிசை! இருபது

வருஷம் என் ராஜ்ஜியம்தான்...” – கித்தாப்பாகக் காலரைத் தூக்கி விட்டுக்கொள்ள, தொலைபேசி கூப்பிட்டது.

சாந்தலட்சுமி போய் எடுத்தாள். மறுமுனையில் நளினி.

“அத்தை! அவர் வந்துட்டாரா?”

“ம்... இப்ப நீ அவனைப் பார்த்தே... அசந்து போயிடுவே...”

“அப்படி என்ன பண்ணி இருக்காரு?”

“அவன் இப்ப ‘ஹீரோ’ மேக்கப்’ல இருக்கான்டி.. வர்றியா...? வந்து பாரு...”

“அவர்கிட்ட கொடுங்க...” – அவள் சொல்ல, ‘ரிசீவர்’ இப்போது நந்தகுமார் காதுக்கு மாறியது.

“சொல்லு நளினி!”

“என்ன சார்... போட்ட ‘மேக்கப்’பை கலைக்க மனசு வரலையா?”

“இதைக் கேட்கத்தான் போன் பண்ணினியா?”

“போன காரியம் என்ன ஆச்சுன்னு தெரிஞ்சுக்கத்தான்...”

“இனி எனக்கு சுக்கிரதிசை நளினி. பின்னு பின்னுன்னு பின்னப் போறேன். வெளிநாட்டுக்கெல்லாம் போகப்போறேன்...”

“அடிடா சக்கைன்னானாம்... அப்புறம்?”

“என்ன அப்புறம், விழுப்புரம்னுகிட்டு... இப்ப பேசற மாதிரி அப்பல்லாம் என்கூட பேச முடியாது... தெரிஞ்சுக்கோ...”

“என்ன... பீலா விடுறீங்களா?”

“சரி நளினி... நீ ரொம்ப அறுக்கறே... வை!” – என்று போனை ‘கட்’ செய்தான். பார்த்தபடி இருந்த சாந்தலட்சுமியும், அனந்தநாராயணனும்கூட அவன் அலட்டிக்கொள்வது போலத்தான் கருதினார்கள்.



# தகவல் துளிகள்





முன்னாள் இந்திய ஜனாதிபதியாகிய அப்துல்கலாம் சிறந்த வீணை கலைஞரும் ஆவார்.

உலகப் புகழ் பெற்ற மோனாலிசா ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.

எப்போதும் காற்று வீசும் திசையிலேயே தலை வைத்துப் படுக்கும் மிருகம் நாய்.

தேசியக் கொடியை முதல் முதலில் உருவாக்கிய நாடு டென்மார்க் 1219ல் உருவாக்கியது.

எறும்புகள் உணவு இல்லாமல் 100 நாட்கள் வாழும்.

ஒரு பென்சிலைக் கொண்டு 58 கி.மீ நீளமான கோடு போடலாம்.

பாம்புகளுக்கு கேட்கும் சக்தி கிடையாது.

நண்டிற்கு தலை கிடையாது. அதன் பற்கள் வயிற்றில் இருக்கும்.



வெள்ளை என்பது ஒரு நிறம் இல்லை. அது ஏழு வர்ணங்களின் கலவை.

முற்றிப் பழுத்து காய்ந்த தேங்காய், மரத்திலிருந்து பகலில் விழாது இரவில்தான் விழும்.

நமக்கு உடல் முழுவதும் வியர்க்கும். ஆனால் நாய்க்கு நாக்கில் மட்டுமே வியர்க்கும்.

சிலந்திப் பூச்சிக்கு எட்டுக் கண்கள் உண்டு.

இறாலுக்கு இதயம் தலையில் இருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் ரெயில் கிடையாது.

இந்தியாவில் தமிழில்தான் ‘பைபிள்’ முதலில் மொழி பெயர்க்கப்பட்டது.,

ஆண் சிங்கம் சாப்பிட்ட பின்னரே பெண் சிங்கம் சாப்பிடும்.

வாத்து அதிகாலையில் மட்டுமே முட்டையிடும்.

கத்தரிக்காயின் தாயகம் இந்தியாதான்.

பிரேசில் நாட்டு தேன் கசக்கும்.

உலகில் கடற்கரை இல்லாத நாடுகள் 26 ஆகும்.

அமெரிக்காவை விட சகாரா பாலைவனம் பெரியது.

– ரிபாத்துன்னிஷா தமீம்,
திருமங்கலக்குடி.

வித்யா சுப்ரமணியம் எழுதிய 'பூங்கதவே தாழ் திறவாய்' நாவல் அருமை. கதாநாயகி சுகன்யாவின் தன்னம்பிக்கை பாராட்டுக்குரியது. ஆண்கள் கோழையாக இருப்பதால் அவதிப்படுவது பெண்கள்தான் என்பதை வெளிப்படுத்தியது.

*– ராஜி, சேலம்.*

கொடுமைக்கார மாமியார்– அவள் பேச்சைக் கேட்டு நடக்கும் கோழை கணவன்– அப்பாவி மனைவி... இவர்களின் வாழ்வு எவ்வாறு சீர்கெட்டுப் போகும் என்பதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியது.

*– ம.வசந்தா,*
*கச்சிராயபாளையம்.*




அதிகாரம் செய்தே பழக்கப்பட்ட மாமியார் வர்க்கத்துக்கு இக்கதை ஒரு சாட்டையடி!

*– வி.எஸ்.மோகன், மதுரை.*

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்த கதையோட்டம்.

*– வெ.லட்சுமிநாராயணன்,*
*வடலூர்.*

# சாட்டையடி!

கதையின் ஒவ்வொரு வரியிலும் இனம் தெரியாத பிடிப்பு தென்பட்டது.

*– இரா.வளையாபதி,*
*தோட்டக்குறிச்சி.*

பொறுமையே பெண்களுக்கு பெருமை சேர்க்கும் என்பதை அழகாக விளக்கியது.

*– எஸ். விஷ்ணுபிரியன்,*
*கொடுமுடி.*

மயில் இறகால் மெலிதாக இதயத்தை வருடிய உணர்வு ஏற்பட்டது.

*– பிரபாலிங்கேஷ்,*
*மேலகிருஷ்ணன்புதூர்.*

உமா கல்யாணியின் 'ஒற்றை மனுசி' சிறுகதை 'சூப்பர்'.

*– எம்.சம்பத்குமார்,*
*ஈரோடு.*

உங்கள் கருத்துகளை அனுப்ப வேண்டிய முகவரி:
**இதயம் பேசுகிறது,**
**'ராணி முத்து', சென்னை– 600007.**



## 3

எப்பொழுதும் நாம் வாழ்ந்தபடி இருக்கும் தருணமே உண்மையானது. எப்படி வாழ்கிறோம் என்பதுதான் நினைவில் பதிவாகி... இறந்த காலமாகவும், எதிர்காலமாகவும் தொடர்கிறது. ஒவ்வொரு நொடியையும்... நேற்று– நாளை என்கிற எண்ணங்களின்றி எவர் ஒருவர் அனுபவித்து வாழ்கிறாரோ அவரது முக்கால பரிமாணமும் வெற்றிகரமான ஒன்றாகத்தான் இருக்கும்.

ஆனால், அப்படி வாழத்தான் வாழ்க்கை விடாதே...?

நந்துவைப் பார்க்க வண்டியில் புறப்பட்ட நளினியை அந்தப் பிச்சைக்கார சாமியார் பார்த்துச் சிரித்தவராக, "விடாதே... அவனை விடாதே.. அந்தப் பக்கமா போக விடாதே..." என்றார்.

"எந்தப் பக்கமாக...?"

அவளுக்குப் புரியவில்லை!

அன்று படத்திற்கான பூஜை.

'ஸ்டுடியோ'வை வளைத்துக் கட்டி தோரணம், வாழை மரம் என்று அசத்தி இருந்தார்கள். 'கட் அவுட்', வரவேற்பு வளையங்களுடன் ஒரே ஆரவாரமாக இருந்தன. ஸ்டுடியோவின் தொடக்கத்தில் இருந்தே சரியான கூட்டம். நந்தகுமார் முழு 'மேக்கப்'பில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்க... அவன் மேல் 'கேமரா'க்களின் வெளிச்சம் பட்டுக்கொண்டே இருந்தது.

அவனும் ஏதோ ஒரு புதிய உலகில் தேவகுமாரனாகத்தான் ஆகிவிட்டது போல கருதி அமர்ந்திருந்தான்.

பூஜைக்கு அவன் அப்பா– அம்மா, நளினி என்று எல்லோரும் வந்திருந்து பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருந்தனர்.

சற்றைக்கெல்லாம் பிரபல கவர்ச்சி நடிகை ஒருத்தி வந்தாள். மேலே இரண்டு 'கர்ச்சீப்'பில் 'ஜாக்கெட்' தைத்துப் போட்டிருந்தாள். மைதானம் போல அப்படியொரு காற்றோட்டம்.

நந்தகுமாருக்கு வைத்த கண்ணை எடுக்க முடியவில்லை.

கும்மென்ற 'பெர்ப்யூம்' வாசம் வேறு. 'ஜிவ்' வென்றிருந்தது.

அவள் "ஹலோ" சொன்னாள்.

அவனும் சொன்னான்.

அவள் தலைமுடியைப் பின்னவோ; கட்டவோ இல்லை. அப்படியே விட்டிருந்தாள். அது அவ்வப்பொழுது முகத்தின் முன் விழ, ஒதுக்கி ஒதுக்கி விட்டுக்கொண்டாள்.

பார்க்காத மாதிரி பார்த்தான் நந்து.

கூட்டத்தில் இருந்த நளினிக்கும் அவள் தோற்றம் கண்ணைக் கொத்தியது. சாந்தலட்சுமிக்கும் பிடிக்கவில்லை.

"நளினி! இவ என்ன 'பாத்ரூம்'ல இருந்து அப்படியே வந்துட்டாளா... இல்ல, இவ வீட்ல 'ரிப்பன்- ஹேர்பின்'தான் இல்லையா?" என்று கேட்டாள்.

அவளிடமோ எல்லோரும் அருகே வந்து சிரித்து சிரித்துப் பேச, அவள் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். அப்போது மார்பு தளும்பியது. 'போட்டோகிராபர்'கள் அதை அப்படியே அள்ளி எடுத்துக்கொண்டனர்.

நளினிக்கு எழுந்து போய் அவள் மேல் ஒரு போர்வையை போர்த்திவிட்டால் தேவலை என்றிருந்தது.

அதற்குள் பூஜைக்கான வேளை வரவும்... இன்னொரு தலை வாராத ஜென்மம், 'ஜீன்ஸ், டீ- ஷர்ட்'டில் 'மைக்'கைக் கையில் பிடித்தபடி நுனிநாக்கு ஆங்கிலத்தில் நிகழ்ச்சி தொடங்கப் போவதை அறிவித்தது.

எல்லோரும் விரைப்பானார்கள்!

அந்த 'ஜீன்ஸ்' பேசியது.

"இந்தப் படம் ஒரு பிரம்மாண்டமான முயற்சி. ரொம்ப வித்தியாசமா - இளமையான- புதுமையான... இதுவரை யாரும் எடுத்திராத விதத்துல எடுக்கப் போற முயற்சி. புதுமுக 'ஹீரோ' நந்தகுமார் நடிக்கப் போறார். இவர் இதுல நடிக்கறதுக்காகவே அமெரிக்காவுல இருந்து தமிழ்நாட்டுக்கு வந்திருக்கறவருன்னு



தயாரிப்பாளர் சொன்னார். 'ஹீரோ'யினும் நம்ம ஊர் இல்ல... வட இந்தியா. மொத்தத்துல ஒரு கலக்கல் இளமைத் திருவிழாவாக இது இருக்கப்போகுது. அதுல சந்தேகமில்லை..." என்றாள்.

நளினி வாயடைத்துப் போய்விட்டாள்.

சாந்தலட்சுமியைப் பார்த்து, "அத்தை! என்ன இது பயங்கர உடான்ஸ். உங்க பையன் இன்னும் சென்னையிலேயே பல இடங்களைப் பார்த்ததில்ல. இதுல இந்த மனுஷனை அமெரிக்கான்னு அடிச்சு விடுறாளே..." என்றாள்.

"சினிமான்னா கற்பனைன்னும், பொய்யின்னும் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா இவ்வளவு பயங்கரப் பொய்யா இருக்கறதை இப்பதான் பாக்கறேன்" என்றாள்.

அனந்தகிருஷ்ணன் எழுந்துவிட்டார்.

"என்னங்க..."

"நான் கிளம்பறேன் சாந்தா..."

"ஏங்க...?"

"இல்ல... நான் இங்க தொடர்ந்து இருந்தா அப்புறம் ஏதாவது பண்ணிடுவேன். வர்றேன்..."

அவர் விறுவிறுவென்று நடந்தார்.

சாந்தலட்சுமியால் அவரை தடுத்த நிறுத்த முடியவில்லை. நளினியைப் பார்த்தாள்.

"மாமா போறது ஒரு வகையில நல்லதுதான்" என்ற நளினி, "நிகழ்ச்சியைப் பாருங்க..." என்றாள்.

ஐயர் ஒருவர் 'கிளாப்' கட்டை, பிலிம், 'ஸ்கிரிப்ட் பைல்' என்று எல்லாவற்றையும் வைத்துப் பூஜை செய்யத் தயாராகி இருந்தார். பெரிய பூசணிக்காய், தேங்காய் என்று அவரைச் சுற்றி சிலர் பிடித்தபடி நின்றனர்.

'போட்டோகிராபர்'கள் கூட்டம் அலைமோதியது. எல்லோருக்கும் அந்த நடிகைதான் கவர்ச்சி மையமாக இருந்தாள். அவ்வப்போது

சிறுகதை

# தாலாட்டுதே இளமை

■ காஞ்சி.பாலசந்திரன்

ஞாயிறு மதியம் மடிக்கணினியில் மூழ்கி இருந்த கோதை, அழைப்புமணி சத்தம் கேட்டு... 'வர்றவங்களுக்கு நேரம், காலமே தெரியாதா?' என எரிச்சல் அடைந்தாள்.

கதவைத் திறந்தவளுக்கு ஆச்சரியம். எதிரே அவளது மைசூர் சிநேகிதி ராகினி. பார்த்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நினைவு ஒரு நிமிடம் அவளை அலைக் கழித்தது. சுதாரித்துக் கொண்டாள்.

"வா... வா... எத்தனை வருஷம் ஆச்சு, உன்னைப் பார்த்து. எப்படி இருக்கே?"



"நான் நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்கே! பையன், மருமகள், பேரக்குழந்தைகள் எப்படி இருக்காங்க?"

"மொதல்ல இப்படி சோபாவில் உட்காரு."

மின்விசிறியை வேகமாகச் சுழல விட்டுவிட்டு, சமையலறை நோக்கிச் சென்றாள்.

கண்ணாடி தம்ளரில் 'ஜூஸ்' கொண்டு வந்து கொடுத்தாள்.

"என் சொந்தக்காரப் பொண்ணு கல்யாணத்துக்கு வந்தேன். உன் ஞாபகம் வந்தது. அப்படியே உன்னை ஒரு எட்டுப் பார்த்துட்டுப் போகலாம்ன்னு வந்தேன்."

"அதுசரி! மைசூர்ல யார்கூட இருக்கே? உன் பையன் எப்படி இருக்கான்?"

"ம்... ம்... நல்லா இருக்கான்!"

"என்ன... கொஞ்சம் வருத்தமா சொல்றே...?"

"கோதை! உன்கிட்டே சொல்றதுல என்ன இருக்கு? அவர் இருந்தற வரைக்கும் நான் எதுக்கும் கவலைப்படலே. நிம்மதியா இருந்தேன். அவர் போனபிறகு எனக்கு எதுவுமே பிடிக்கிறதில்லே. யார் கூடயும் பேசறதில்லே. ஒரு நடைபிணமா வாழ்ந்துட்டு இருக்கேன். பையனும் இப்ப என்கூட இல்ல."



"என்ன பண்றது... யாருக்குத்தான் வாழ்க்கையிலே இழப்புகளும், சோகங்களும் இல்ல? உலகத்திலே பிறந்த ஒவ்வொருவருக்கும் இறப்புங்கறது ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட ஒண்ணு. எல்லாம் விதிப்படிதான் நடக்கும். அதுக்காக ஒரேயடியா இடிஞ்சுபோய் உக்காந்தா எப்படி வாழ்றது?"

அவள் பேசப் பேச ராகினி அந்த வீட்டை சுற்றும், முற்றும் பார்த்தாள். வரவேற்பறை மிகவும் அம்சமாக இருந்தது. சுவரில் அழகான ஓவியங்கள் அலங்கரிக்க, பஞ்சு பொம்மைகள் அறையின் அழகை மேலும் மெருகூட்டின.

ஒரு தட்டில் ஜாங்கிரி, சுடச் சுட போண்டா, ஏலக்காய் டீ ஆகியவற்றை கொண்டு வந்து வைத்தாள் வேலைக்காரி.

"ராகினி! இவ பேரு செல்லம். இவதான் என்கூட இருக்கா. வீட்டு வேலைகள், தோட்டத்தை எல்லாம் பார்த்துக்கிறா. என் மேலே பாசமா இருப்பா. நல்ல பொண்ணு" என்றாள்.

அதைக் கேட்ட வேலைக்காரி மகிழ்ந்தாலும், அங்கிருந்து விலகினாள்.

"வீட்டை ரொம்ப நல்லா அழகா வெச்சிருக்கே. ஆமா... உன் பையன்-மருமக எங்கே?"

"உன்னை மாதிரிதான் நானும் தனியா இருக்கேன். மாடி மேலே தோட்டம் போட்டிருக்கேன். பார்க்கலாம்... வா."

வண்ண வண்ண ரோஜாக்களும், பலவித மலர்களும் பூத்துக் குலுங்கின. ஒரு புறம் கீரை வகைகள், காய்கறிகள் என பலவித செடிகள் தொட்டிகளில் அணி வகுத்திருந்தன.

"ராகினி! இந்த ரோஜாச் செடி எல்லாம் லண்டன்ல இருக்கிற என்



பேத்தி நிவிஷா குட்டிக்காக வெச்சிருக்கேன். அவளுக்கு ரோஜான்னா உயிர். போன்ல பேசறப்பெல்லாம் விசாரிப்பா. அவங்களெல்லாம் அடுத்த மாசம் இங்கே வறப் போறாங்க" - சொல்லும்போதே அவள் முகத்தில் சந்தோஷம் பாய்ந்தாடியது.

கோதைக்கு ஒரே மகன். அவனுக்கு லண்டன் வாசம். மருமகளுக்கு அங்கேயே வேலை. பேத்திக்கு ஐந்து வயதாகிறது. ஆண்டுக்கு ஒரு முறை எல்லோரும் இந்தியா வந்து ஒரு மாதம் தங்கி விடுமுறையைக் கழித்துவிட்டுச் செல்வார்கள்.

தங்களுடன் வந்துவிடும்படி மகன் வற்புறுத்தும் போதெல்லாம் சின்ன சிரிப்பை வரவழைத்து மறுத்துவிடுவாள்.

கீழே வந்தவள் ஒரு பெரிய 'ஆல்பத்தை' தோழியிடம் காட்டினாள்.

"ராகிணி! இதைப் பார்த்துக்கிட்டிரு. போன முறை நான் லண்டன் போனபோது எடுத்த 'போட்டோ'க்கள். பசங்கள் இப்ப என்னிடம் 'டான்ஸ்' கத்துக்க வந்துருக்காங்க. சின்ன வயசிலே கத்துக்கிட்ட 'டான்ஸ்' இப்போ அவங்களுக்கு உதவுது. ஒரு மணி நேரத்துல வந்துடுறேன்."

அன்றிரவு சாப்பாடு முடிந்ததும் இருவரும் மாடியில் போய் அமர்ந்தார்கள். குளிர்ச்சியான- மென்மையான காற்று, சூழ்நிலையை மேலும் ரம்மியமாக்கிக்கொண்டிருந்தது.

"கோதை! உன்னை நெனைச்சா பெருமையாவும், அதே நேரம் பொறாமையாவும் இருக்கு."

"என்ன ராகிணி... அப்படிச் சொல்றே?"

"இந்த வயசுல இத்தனை சுறுசுறுப்பா எப்படி இருக்க முடியுது உன்னால...?"

"இந்தக் கிண்டல்தானே வேணாங்கறது. அப்படியென்ன எனக்கு வயசாயிடுச்சு? 'ஜஸ்ட் சிக்ஸிட்டி ஒன்'தானே!"

சிரித்தாள்.

"ராகிணி. நீ ஒண்ணப் புரிஞ்சிக்கணும். வயசுங்கறது உடலுக்குத்தானே தவிர நம்ம மனசுக்கு இல்லைங்கறதை தெளிவா தெரிஞ்சிக்கணும். உனக்கொரு விஷயம் தெரியுமா? லண்டன்ல ஒரு கோடீஸ்வர கிழவர் இருந்தாராம். அவருக்கு வயசு நூறுக்கு மேலே! 'எப்படி இவ்வளவு காலம் வாழுறீங்க?'ன்னு கேட்டதற்கு என்ன பதில் சொன்னராம் தெரியுமா...?

'உழைப்புதான். என்னிக்கு உழைக்கிறதை நிறுத்தறமோ... அன்னிக்கே நம்ம உடலைவிட்டு ஆரோக்கியமும்- மனசைவிட்டு சந்தோஷமும் பறந்து போயிடும்'னாராம்.

இது எல்லா வயசுக்காரங்களுக்கும் பொருந்தும். நம்ம பிள்ளைங்க சின்னவங்களா இருந்தபோது அவங்கள பார்த்துக்கிற வேலையே சரியா இருந்தது. நம்மளோட ஆசைகளையும், தேவைகளையும் பூர்த்திச் செய்துக்கொள்ள நேரமே இருக்காது. ஆனா, அவங்க வளர்ந்த பிறகு முன்னே மாதிரி நமக்கு வேலையில்லை. இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் பிடித்தமான வழிகளில் நம் மனசை ஈடுபடுத்திக்கிட்டா தானாக சந்தோஷம் பிறக்கும். 'நாம தனிமைப்படுத்தப்பட்டுவிட்டோமே?'ங்கற எண்ணமும் வராது. அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்...

எத்தனை சோதனைகள், துன்பங்கள், இழப்புகள், வந்தாலும் அவற்றை வெறும் அனுபவங்களாக மட்டும் எடுத்துக்கணும். மாறாக மனசுல போட்டு அமுக்கி வெச்சிட்டா... அவை நம் தலை மேல ஏறி 'டான்ஸ்' ஆடும். நம்மளை முன்னேறவிடாம மூளையிலே உட்கார வெச்சிடும். அப்புறம் ஆஸ்பத்திரியிலேதான் குடும்பம் நடத்தணும். அதனாலே மனசை பூப் போல வெச்சிக்கணும்."

மீண்டும் மடிக்கணினியை எடுத்து, "ராகிணி! இப்படி வந்து உட்கார்" என்று சொல்லியவாறே அதை 'ஆன்' செய்தாள்.

"உனக்கு கம்ப்யூட்டரெல்லாம்கூட தெரியுமா?"

"மனசு இருந்தா மார்க்கம் உண்டு. எதையும் எப்பவும் கத்துக்கலாம். வயசு அதுக்கு தடையே இல்ல. இந்தப் பெட்டியிலே உலகத்தையே அடக்கிடலாம். எனக்கு 'கம்ப்யூட்டர்' தெரியாதுன்னு சொன்னா, பேத்திகூட என்னை கேலி செய்வா. அதுங்களுக்கு ஏத்த மாதிரி, நம்ம வாழ்க்கையையும் மாத்தி அமைச்சிக்கணும்."

மறுநாள் காலையில் ராகிணி விடைபெற்றாள்.

இப்போது அவள் மனதில் அறுபத்தியொரு வயசு இளம் பெண்ணாகத் தெரிந்தாள் கோதை.

*

நந்துவிடம் சிரித்துப் பேசி அவனைச் சூடேற்றினாள். நடுவில் கற்பூரத் தட்டு வந்தது. ஒற்றிக்கொண்டாள். தேங்காய், பழம் வந்தது. ஒரு துண்டை எடுத்து வாயில் போட்டுக்கொண்டாள்.

பிரமை பிடித்த மாதிரி பார்த்துக்கொண்டே இருந்தான் நந்து.

பூஜையின் ஒரு அம்சமாக தனியார் தொலைக்காட்சியினர் அவன் முன்னால் 'மைக்'கை நீட்டி, "இந்தப் படத்துல உங்க 'ரோல்' என்ன?" என்று கேட்டனர்.

"இதுல 'ஹீரோ'வா பண்றேன். இது ஒரு காதல் கதை. நான் ஒரு ஏழைப் பெண்ணை முதல்ல 'லவ்' பண்றேன். அப்ப நானும் ஏழை! சந்தர்ப்ப வசத்தால பெரிய பணக்காரன் ஆகறேன். பணம் வரவும் என்னோட குணம் மாறிடுது. பணக்காரப் பெண்ணைக் கட்டிக்கறேன். இதனால காதலிச்ச ஏழைப் பொண்ணு மனசு ஒடிஞ்சு போய் தற்கொலை பண்ணிக்கறா. அவளோட கண்ணும், மற்ற உறுப்புகளும் நான் கட்டிக்கற பெண்ணுக்கு அப்புறமா பொருத்தப்பட்டு என் பழைய காதலியாகவே என் மனைவி அமையறதுதான் கதை. இதோட 'கிளைமாக்ஸை' யாராலயும் கொஞ்சமும் யூகிக்க முடியாது..."

நந்தகுமார் ஏதோ நூறு படங்களில் நடித்தவன் போல

பேசிக்கொண்டே சென்றான். நளினி அப்படியே பிரமித்துவிட்டாள்.

**வீடு!**

முற்றத்தில் 'ஈஸிசேரில்' படுத்தபடியே கண்ணயர்ந்திருந்தார் அனந்தநாராயணன். உள்ளே சாந்த லட்சுமி படுத்துவிட்டாள். 'டைனிங் டேபிள்' மேல் சாப்பிட எல்லாம் தயாராக இருக்க... அருகில் அமர்ந்து நாவல் ஒன்றைப் புரட்டிக் கொண்டே கொட்டாவி விட்டுக்கொண்டிருந்தாள் நளினி.

'டேபிள்' மேல் ஒரு 'கவர்' வேறு! அதில் அரசாங்க முத்திரை. நந்தகுமாருக்கென வந்திருந்தது. அமைதியான அந்த வீட்டில் கடிகாரத்தின் 'பெண்டுல' சப்தம் மட்டும் துல்லியமாக கேட்டது.

இடையூறு செய்தது காரின் 'ஹாரன்' சப்தம். இறங்கியது நந்தகுமார்தான்! 'புரொடக்ஷன் மேனேஜர்' சற்று கைத்தாங்கலாக வாசல்படி வரை வந்து விட்டுவிட்டுப் போனார். அதற்குப் பிறகு ஆடாமல்– அசையாமல் நடக்கப் பார்த்து முடியாமல் தடுமாறினான் நந்தகுமார்.

அனந்தநாராயணன் பார்த்துவிட, நளினியும் கவனித்தாள்.

குடித்திருக்கிறான்!

கேட்டால்... 'பார்ட்டியில் ஊற்றிக் கொடுத்துவிட்டார்கள்' என்பான். எனவே எதுவும் கேட்கவில்லை. அனந்தநாராயணன் மட்டும் கவலையுடன் கத்தினார்.

"என்னடா இது ஆட்டம்... தண்ணி 'பார்ட்டி'யா?"

"அது வந்துப்பா..."

"தெரியும்டா... தெரியும். நீ என்ன சொல்லப் போறன்னு நல்லாவே தெரியும். சினிமான்னா குடிக்கணும்னு ஒண்ணும் கட்டாயம் இல்லடா. என் காலத்துல எம்.ஜி.ஆர். அதைக் கையாலேயே தொடாதவர்..."

"சாரி டாட்..."

"மண்ணாங்கட்டி. உன் ஆரம்பமே சரியில்லடா..."



– பயங்கரமாகக் கத்தினார் அனந்தநாராயணன். ஓடிப் போய் அவர் வாயை மூடினாள் நளினி.

"மாமா! விடுங்க... எல்லாம் சரியாயிடும்..."

"என்ன சரியாயிடும்? இவனை அந்த அரசாங்க வேலைக்கு போகச் சொல்லு. இந்த சினிமாவும் வேணாம், ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம்..."

"எந்த அரசாங்க வேலை?"

அவன் நாக்கு குழறியது. 'டைனிங் டேபிள்' மேல் இருந்த கடிதத்தை எடுத்து வந்தாள் நளினி. மவுனமாகப் பிரித்து நீட்டினாள்.

"எண்ணெய் வள நிறுவனத்துல ஆபீசர் வேலை..." என்றாள் சன்னக் குரலில்.

"சம்பளம்?"

"நாற்பதாயிரம்..."

"நீ ஒண்ணு நளினி... நான் இந்தப் படத்தை முடிச்சு இது நூறு நாள் ஓடிட்டா என் ஒரு நாள் சம்பளம் இது..."

"சரி... காலையில பேசிக்கலாம். சாப்பிட வாங்க..."

"நீ வேற... 'பார்ட்டி'யில நல்லா சாப்பிட்டுட்டுதான் வரேன். இப்ப நான் தூங்கணும். அப்புறம்... நாளையில இருந்தே 'சூட்டிங்'. இங்க ஒரு நாலு நாள்தான். அப்புறம் ஒரு மாசம் சுவிட்சர்லாந்திலேயாம்..." – நந்தகுமார் சொன்னபடியே மிதந்தான்.

நளினிக்குக் கொஞ்சம் சுருக்கென்றது.

சாந்த லட்சுமியும் எழுந்து வந்து அவனது தள்ளாடலைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவளது கண்கள் கலங்கின.

தன் மகன் 'சினிமா ஹீரோ' ஆகப் போகிறான் என்று சிலரிடம் பெருமைப்பட்டபோது அவர்கள் ஒரு மாதிரி பார்த்தனர். அதன் பொருள் இப்பொழுது புரிந்தது.

"எங்கேயும் நாம இருக்கற விதம்னு ஒண்ணு இருக்கு. என்

பையன் மாதிரி ஒரு நடிகன் இல்லைன்னுதான் பேர் எடுப்பான். அவனை நாங்க அப்படி வளர்த்து வெச்சிருக்கோம்...” என்று சொன்னதெல்லாம் அவள் முன்னே கையில் குண்டாந்தடியுடன் வந்து நிற்கிற மாதிரிதான் இருந்தது.

நளினி புத்திசாலி!

அதிக நேரம் நந்துவை சாப்பாட்டு இருக்கையில் அமர்த்தாமல், படுக்கை அறைக்கு இழுத்துச் சென்றாள். உரிமையோடு சட்டையைக் கழற்றத் தொடங்கினாள். அதே உரிமையோடு பேண்ட் பட்டனிலும் கை வைத்தாள். அவன் கொஞ்சம் வெட்கப்பட்டான்.

“பரவாயில்ல. போதையில வெட்கப்படுறதை மறக்கலையே...” என்றபடி அவனைப் படுக்கையில் தள்ளி ‘பேண்ட்’டை உருவினாள். பிறகு மர பீரோவைத் திறந்து, லுங்கியை எடுத்துப் போட்டாள். அவனே சிரமப்பட்டு அதை கட்டிக்கொண்டான்.

“டேங்க்ஸ் நளினி... ரொம்ப டேங்க்ஸ். ஸ்வீட் கிஸ்ஸஸ் டு யூ. ‘செட்’ல இன்னிக்கு எல்லா நடிகைகளும் முத்தம் கொடுத்தாங்க. அதுல பாலமனோகரியோட கிஸ்சுல ஒரு ஜிலுஜிலுப்பு... உதட்டுக்கு அவ ‘மென்தால் லிப்ஸ்டிக்’ பூசிப்பாளாம்...” என்றவன் அப்படியே புரண்டான்.

முதல் நாளே முத்தக் கதையைச் சொல்லிவிட்டான்.

நளிக்கு மறுபடி சுருக்.

இவன் கடைசி வரை தாங்குவானா?

## 4

எல்லாமே ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டது. ஒரு சிறு செயலில்கூட உன் தீர்மானம் கிடையாது. பூமியில் பெய்யும் மழை நீர் எப்படி விழும் இடத்துக்கு ஏற்ப உருண்டு புரண்டு அழுக்காகி ஓடிச் செல்லுமோ... அப்படித்தான் நமது வாழ்வும்.

அதில் எப்படியொரு சரியான விஞ்ஞான சக்தி உள்ளதோ... அதே கதிதான் நமது வாழ்க்கைப் போக்கிலும். என்னதான் மனதில் நினைத்து அதன்படி நடக்க முற்பட்டாலும், அதற்கு முன்பே ஒரு விசைப்படிதான் இயங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை.

நமது எண்ணம், ஏற்கெனவே உள்ள விசைப்பாடு இரண்டும் கலந்ததுதான் நடைபெற வேண்டிய செயல். அந்தச் செயல் நமது எண்ணப்படியும் நடந்து முடியலாம்... மாறாகவும் நடக்கலாம்.

எப்பொழுதும் நாம் நினைக்கிற மாதிரி நடந்து– அப்படி நடந்தற்கேற்ப பதில் விளைவுகளும் கிடைத்தால்... மனிதன் மனிதனாக இருக்கமாட்டான்.

‘மார்க்கெட்’டுக்கு நளினி புறப்பட்டபோது எதிர்ப்பட்டார் அந்த சித்தரைப் போன்றவர்.

“விடாதே... அவனை விடவே விடாதே.... விட்டா அவனைப் பிடிக்கவே முடியாது...” என்றார்.

நளினிக்கு அவர் சொல்வது தனக்கான செய்தியா... இல்லை உளறலா என்பதில் குழப்பம்!

அவள் முகத்தில் வாட்டம்! அதைக் கவனித்த அண்ணன் முகுந்தன், எதிரில் வந்து நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தான். அவளும் நிமிர்ந்தாள்.

“ஏன் ‘டல்’லா இருக்கே?”

“அதெல்லாம் ஒண்ணுமில்ல...”

“பொய் சொல்லாதே... ஏதாவது பிரச்சினையா?”

“ஒரு பிரச்சினையும் இல்லண்ணா... நீ ஒண்ணு...”

“நளினி! நான் உன் அண்ணன். எப்ப எப்படி இருப்பேங்கறது கூடவா எனக்குத் தெரியாது?”

“அண்ணா! ஏதாவது பிரச்சினைன்னா நான் நிச்சயம் உன்கிட்ட சொல்றேன்... போதுமா?”

“நீ சொல்லாதே... நான் சொல்றேன். ஆமா, ‘ஹீரோ’வா நந்து நடிக்கறதுக்காக நல்ல வேலையைக்கூட வேண்டாம்னு சொல்லிட்டானாமே?”

"ஆமா... அதோட ஒரு மாச சம்பளம், சினிமா துறையில ஒரு நாள் சம்பளமாமே...?"

"அதெல்லாம் ஜெயிச்சாத்தான்... இவன் இன்னும் ஆரம்பிக்கவே இல்ல. அதுக்குள்ளே இப்படி கையில வந்த வாய்ப்பை நழுவவிட்டா அது முட்டாள்தனம். அதுவும் இந்த வேலை அபூர்வமான வாய்ப்பு.

"நானும் அப்படித்தான் நினைக்கறேண்ணா... ஆனா நந்துகிட்ட இப்ப எதுவும் எடுபடாது. அப்படியே ஆகாசத்துல மிதந்துக்கிட்டு இருக்கான்..."

"நளினி! எனக்கென்னமோ நாம அவசரப்பட்டுட்டோமோன்னு தோணுது."

"எந்த விதத்துல...?"

"இந்த வேலையை நம்பித்தான் உனக்கும், அவனுக்கும் நிச்சயம் செய்தோம். ஆனா அவனோ... இதைவிட சினிமா பெரிசுன்னு மாறிட்டான்..."

"இதுவும் ஒரு வகையில பேரும் புகழுமான வேலைதானே?"

"அது யாருக்குன்னு இருக்கு. நூத்துக்கு பத்து பேர்தான், எனக்குத் தெரிஞ்சு இதை தெய்வமா நினைக்கிறாங்க. மற்றவங்களுக்கு இது ஒரு ஜாலியான கடற்கரை மாதிரி..."

"சத்தம் போட்டுச் சொல்லாதே... அப்புறம் யாராவது சினிமா நடிகர் உனக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பப் போறாங்க..."

"இப்ப யார்தான் அனுப்பல... பத்து பேர் ஒண்ணா சேர்ந்தா ஒரு சங்கம். உடனே ஒரு வக்கீல் நோட்டீஸ். இது என்ன ஜனநாயகமோ?"

"சரிண்ணே...போ... போய் வேலையைப் பாரு. போகப் போகப் பார்ப்போம்..."

"இப்பகூட சொல்றேன். அவன் நடிகன் நந்தகுமாரா உன்கிட்ட பழகினா தயவுசெய்து விலகிடு. பழைய நம்ம நந்துவா அந்த பாசம் மாறாம இருந்தாத்தான் கல்யாணம் நடக்கும்..." – முகுந்தன் தன் முடிவைப் பட்டவர்த்தனமாகச் சொல்லிவிட்டு எழுந்து போனான். நளினி அப்போதே யோசிக்க ஆரம்பித்துவிட்டாள்.



அருகில் இருந்த தொலைபேசி அவளது யோசிப்பைக் கலைத்து, அருகில் அழைத்தது.

எடுத்து காதைக் கொடுத்தாள்.

மறுமுனையில் சாந்த லட்சுமி.

"அத்தை!"

"என்ன பண்ணிகிட்டிருக்கே?"

"சும்மாதான் இருக்கேன் அத்தை..."

"கொஞ்சம் வர்றியா?"

"ம்... அப்புறம்... அம்மா இன்னிக்கு பூண்டுக் குழம்பும், பருப்பு உருண்டை சாம்பாரும் செய்திருக்காங்க. எடுத்துக்கிட்டு வரவா?"

"நானே சொல்லணும்னு நினைச்சேன். இன்னிக்கு நான் சமைக்கலை. நீயே எடுத்துக்கிட்டு வந்துடு..."

"சரி அத்தை!"

"அப்புறம் நளினி... நாளையில இருந்து ஒரு மாசம் வெளிநாடு போறான். அவன்கூட ஒருத்தர் போகலாமாம். அதாவது மனைவி, அப்பா– அம்மான்னு! 'பாஸ்போர்ட்' இருந்தா உடனே 'விசா' வாங்கித் தந்துடுறாங்களாம். நீ உன் அப்பா– அம்மாகிட்டே பேசிட்டு கொஞ்சம் 'பாஸ்போர்ட்'டோட வாயேன்..."

"அத்தை! என்ன இது? கல்யாணத்துக்குப் பிறகு இப்படிப் போனா நல்லா இருக்கும். இப்ப போறது நல்லாவா இருக்கும்?"

"என்ன நளினி நீ... நான் எதனால உன்னைப் போகச் சொல்றேன்னு உனக்குத் தெரியலையா...? அவனுக்கு உதவியாவும் இருக்கும். அவன் தப்பு கிப்பு பண்ண இடமே இல்லாம போயிடும்ல..."

"புரியுது அத்தை! ஆனா, அவர் என்ன நினைக்கிறார்னு தெரியணுமே...?"

"அவன் என்ன சொல்றது? நான் சொல்றேன்... நீ கிளம்பு..."

"அதுக்கு நீங்களே போகலாமே...?"

"அதுசரி... இங்க உன் மாமாவை அப்புறம் யாரு மேய்ப்பா...?"

"நாங்க இல்லையா?"

"ஒரு நாள்கூட உங்களால இவர்கூட வண்டி ஓட்ட முடியாது. வழவழன்னு பேசாம தயவுசெய்து 'பாஸ்போர்ட்'டை எடுத்துக்கிட்டு வா..."

சாந்தலட்சுமி 'போன்' இணைப்பைத் துண்டித்தாள்.

நளினியும் வேறு வழியில்லாம பீரோவில் இருந்து 'பாஸ்போர்ட்'டை எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

ஹாலில் அப்பா 'லேப்டாப்'பை வைத்துக்கொண்டு பங்குச்சந்தை விவரங்களைப் பார்த்தபடி இருந்தார். அதில் அவர் நுழைந்துவிட்டால் சுற்றி நடப்பது என்னவென்றே அவருக்குத் தெரியாது. சமையல்கட்டில் இருந்தாள் அம்மா காந்திமதி.

"அம்மா, அப்பா... நான், அத்தை வீடு வரை போயிட்டு வரேன்" என்றபடியே எவர்சில்வர் தூக்குவாளியில் குழம்பை ஊற்றிக்கொண்டு, வாசலில் நின்ற 'ஸ்கூட்டி'யைக் கிளப்பினாள்.

அதன்பின் பறக்கத் தொடங்கிவிட்டாள்.

வீட்டில் பத்திரிகைக்காரர்கள் சிலர் வராந்தாவில் காத்திருந்தார்கள். நளினி வரவும் கூர்மையாகப் பார்த்தார்கள். அவளும் அவர்களைப் பார்த்தபடியே உள்ளே சென்றாள். அங்கு சாந்தலட்சுமி கொஞ்சம் பதற்றத்தில்தான் இருந்தாள்.

"வாடி... எப்ப வருவேன்னு உட்காந்துகிட்டிருக்கேன். ஆனாலும் நந்து பண்றது கொஞ்சம்கூட சரியில்லடி..." என்றாள் குழம்பு வாளியை வாங்கியவளாக...

"ஏன் அத்தை... என்ன பண்ணினார் அவர்?"

"வெளியில பத்திரிகைக்காரங்க பேட்டிக்குன்னு வந்திருக்காங்க. இவன் இப்பதான் நிதானமா குளிக்கப் போயிருக்கான். அவங்களுக்கு பேட்டி கொடுத்துட்டு போலாம்தானே?"





"இருங்க... நான் போய்ப் பார்க்கறேன்..."- என்றபடியே படி ஏறி மாடிக்குச் சென்றாள் நளினி.

நந்தகுமார் அவனது அறையில் 'ஷேவ்' செய்து கொண்டு இருந்தான்.

"நந்தா..."

"எஸ்..."

"என்ன பண்றே?"

"பார்த்தா தெரியல...?"

"அதுசரி... ஆமா, பத்திரிகைக்காரங்களை காக்க வெச்சுட்டு 'ஷேவ்' பண்ணணுமா?"

"பின்ன... அப்படியே பிச்சைக்காரன் மாதிரி தாடி- மீசையோட போய் நிக்கச் சொல்றியா?"

"என்ன பெரிய தாடி- மீசை... தினமும் 'ஷேவ்' பண்றவன் நீ. எல்லாம் மெல்ல செய்துக்கலாம். எப்பவும் பத்திரிகைக்காரங்களைக் காக்க வைக்காதே..."

"அட... என்ன நளினி இப்பவே 'அட்வைஸ்' எல்லாம் பண்ண ஆரம்பிச்சிட்டே?"

"'அட்வைஸ்' இல்ல. என் மனசுலபட்டதைச் சொன்னேன். அவங்க நாலு வார்த்தை நல்லா எழுதணும். இல்லேன்னா 'இமேஜ் டான்ஸ்' ஆட ஆரம்பிச்சிடும்..."

"அதெல்லாம் சும்மா... எங்க படம்- பேட்டி இதெல்லாம் இல்லாம எப்படி? அதுக்காகக் காத்திருக்கலாம்..."

"பைத்தியம் மாதிரி பேசாதே... நீயா இப்படிப் பேசுறேன்னு ஆச்சரியமா இருக்கு..."

"சரி... இப்ப என்ன பண்ணச் சொல்றே?"

"சவரம் பண்ணது போதும். வந்து அவங்கக்கூட பேசி- அனுப்பிட்டு வந்து அப்புறமா குளி..."

"அதுசரி... இந்த 'டிரெஸ்'ல அவங்க படம் எடுத்து போட்டா என் 'இமேஜ்' அவ்வளவுதான்! சாருலதா என்ன சொல்லி இருக்கா தெரியுமா?"

"யாரது?"

"என் 'ஹீரோ'யின்..."

"அது நான்..." – நளினி.

"மண்ணாங்கட்டி! நான் என்னோடு நடிக்கற 'ஹீரோ'யினைச் சொன்னேன். அவ எல்லாரோடயும் ஒரு 'ரவுண்டு' வந்தவ. பத்திரிகைக்காரங்ககிட்ட எப்படி நடந்துக்கணும்னு எனக்கு ஒரு பாடமே நடத்தி இருக்கா..."

நந்தகுமார் பேச்சு சாருலதாவிடம் போகவும்தான் அவளுக்கு விளங்கியது. இவன் இப்பொழுது அவளது கைகளிலா... இல்லை இவனாகத்தான் பேசுகிறானா?

குழப்பத்தோடு அவனைப் பார்த்தாள். 'இனி பேசிப் பயனில்லை' என்பது போல இறங்கி, கீழே சென்று சமையல்கட்டில் மளமளவென்று 'ஜூஸ்' தயாரித்தாள். பிறகு அதை அழகாக தட்டில் வைத்து சுமந்தபடி பத்திரிகை நிருபர்களை நெருங்கினாள்.

அழகாகவும், அளவாகவும் ஒரு சிரிப்பு சிரித்தபடி எல்லோருக்கும் கொடுத்தாள். அவர்களும் அரைப் புன்னகையோடு 'ஜூஸ்' குடித்தனர். ஒரு நிருபர் கேட்டார்.

"சாருக்கு நீங்க என்ன வேணும்?"

"நான் அவரோட வருங்கால மனைவி..."

"அப்படியா... உங்க பேர்?"

"நளினி. அவரோட மாமா பொண்ணு. நிச்சயதார்த்தம்கூட முடிஞ்சாச்சு..."

"அடடே... சார் வரையில எல்லாமே வித்தியாசமான தகவலாத்தான் இருக்கு..."

"எல்லாமேன்னா...?"

"எடுத்த எடுப்புல 'ஹீரோ'. அதுவும் பிரபல நடிகை பிருந்தா

ஸ்ரீயோடு ஜோடி சேர்றாரு. ஆமாம்.. அமெரிக்காவுல சார் என்ன பண்ணிகிட்டு இருக்காரு...”

“மன்னிக்கணும்! பட பூஜையில உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தகவல் தப்பானது. அவருக்கு அமெரிக்கா எந்தப் பக்கம் இருக்குன்னு கூடத் தெரியாது. இங்க பக்கத்து பள்ளிக்கூட மைதானத்துல கிரிக்கெட் விளையாடப் போனவரைப் பார்த்து டைரக்டர் சார் ‘ஹீரோ’ ஆக்கி இருக்கார். அதுதான் உண்மை...” – நளினி வெள்ளந்தியாகப் பேசிட... அவர்கள் படுவியப்புடன் பார்த்துக்கொண்டே அவளையும் புகைப்படம் எடுத்தனர்.

அவள் கையால் முகத்தை மூடிக் கொண்டவளாக, “வேண்டாங்க. என்னை எடுக்கறது ‘வேஸ்ட்’...” என்று சொல்லியும் பயனில்லை.

“நீங்களும் நல்ல ‘போட்டோஜெனிக்’தாங்க...”

“தேங்க்ஸ். ஆனா, என் படம் எந்தப் பேட்டியிலேயும் வரக்கூடாது...” – அவள் கட்டளையிட, நந்தகுமார் தூக்கலான ‘மேக்கப்’பில் அவர்களை நோக்கி வணங்கியபடியே வந்தான்.

அவன் வரவும் நளினி சற்று பின்னால் சென்றாள். அவர்களுக்கு அருகில் காலியாக இருந்த ஒரு சோபாவில் அமர்ந்தான்.

“அப்புறம்?”– என்றான் கைகளை உதறிக்கொண்டே!

“பேட்டிக்காகத்தான் வந்திருக்கோம். கேள்விகள் கேக்கலாமா சார்...?”

“ஒரு நிமிஷம்! ஆங்... ‘பை த பை... இவ என் ‘பி.ஏ.’! பேர் நளினி. என்னைத் தொடர்புகொள்ள முடியாத நேரங்கள்ல, நீங்க இவளைக்கூட ‘காண்டாக்ட்’ பண்ணலாம். ஏன்னா... நான் அடிக்கடி அமெரிக்கா, கனடான்னு ஊர் சுத்தக் கிளம்பிடுவேன்...” – நந்தகுமாரின் அலட்டலான பேச்சு அவர்களுக்குள் சிரிப்பை மூட்டியது.

நளினி பேசியது தெரியாமல் நந்து பேசிவிட்டதாக எண்ணியவர்கள்– பதிலுக்கு அவளையும் ஒரு பார்வை பார்த்தனர்.

அவளிடம் தர்மசங்கடம். நெளிந்தாள்.



“என்ன... அவங்களைப் பாக்கிறீங்க? நளினி! நீ போ, என்னடா ஒரு பெண்ணை ‘பி.ஏ.’வா வெச்சிருக்கேன்னு பாக்கறீங்களா?”

“இல்ல... அவங்க உங்க சொந்தம்னு நினைச்சோம்...”

“சொந்தம்தான். தூரத்துச் சொந்தம். நீங்க கேள்விய கேளுங்க...” – நந்தகுமாரின் அணுகுமுறை ஏதோ நூறு படங்களில் நடித்து பெரிய அளவில் சாதித்துவிட்ட நடிகரின் பந்தாக்களை எல்லாம் ஏப்பம்விட்டது.

அவர்களும் கேட்க ஆரம்பித்தனர்.

“நீங்க நடிக்க வந்த காரணம்?”

“கலை மேல எனக்குள்ள காதல்...”

“இதுக்கு முந்தி என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க?”

“அமெரிக்காவுல முன்னணி என்ஜினீயர்...”

“நீங்க இந்த சென்னையிலயே பாதி இடம் தெரியாதவருன்னு சிலர் சொல்றாங்களே...?”

“யார்... யார் அது...?”– நந்துவிடம் கோபம் கொப்பளித்தது.

“உங்க... உங்க...”

“ம்... யார் சொன்னது?”

“சரி, அதை விடுங்க. வளர்ற கலைஞர்கள் மேல இப்படி பொறாமையில ஏதாவது சொல்றது இங்க ரொம்ப சகஜமான ஒண்ணு. உங்க அடுத்த இலக்கு என்ன?”

“தமிழ்நாட்டோட ‘நம்பர் ஒன் ‘ஹீரோ’ன்னு பேர் எடுக்கறதுதான்...”

“ரொம்ப நன்றி. நாங்க வர்றோம்...” – பத்திரிகையாளர்கள்... ‘இனி உன்னிடம் கேட்டு அறிய ஒன்றுமில்லை’ என்பது போல் கிளம்பினர். நந்தகுமாருக்கே ஏமாற்றமாக இருந்தது.

“என்ன இது... இவ்வளவுதானா கேள்வி?” என்று கிள்ளிப் பார்த்தான். அவர்கள் சிரித்தனர். அதில் ஆயிரம் உட்பொருள்.

அந்த வீட்டின் 'கேட்'டைத் தாண்டியவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

"இன்னும் முதல் படமே வரலை. அதுக்குள்ள இந்தப் புளுகு புளுகறான். பாவம் அந்தப் பொண்ணு..."

"பின்ன... பேட்டின்னா என்னன்னு இனிமேதான் பய தெரிஞ்சுக்கப்போறான்..." – என்றபடியே கலைந்தும் போயினர்.

அவர்கள் அப்படி பேசிச் சென்றதை மேலே 'பால்கனி'யில் இருந்து பார்த்துக்கொண்டே இருந்தாள் நளினி. அவள் கண்கள் கலங்கின. அப்படியே நெடுநேரம் நின்றவள், அங்கிருந்து நகர்ந்து நந்துவைத் தேடிச் சென்றாள்.

அவன் கண்ணாடி முன்னால் நின்று மீசையை 'டிரிம்' செய்துகொண்டிருந்தான்.

"நந்தா..."

"என்ன?"

"உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்..."

"தெரியும். உன்னை 'பி.ஏ.'ன்னும்... தூரத்து சொந்தம்ன்னும் சொன்னதுல வருத்தம் ஏற்பட்டிருக்கும். அதானே...?"

"இல்ல..."

"இல்லையா... அட, ஆச்சரியமா இருக்கே... அப்படின்னா வேற என்ன விஷயம்?"

"நீங்க கொஞ்சம் நிதானமா நடந்துக்கலாமே?"

"நிதானமான்னா..? நான் என்ன இப்ப எகிறியா குதிச்சுக்கிட்டு இருக்கேன்..."

"சொல்றதை கொஞ்சம் புரிஞ்சுக்குங்க. பேட்டி கொடுக்கும்போது நிதானம் முக்கியம். பத்திரிகைக்காரங்க ரொம்பப் புத்திசாலிங்க. நீங்க சொல்றதுல உண்மை எது, பொய் எதுன்னு சுலபமா கண்டுபிடிச்சிடுவாங்க. அப்படி அவங்களா கண்டுபிடிச்சா ரொம்பக் கேவலம்..."

"ஒரு கேவலமும் இல்ல. நான் பொய் சொன்னேன்னு



கண்டுபிடிச்சுட்டான்னா எனக்கு எப்படியும் செய்தி தருவான். அவன் கண்டுபிடிப்புக்கு ஒரு விலை கேப்பான். கொடுத்துட்டா விஷயம் முடிஞ்சது..."

"அப்படின்னு உங்களுக்கு யார் சொன்னது?"

"இதெல்லாம் என்னைப் போல 'ஆர்ட்டிஸ்டு'ங்களுக்கு ரொம்ப சாதாரண விஷயம். நீ கொஞ்சம் சும்மா இரு..."

"என்ன சும்மா இரு... நீங்க வர்றதுக்கு முந்தி அவங்களை நான் பேசிச் சமாளிச்சிட்டிருந்தேன். என்னைப் பத்தி எது உண்மையோ அதை சொன்னேன். நான் பேசினது தெரியாத நீங்க– பின்னாலயே வந்து அளந்து விட்டுட்டீங்க... இப்ப அவங்களுக்கு நீங்க சொன்னது விஷயமில்ல, நான் சொன்னதுதான் விஷயம்..." – நளினியின் விளக்கம் அவனை இறுக்கிற்று.

கோபமாக ஏறிட்டான். "நீ எதுக்கு அவுங்ககிட்ட போய்ப் பேசினே...?" என்றான் படுவேகமாக.

"நல்லவிதமா அவங்களை 'பீல்' பண்ண வைக்கத்தான்..."

"என்ன நல்லவிதமா? நான் என்ன அவங்களைச் செக்கு ஆட்டவா சொல்லி இருந்தேன்..." – அவன் கத்துவது சாந்த லட்சுமி காதிலும் விழுந்து... அவளும் வர, அனந்தநாராயணனும் வந்தார்.

"நந்தகுமார்... உன் போக்கு கொஞ்சமும் சரியில்லை. நீ ரொம்ப அலட்டிக்கிறே. அதுகூட உனக்குத் தெரியலை..." – என்றவர் நளினியைப் பார்த்தவராக, "அம்மாடி... கிளம்பு. இவனா உன்னைத் தேடி வர்ற நாள் வரும். அப்ப நீ வந்தா போதும்..." – என்று ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டார்.

"நீங்க ஒண்ணு... நாளைக்கு இவன்கூட இவதான் வெளிநாடு போகப் போறா...?" என்று குறுக்கிட்டாள் சாந்த லட்சுமி.

"எதுக்கு... அங்கேயும் போய் ரெண்டு பேரும் அடிச்சுக்கவா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல. அப்படியே அடிச்சுக்கிட்டாலும் அவதானே அவனுக்கு எல்லாம்..."

"போதும் சாந்தா... நிச்சயதார்த்தம் ஆகிட்டதாலேயே

கல்யாணம் ஆன மாதிரி நினைச்சுக்காதே! இந்தக் காலத்துல கல்யாணமே ஆகி இருந்தாலும்... பரஸ்பரம் மரியாதை, மதிப்பு இல்லேன்னா தாலியைக் கழட்டிக் கொடுத்துட்டு போயிடுறாங்க. அதை தெரிஞ்சுக்கோ...”

நளினிக்கு அவர்கள் பேச்சு சங்கடத்தில் புரட்டியது.

“அத்த–மாமா... இதை இதோட விடுங்க. தன்கூட யார் வரலாம்னு அவரே முடிவு செய்றதுதான் சரி. அவர் என்னைக் கூப்பிட்டா போயிட்டுப் போறேன்...” என்று சொல்லி நளினி அந்த பிரச்சினைக்குத் தற்காலிகமாக முற்றுப்புள்ளி வைத்தாள்.

பார்த்துக்கொண்டே இருந்த நந்தகுமாருக்கு அந்தச் சூழல் மேலேயே வெறுப்பாக இருந்தது. அங்கே நிற்கப் பிடிக்காமல் அவன் அறைக்குள் நுழைந்து தாழ் போட்டுக்கொண்டான்.

நளினிக்குக் கண்ணீர் வராத குறை!


இம்மானுவேல் நோபல்

## நள்ளிரவு சூரியன்

★ 'பிளைவுட்'டை கண்டுபிடித்தவர் இம்மானுவெல் நோபல். இவர், வெடிமருந்தை கண்டுபிடித்த – நோபல் பரிசை உருவாக்கிய ஆல்பர்ட் நோபலின் தந்தை ஆவார்.

★ வடதுருவத்தில் மார்ச் 21–ல் சூரியன் உதயமாகி, செப்டம்பர் 20 வரை தொடர்ந்து ஒளி வீசும். இதற்கு 'நள்ளிரவு சூரியன்' என்று பெயர்.

★ உலகின் மிகச்சிறிய தேசிய கீதம் ஜப்பான் நாட்டு தேசிய கீதமாகும். இது, வெறும் நான்கு வரிகளை மட்டும் கொண்டது.

– சா. அனந்தகுமார்,
அகஸ்தீஸ்வரம்.



## 5

சில விஷயங்கள் நடக்கும்போது துன்பமான ஒன்றாகத் தெரியும். ஆனால், அதுதான் பின்னால் மிகப் பெரிய நன்மையில் கொண்டு சென்று நிறுத்தும். அந்த நேரம் துன்பத்தை எண்ணி சபிக்கத்தான் மனது முனையும். ஆனால், பிறகு அது அப்படியே மாறிவிடும். தான் வந்த வண்டியில் ஏறி நளினி தன் வீட்டுக்குக் கிளம்பும்போது திரும்பவும் எதிரில் அந்தக் கிறுக்குச் சித்தர்!

ஒரு மாதிரி கோணல் முகம் காட்டி சிரித்தவர், “எல்லாம் தலைகீழா மாறும்... கவலைப்படாதே!” என்றார். அந்த சித்தர் பேச்சு, இந்த முறையும் நளினிக்கு விளங்கவில்லை.

'எது தலைகீழாக மாறப்போகிறது?'

மறுநாள் பத்திரிகையில் நந்துவின் பேட்டி வந்திருந்தது. பேட்டிக்கான தலைப்பே நந்துவைக் குதறிவிட்டது.

மனைவியை 'பி.ஏ.'வாக்கிய புது 'ஹீரோ'– என்ற தலைப்புக்குக் கீழே நளினி சொன்ன அவ்வளவும் வந்திருந்தது.

அவள் சொன்னதை வைத்து, நந்துவை செய்தியாளர்கள் புரட்டிப் போட்டிருந்தனர். பக்கத்தில் நளினியின் புகைப்படம் வேறு!

வெளிநாட்டு படப்பிடிப்புக்குப் புறப்படுவதற்காக தயாராகிக்கொண்டிருந்த நந்தகுமார், பேட்டியைப் படித்துவிட்டுக் குமுறிக்கொண்டிருந்தான். பேட்டியை நளினியும், அவள் அண்ணன், அம்மா, அப்பா என்று எல்லோருமே பார்த்திருந்தனர்.

“ஏம்மா... நந்துவா இப்படியெல்லாம் நடந்துக்கிட்டான்?” என்று அப்பாதான் முதலில் கேட்டார். அடுத்து அம்மா, அதற்கு அடுத்து அண்ணன். நளினி யாரிடமும் எதுவும் சொல்லவில்லை.

நந்து எப்படி தன்னை வெளிப்படுத்தப் போகிறான் என்பதிலேயே அவள் மனம் குறியாக இருந்தது. நந்துவுக்குள் இப்படியொரு வக்கிரம் ஒளிந்திருக்கும் என்பதை கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை.

'சினிமா வாய்ப்பு ஒருவரை இப்படிக்கூட மாற்றுமா என்ன...?'

குமைந்துபோனாள். நடுவில் தொலைபேசி அழைப்பு. அவன்தான்!

"உனக்கு இப்ப திருப்திதானே?"

"நந்து... இது என் தவறில்லை!"

"எதுக்கு அவங்கள் சந்தித்துப் பேசினே...? நீ வராம இருந்திருந்தா இப்படியெல்லாம் ஆகியிருக்குமா...?"

மறுபக்கம் அவன் அலறுவது இந்தப் பக்கத்தில் நளினியின் 'ரிசீவர்' நடுக்கத்தில் தெரிந்தது.

"சாரி நந்து..."

"என்ன சாரி... என் மானம் போகுது..."

"நான் வேணும்னா பத்திரிகைக்கு மறுப்பு எழுதிப் போட்டுடட்டுமா?"

"மறுப்பு எழுதறதால போன மானம் வந்துடப்போறதில்ல..."

"பிளீஸ் நந்து.... நான் ரொம்ப நல்ல எண்ணத்தோடுதான் பேசினேன். இப்படி ஆகிடக் கூடாதுங்கறதுதான் என் கவலை. ஆனா நீங்க அவசரப்பட்டுட்டீங்க..."

"என்ன... என்னைக் குறை சொல்றே?"

"குறை சொல்லலை... நடந்ததைச் சொல்றேன்..."

"முட்டாள்... சினிமாதுறையைப் பத்தி உனக்கு என்ன தெரியும்... இங்க 'பில்டப்' இருந்தாத்தான் எதுவுமே நிக்கும்."

"சரி நந்து. நான் இனி உங்க சினிமாகிட்டையே வரலை."

"நானும் இனி உன்கிட்ட வர்றதா இல்ல..."

"நந்து..."

"சாரி நளினி, நீ எனக்கு இனி சரிப்பட்டு வரமாட்டே..."

'டொடக்...'– மறுமுனை முடங்க, நளினி ரிசீவரை அப்படியே போட்டுவிட்டுப் போய் சோபாவில் விழுந்து அழத் தொடங்கினாள். அண்ணன் முகுந்தன் காத்திருந்த மாதிரி வந்து அருகில் அமர்ந்தான்.



"என்ன சொன்னான் அந்த அரை வேக்காடு?"

"................"

"உன்னைத்தான் நளினி... என்ன சொல்றான் அந்த நடிகன்?"

"திட்டினாரு..."

"அதுதான் உன் அழுகையைப் பார்த்தாலே தெரியுதே! அவன் புளுகிட்டு உன் மேல பழி போடுறானா...?"

"விடுண்ணே... பேசப் பேச இது அதிகமாகும்..."

"போ பைத்தியம்! முளையிலயே கிள்ளணும். இல்லைன்னா சரி வராது."

"இதோ பாரு... அவர் ரொம்ப நல்லவர். இதெல்லாம் கொஞ்சம் ஆர்வக் கோளாறால நடக்கற விஷயங்கள். போகப் போக சரியாகிடும்..."

"பைத்தியம் மாதிரி பேசாதே! அந்த 'இண்டஸ்ட்ரி' பத்தி உனக்கு என்ன தெரியும்? பணம்– புகழ் வந்தா மலையளவுதான் வரும். இன்னும் ஒரு படம்கூட நடிக்கல. 'சூட்டிங்'கூட தொடங்கல. அதுக்குள்ள இந்தத் துள்ளு துள்ளுறான். இவனெல்லாம் ஜெயிச்சான்... இந்த நாடு தாங்காது..." – முகுந்தனின் கருத்தைக் கேட்டபடியே வந்தார் அப்பா ரங்கநாதன்.

அவரிடம் அவ்வளவு கொதிப்பில்லை. முந்தியைப் பிடித்துக்கொண்டு கை துடைத்தபடி வசந்தாள் அம்மா கனகம். இருவரிடமும் அப்படியொரு அழுத்தமான மவுனம்.

அவர்கள் மனம் வெந்துகொண்டிருப்பதைக் கண்களும் காட்டிக் கொடுத்தன.

"அப்பா– அம்மா... நீங்க ஏன் வருத்தப்படுறீங்க? நான் போய் அவனை ஒரு பிடி பிடிச்சிட்டு வரேன்."

"சும்மா இருடா. கல்யாணம் மாதிரி நிச்சயதார்த்தத்தை நடத்தி இருக்கோம். அப்பவே பெருசா கண்ணுபடப் போறதா நினைச்சேன். அதே மாதிரி ஆகிடிச்சு."

“இது கண் திருஷ்டி இல்லப்பா... கொழுப்பு!”

“நீ அதற்கு எந்தப் பேர் வேணா வை. விஷயம் இப்ப அதுல இல்ல. நிச்சயம்கறது பாதி கல்யாணம் மாதிரி. நளினி இந்நேரம் கிட்டத்தட்ட அந்த வீட்டுப் பொண்ணு.”

“என்னப்பா உளறல் இது? எந்தக் காலத்துல இருக்கீங்க நீங்க?”

“2014-லதான். நீ கொஞ்சம் சும்மா இரு...”

“அவன் விஷயத்துல நீங்க எப்படி நடந்துக்கப் போறீங்கன்னு சொல்லுங்க...?”

“இதோபாரு... அவன் சினிமாவுல என்ன வேணா செய்துட்டுப் போகட்டும். என் பொண்ணைக் கண் கலங்காம வெச்சுக்கிட்டா போதும்.”

“நல்லா இருக்கே... இப்ப இவ கண் கலங்கி இருக்கிறது யாரால யாம்...?”

“இவ பேர்லயும் தப்பு இருக்குடா. இவ எதுக்குடா பத்திரிகைக்காரங்க முன்னால போய் நிக்கணும்?”

“அதுசரி... பொம்மை மாதிரி இருக்கணுமா உங்களுக்கு? அவன் நல்லது- கெட்டதுல பங்கு இல்லையா இவளுக்கு?”

“அவனுக்குத்தான் அது பிடிக்கலையே...”

“பிடிக்காதவன்கூட எதுக்கு உறவுங்கறேன்...?”

“என்னடா சொல்றே?”

“அவன் இனி சரிப்பட்டு வரமாட்டான். அவனா வெட்டி விட்டா அசிங்கம். இந்தப் பேட்டியையே காரணம் காட்டி நாம ஒதுங்கிக்கறதுதான் புத்திசாலித்தனம்.”

“அப்புறம் எவன் இவளைக் கல்யாணம் பண்ண முன் வருவான்? பத்திரிகைகளில் ‘போட்டோ’வை வேற போட்டு- அவ மனைவியாகப் போறாள்னு எழுதிட்டாங்களே...”

“மனைவியாகப் போறாள்னுதானே எழுதினாங்க. மனைவியாவே



இருந்தாலும் விவாகரத்து கேக்கச் சொல்வேன் நான்...”

“போடா பைத்தியக்காரா! வெட்டிக்கிறது எப்பவும் சுலபம். ஆனா, சேத்து வைக்கறது அப்படி இல்ல. போய் வாயைக் கழுவு. நம்ம குடும்பத்துல ஒருத்தரும் ஒரு தாலிக்கு மேல கட்டிக்கிட்டதில்லை. விவாகரத்து, சண்டை- சச்சரவுன்னு கஷ்டப்பட்டதும் இல்ல...”

“நளினி நம்ம குடும்பப் பொண்ணுதான். அவ விஷயத்தல இப்ப நடக்கறதெல்லாம் சண்டை- சச்சரவுதான். பழம்பெருமை பேசி இவ வாழ்க்கையை நாசமாக்கிடாதீங்க...” - முகுந்தன் அலறினான். அப்படியே கையை உதறிக்கொண்டு வெளியேறிவிட்டான்.

அப்பா ரங்கநாதன் அதை சாதாரணமாக எடுத்துக்கொண்டது போல நளினியைப் பார்த்தார்.

“நீ என்ன சொல்றே? நந்து நல்ல பையன். இதெல்லலாம் ரொம்பத் தற்காலிகமான தடுமாற்றங்கள்னுதான் நான் நினைக்கிறேன்.”

“நானும் அப்படித்தாம்ப்பா நினைக்கறேன். அவர் தப்புத் தப்பா நடந்துக்கும்போதெல்லாம்கூட ஒரு நடிகை பேரைச் சொல்வார். அவதான் இவருக்குத் தப்புத் தப்பா சொல்லித் தர்றா. இந்தப் பேட்டி, பத்திரிகைக்காரங்கன்னா எப்படிப்பட்டவங்கன்னு அவருக்குப் புரிய வைச்சிருக்கும். இனி கவனமா நடந்துப்பாரு...”

“நல்லது. இப்படிதான் கவனமா பிரிச்சுப் பார்க்கத் தெரியணும். ‘பாசிடிவா’வும் நடந்துக்கணும். சரி... வா, போய் மாப்பிள்ளையைப் பார்த்து வெளிநாட்டுப் பயணத்துக்கு வாழ்த்து சொல்லிட்டு வருவோம்...”

- ரங்கநாதன் பொறுப்பாக நடந்துகொள்ளத் தயாரானார். கனகமும் தயாரானாள்.

ஆனால், நளினியிடம் தயக்கம்.

“என்னம்மா...?”

“நீங்க போயிட்டு வாங்கப்பா...”

“நீயும் வா...”

“இல்ல... என்னப் பார்த்தா அவர் கோபம் அதிகமாகலாம்.”

"அப்படிங்கிறியா?"

"ஆமா. இப்பக்கூட போன்ல... 'என் முகத்துல முழிக்காதே. உனக்கும் எனக்கும் சரிப்பட்டு வராது'ன்னு ஒரே காட்டுக் கத்தல்..."

"ம்... நான் எல்லாத்தையும் சரி செய்யறேன்..."

ரங்கநாதன் கனகத்துடன் கிளம்பினார்.

## 6

**வா**ழ்க்கையில் நாளை என்ன நடக்கும் என்பதை முன்பே தெரிந்துவிடக்கூடாது. அப்படித் தெரிந்துவிட்டால் வாழ்வில் சுவையே இருக்காது. 'இப்படித்தான் ஒரு விஷயம் நடக்கப்போகிறது' என்றால் அதில் எந்த நாட்டமும் இருக்காது. இதனாலேயே எதிர்காலம் என்பது ஒளித்து வைக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. இருந்தும் சிலர் அதைத் தெரிந்துகொள்ளத் துடிக்கின்றனர்.

நளினி 'பால்கனி'யில் வந்து அமர்ந்து வீதியை நோக்கி பார்த்தபோதும் அந்தச் சித்தர், வீதியில் கண்ணில்பட்டார்.

"போச்சு... எல்லாம் போச்சு... விதியை ஜெயிக்க யாரால முடியும்? யாராலயும் முடியாது" என்றார்.

நளினியால் பொறுக்க முடியவில்லை!

'யாரப்பா நீ... எதற்கு எனக்கு இப்படி அதிர்ச்சி அளிக்கிறாய்?' என்று கேட்கும் வேகத்துடன் 'பால்கனி'யைவிட்டு இறங்கிக் கீழே வந்தாள்.

ஆனால் அவரைத்தான் காணவில்லை.

ரங்கநாதனும், கனகமும் கை நிறைய மலர்க்கொத்து, இனிப்பு, பழக்கூடை என்று படாடோபமாகத்தான் போய் நின்றனர்.

சாந்த லட்சுமியும், அனந்தநாராயணனும் ஓடி வந்து வரவேற்றனர். அப்படியே கொஞ்சம் நெளியவும் செய்தனர்.

"மாப்பிள்ளை நந்து எங்கே?"



"மேலதான் இருக்கான். இதெல்லாம் என்ன...?"

"பாத்தா தெரியல... இது பொக்கே! இது சுவீட்ஸ்! இது ராயல் ஆப்பிள்..."

"அதுசரி. ஆப்பிள் இருக்கறது மூங்கில் கூடையில. பொக்கே, பாலிதீனுக்குள்ள இருக்கு. சுவீட்ஸ், அட்டைப் பெட்டியில இருக்குன்னு அதுகளையும் சேர்த்து சொல்ல வேண்டியதுதானே?"

"சரி... சொல்றேன். கேட்டுக்குங்க மாப்ளை..."

"போதும் ரங்கநாதா! எதுக்கு இப்படி நடந்துக்கறே...? நாங்க என்ன மூணாம் மனுஷங்களா?"

"மாப்ளை.... நளினி ஒரு தப்பும் பண்ணலை. சொல்லப் போனா... பத்திரிகைக்காரங்ககிட்ட தப்பா நடந்துக்கக் கூடாதுன்னு மாப்ளைய காப்பாத்ததான் அவங்கள போய்ப் பாத்தா. ஆனா என்ன ஆச்சு? அவ இப்ப குற்றவாளியா சிலுவை சுமக்கறா. இப்படிப்பட்ட நிலையில நான் என் தங்கச்சி வீட்டுக்கு வர்றதா சொல்லிட்டு வந்து– அதுக்கும் ஒரு அர்ச்சனையை வாங்கிக் கட்டிக்கவா...?" – ரங்கநாதனின் கேள்வியின் நியாயம் அனந்தநாராயணனைக் கட்டிப்போட்டது. சாந்த லட்சுமி கண் கலங்கிவிட்டாள்.

"அண்ணே... அவன் ரொம்ப நல்ல பையன். எப்ப இந்த 'ஹீரோ' வாய்ப்பு வந்ததோ– அப்ப இருந்தே மாறிட்டான். யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு அப்படியொரு மாற்றம். எப்ப பாரு அறையில போய் கதவைச் சாத்திக்கிறான். சாப்பிட மாட்டேங்கிறான். சதா 'மேக்கப்' வேற... எங்களுக்கே ஒண்ணும் புரியலை..." – என்றாள் விசும்பலோடு.

"நீங்க மாறலைல்ல... அது போதும் எனக்கு! என் பொண்ணுக்கு உங்க ஆதரவு மட்டும் இருந்தா போதும். மாப்பிள்ளையை எப்படியாவது வழிக்குக் கொண்டு வந்துடுவா..."

"அதுசரி... நளினி எப்படி இருக்கா?"

"அவளுக்கு என்ன? நல்லாத்தான் இருக்கா..."

"பின்ன ஏன் அவளை கூட்டிட்டு வரல?"

"எல்லாம் கொஞ்சம் விட்டுப் பிடிக்கத்தான். இருங்க... மேல போய்ப் பார்த்து மாப்ளைக்கு வாழ்த்து சொல்லிட்டு வரேன். நான் வந்திருக்கறது தெரிஞ்சிருக்கும். கார்ல உள்ளே வரும்போது ஜன்னல் வழியா பார்த்துக்கிட்டிருந்தான். சாரி... பார்த்துக்கிட்டிருந்தார். 'வந்து இவ்வளவு நேரமாச்சு... இன்னும் பேச வரலை பாரு'ன்னு எதாவது நினைச்சுக்கப் போறாரு..." – என்றபடியே மலர்க்கொத்துடன் மாடிப்படி ஏறினார் ரங்கநாதன்.

அறைக் கதவு தாழிடப்பட்டிருக்க... மெல்லத் தட்டினார். பல நிமிடங்களுக்குப் பிறகு கதவைத் திறந்தான். முகத்தில் அழகுக் களிம்பு பூசி திருஷ்டி பொம்மை போல இருந்தவனை ஆச்சரியமாகப் பார்த்தார்.

"ஹலோ மாப்ளை... உங்க பயணமெல்லாம் சந்தோஷமா அமைய வாழ்த்திட்டுப் போக வந்தேன்..." என்றபடி மலர்க்கொத்தை நீட்டினார்.

அதை வெறுப்போடு வாங்கிக்கொண்டான். அருகில் உள்ள படுக்கை மேல் பொத்தென்று போட்டான்.

அது கிட்டத்தட்ட அவரையே தூக்கிப் போடுகிற மாதிரிதான் இருந்தது.

"அப்புறம் மாப்ள... நான் சுருக்கமா சில விஷயங்களை சொல்லிக்கிறேன். நளினி கொஞ்சம் அவசரப்பட்டுட்டா. அந்தப் பேட்டிக்காக நான் ரொம்ப வருத்தப்படுறேன். அதை அப்படியே விட்டுடுங்க. அவ இனிமே உங்க சினிமா விஷயங்கள்ல கிட்டக்கூட வரமாட்டா..."

– ரங்கநாதனின் பேச்சை லட்சியமே செய்யாமல் கண்ணாடி முன் போய் நின்று அந்தக் களிம்புப் பூச்சை முகம் முழுக்க தடவத் தொடங்கினான் அவன்.

அவரும் சகஜமாகப் பேச்சை மாற்ற முயன்றார்.

"அப்புறம்... உங்களுக்கு எத்தனை மணிக்கு 'பிளைட்'?"

"............."

"நான், உங்க அத்தை, முகுந்தன் எல்லாரும் 'ஏர்போர்ட்'டுக்கு



வரப் போறோம். எங்களுக்கு இன்னிக்கு ஒரு தீபாவளி. எங்க வீட்டு மாப்ளை ஒரு 'ஹீரோ'வாகி வெளிநாடு போறாருங்கறது... நான் கனவுலகூட கற்பனை பண்ணியிராத ஒரு விஷயம்..."

– ரங்கநாதன் எவ்வளவு பேசியும் நந்து இளகவில்லை.

அவர் எதிரில் படக்கென்று 'பாத்ரூம்' கதவைத் திறந்துகொண்டு போய் தாழிட்டுக்கொண்டான். ரங்கநாதனும் ஒரு பத்து நிமிடம் வரை கட்டிலில் உட்கார்ந்தபடியே இருந்தார். உள்ளே மனம் கொதித்தது... குதித்தது. அதே வீட்டில்– அதே இடத்தில் அவன் இடுப்பில் ஒரு பொட்டுத் துணி இல்லாமல் மூன்று மாதக் குழந்தையாக கிடக்க– அவனைத் தூக்கிக் கொஞ்சியதில் ஆரம்பித்தது எண்ண ஓட்டம். எவ்வளவு கட்டுப்படுத்தியும் தடுக்க முடியவில்லை.

'மாமா... மாமா...' என்று அவர் பின்னால் வந்து வந்து ஒளிந்துகொள்வான். அப்பா அனந்தநாராயணன் மறுப்பதை எல்லாம் ரங்கநாதன் செய்வார். ஒருமுறை 'ஜீன்ஸ் பேண்ட்' கேட்டதற்கு... 'அதெல்லாம் வெளிநாட்டுக் கலாச்சாரம்' என்று தந்தை மறுத்துவிட்டார். ஆனால் ஒன்றுக்கு இரண்டு வாங்கி வந்து அவனுக்குப் போட்டு அழகு பார்த்தார் இவர்.

அவன் கட்டிப்பிடித்து முத்த மழை பொழிந்தான்.

அப்படி பாசம் காட்டியவன்தான் இப்பொழுது கிறுக்குப் பிடித்து இப்படி நடந்துகொள்கிறான்.

ரங்கநாதனுக்கு கண்ணீர் சேர்ந்துவிட்டது. கஷ்டப்பட்டு துடைத்துவிட்டு எழுந்தார்.

முகத்தில் சிரிப்பை வலிய வரவழைத்துக்கொண்டு மேலிருந்து கீழே இறங்கத் தொடங்கினார். அப்படி வரும்போது, "முடிஞ்சா 'ஏர்போர்ட்' வரேன் மாப்ளே. நீங்க கட்டாயப்படுத்தறதால முயற்சி பண்ணுறேன்.. இல்லேன்னா முடியாதுன்னு இங்கேயே சொல்லிடுவேன்" என்று ஏதோ பரம ரகசியமாக பேசிக்கொண்டவர் போல... பேசியபடியே வந்தார். ஆனால் அதை அனந்தநாராயணன் நம்பவில்லை.

"ரங்கநாதா... ஏன் இப்படி புளுகறே? அவன் உன்கிட்ட ஒரு

வார்த்தைக்கூட பேசல...” என்று அவர் கீழ் இறங்கிய ஜோரில் போட்டு உடைந்தார்.

ரங்கநாதன் முகத்தில் அப்பட்டமாய் அசடு வழிந்தது. சாந்த லட்சுமி அதைப் பார்த்து கலங்கினாள். கனகத்துக்கும் கணவர் இப்படி அவமரியாதைப்படுவதை ஜீரணிக்க முடியவில்லை. 'இப்பொழுதே இப்படி என்றால் போகப் போக என்ன பாடுபட வேண்டி வருமோ?' என்றும் ஒரு கேள்வி அவளுக்குள் எழும்பி நெஞ்சை அடைத்தது.

'ஒரு சினிமா 'சான்ஸ் என்பது இப்படிக் கூடவா மனிதனை மாற்றும்?' என்று கேட்டுக்கொண்டாள். அனந்தநாராயணன் அவள் மனதை அப்பொழுதே படித்தது மாதிரி பதில் சொல்லத் தொடங்கினார்.

“ரங்கநாதா... இனிமே இவன் சரிப்பட்டு வரமாட்டான். நீ நளினிக்கு வேற ஏற்பாடு செய்யறதா இருந்தா தாராளமா செய்துக்கோ. என்னடா நிச்சயதார்த்தம் ஆகிடிச்சேங்கற அந்த உளைச்சல் வேண்டாம்...” என்றார்.

சாந்த லட்சுமிக்கு மேலும் 'பகீர்' என்றானது. “என்னங்க... என்ன பேச்சுப் பேசுறீங்க நீங்க? அவனை இழுத்துக்கட்டி திருத்தற வேலையைப் பாக்காம அவுத்துவிட்டா அவன் எவளோ ஒரு நடிகையை இழுத்துக்கிட்டு வந்து... 'இனிமே இவதான் என் பெண்டாட்டி'ன்னு சொன்னா ஏத்துக்குவீங்களா?”

“போடி பைத்தியக்காரி... இப்ப மட்டும் நானும், நீயும் என்ன பண்ணிக்கிட்டிருக்கோம்? அதைத்தானே செய்துகிட்டிருக்கோம். அவன் ஆடு ஆடுன்னு ஆடிக்கிட்டிருக்கான். நாம பாத்துகிட்டுத்தானே இருக்கோம்?”

“இல்லீங்க... இப்ப என்ன ஆகிடிச்சு. ரெண்டு நாள்ல அவன் கோபம் போயிடும். அப்புறம் எல்லாம் சரியாயிடுங்க...”

“சரி... உன் பேச்சுக்கே நான் வரேன். அவன் அப்புறமும் சரிப்பட்டு வராம இப்படியே நடந்துக்கிட்டா?”

“அதைப் பத்தி அப்புறம் பேசுவோம். நீங்க வாயை மூடிக்கிட்டு



சும்மா இருங்க. நளினியைவிட நம்மை புரிஞ்ச ஒரு பொண்ணு இந்த வீட்டுக்கு மருமகளா வரவே முடியாது...”

“இதோ பாருடி... நம்ம சுயநலத்துக்காக அந்தப் பெண்ணோட வாழ்க்கையைப் பாழாக்கிடாதே!”

அனந்தநாராயணனிடம் ஒரு நியாயமான நெஞ்சம் இருப்பது நிதர்சனமாகத் தெரிந்தது.

“மாப்ளை சொல்றதுதான் சரி. கல்யாணம்கறது ஆயிரம் காலத்துப் பயிர். இதுல நான் அவசரப்பட விரும்பலை. நந்துவை எனக்கு நல்லா தெரியும். இத்தனை நாள்ல நான் அவன்கிட்ட ஒரு தப்பான விஷயத்தைப் பார்த்தது இல்ல. இப்ப இப்படி நடந்துகறான்னா அது சினிமா துறைக்கு இருக்கற சக்தின்னுதான் சொல்லணும். நாம இப்பத்தான் அவன்கிட்ட ரொம்ப உறுதியா நிக்கணும்” என்று ரங்கநாதனும் பொறுப்போடு பதில் சொன்னார்.

பிறகு, இருவரும் எதுவும் சாப்பிடாமல் கிளம்பிப் போனார்கள். சாந்த லட்சுமிக்கும், அனந்தநாராயணனுக்கும் நந்துவின் செயல் தந்த வருத்தத்தைவிட... அது கூடுதலான வருத்தத்தைத் தந்தது.

## 7

மனதையும், ஆகாயத்தையும் எப்போதும் ஒன்றாகச் சொல்வார்கள். ஆகாயத்தில் தங்கு தடைகள் இல்லை. நீள- அகல- உயரமும் இல்லை. மனமும் அப்படித்தான். அதுவும் எவ்வளவு எண்ணங்களையும் தன்னுள் கொள்ளும்!

நொடிக்கும் குறைவான காலகதியில் உலகின் எந்த மூலையிலும் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ள முடியும். அதனாலேயே யார் மனத்தில் என்ன இருக்கிறது என்பது எப்பொழுதும் புரியாத புதிராகவே உள்ளது.

ரங்கநாதனும், கனகமும் வருத்தத்தோடு வெளியேறும்போது பார்த்துக்கொண்டு இருந்தார் இந்த சித்த சன்னியாசி. அவருக்கு நந்துவின் வீட்டு எதிரில் உள்ள மரத்தடிதான் சயன பீடம்.

அவரைப் பார்க்க யார் யாரோ வருவார்கள். ஆனால், அவர் யாரையும் திரும்பிக்கூட பார்க்கமாட்டார். யாரோடும் சரியாகப் பேசவும்மாட்டார்.

அனந்தநாராயணனுக்கும், சாந்த லட்சுமிக்கும் அவரது தோற்றம்தான் உறுத்தலான விஷயம். மற்றபடி அவர் வந்ததில் இருந்துதான் எல்லா நன்மைகளும் நடப்பதாக அவர்கள் நினைக்கின்றனர்.

புத்தம் புதிய 'சூட்கேஸ்'களில் துணிமணிகளை அடுக்கி வைத்து... தயாரிப்பாளர் அனுப்பி வைத்த காரில் ஏற்றிவிட்டு, ஏறி அமர்ந்தான் நந்தகுமார். வாசற்படியில் நின்றிருக்கும் அனந்தநாராயணனையும், சாந்த லட்சுமியையும் ஒரு பார்வை பார்த்தான்.

ஒரே பிள்ளை!

முதல் தடவையாக வெளிநாட்டுக்குப் போகிறான்.

ஒருவர் துணையும் தேவையில்லை என்று கூறிவிட்டான்.

சாந்த லட்சுமி கடைசி வரை முயற்சி செய்து பார்த்தாள்.

"நான் ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லை. நானே பார்த்துக்கிறேன்" என்று கூறிவிட்டான். அவள் முகத்தில் அவனைப் பிரியப்போகும் சோகம். அனந்தநாராயணன் பெரிய அளவில் வெறுப்பில் இருந்ததால் அவர் முகத்தில் கோபம்தான் அமர்ந்திருந்தது.

காரில் இருந்து இறங்கியவன், அவர்கள் அருகில் வந்தான். சம்பிரதாயமாக காலைத் தொட்டவன், "போயிட்டு வரேம்மா... போயிட்டு வரேம்ப்பா..." என்று கிளம்பினான்.

சில அடி நடந்தவன் எதனாலோ நின்றான். திரும்பி வந்தான். இருவரையும் ஒரு பார்வை ஆழமாகப் பார்த்தான். பிறகு தொண்டையை செருமிக்கொண்டு, "அம்மா... இந்தத் தயாரிப்பாளரோட அடுத்த படத்துலேயும் நான்தான் 'ஹீரோ'.

தொடர்ச்சியாக எனக்கு 'சூட்டிங்' இருக்கு. இடைவெளியே கிடையாது. இப்ப நான் கல்யாணம் பண்ணிக்கிறதை தயாரிப்பாளரும் விரும்பல... 'சினிமா துறையில கல்யாணம்கறது ஒரு பெரிய



திருப்புமுனையை ஏற்படுத்தற விஷயம். அதனால கல்யாணத்தை சில வருஷங்களுக்குத் தள்ளிப் போடப் பாருங்களேன்'னு சொன்னாரு.

ஆனா, நான் கல்யாணமே வேண்டாம்கற முடிவுக்கு வந்துட்டேன். நளினிக்கு மாமாகிட்ட சொல்லி வேற இடம் பார்க்கச் சொல்லுங்க. எனக்காக அவ காத்திருக்க வேண்டாம்..." என்று ஒருவித வேகத்தோடு சொன்னவன், விறுவிறுவென்று நடந்து சென்று காரில் ஏறிக்கொள்ள... காரும் சீறத் தொடங்கியது.

சாந்த லட்சுமியும், அனந்தநாராயணனும் திருதிருவென்று ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பின்...

"என்னங்க... இவன் முடிவே பண்ணிட்டானே...?"

"வெளிப்படையா பேசவாவது செய்தானே! இதேது கல்யாணமாகி இவன் மனைவியா நளினி இருந்தா என்னாகி இருக்கும்? விவாகரத்து பண்ணப் போறேன்னு பேசத் தொடங்கி இருப்பான். நல்லவேளை... நளினிக்கு நல்ல ஜாதகம். தப்பிச்சா..."

"ஐயோ... என் அண்ணன் இப்பக்கூட நம்பிக்கையா பேசிட்டுப் போனாரே...?"

"இனிமே பேச வேண்டாம்னு சொல்லு. நீ என்ன சொல்றது? நானே சொல்றேன்..."

அனந்தநாராயணன் போனை நோக்கி நடந்தார். உதட்டில் உக்கிரமான முணுமுணுப்பு.

அவர் அருகே செல்லவும், அது சப்திக்கவும் சரியாக இருந்தது. கையில் எடுத்தார். "ஹலோ" என்றார்.

"மாமா! நான் நளினி பேசறேன். அவர் கிளம்பிட்டாரா...?"

"கிளம்பிட்டான்ம்மா... போகும்போது உனக்கு ஒரு விஷயத்தையும் சொல்லிட்டுப் போனான்..."

"அப்படியா மாமா! எனக்குத் தெரியும். என்ன... எல்லாத்துக்கும் 'சாரி' சொல்லச் சொன்னாராக்கும்? ஆனா நான் எதையும் மனசுல வெச்சுக்கல. அதுக்கெல்லாம் அவசியம் இல்லைன்னு சொல்லணும். ஏன்னா... நான் ஒண்ணும் மூணாம் மனுசி இல்லியே..."

“அவன் சொன்னது என்னன்னு தெரிஞ்சுக்காம நீயா இப்படி ஆசையோட பேசினா எப்படிம்மா...? ஆமா, உன் அப்பன் வந்துட்டானா?”

“இல்லையே...”

“சரி. வந்தா எனக்கு போன் பண்ணச் சொல்லு.”

“சொல்றேன். அவர் என்னவோ சொன்னாருன்னு சொன்னீங்களே... அது?”

“நான் சொல்லிடுவேன். சொல்லித்தான் ஆகணும்.. ஆனா உன்னால தாங்கிக்க முடியுமா?”

“அப்படின்னா?”

“என் வரையில இது ஒரு நல்ல விஷயம். ஆனா உனக்கு அதிர்ச்சியா இருக்கும்...”

“விஷயத்தைச் சொல்லுங்க மாமா.”

“சொல்றேன். எல்லாம் என் தலையெழுத்து. உன் கல்யாண நிச்சயதார்த்துக்கு எந்த அர்த்தமும் இல்லாம போயிடிச்சு. அந்த ‘போட்டோ ஆல்பம்- சி.டி.’ எல்லாத்தையும் தூக்கிப் போட்டு நெருப்பு வை. உன்னை வேற ஒருத்தரை கல்யாணம் செய்துக்கச் சொல்லிட்டான். இவரு இப்போதைக்குக் கல்யாணம் செய்துக்கப் போறதில்லையாம்...”

“மாமா...”

“சரி, கொஞ்சம் வருத்தப்படு. அழணும்னு தோணினா அழு. நான் எதைச் செய்யட்டும்? ஒரு வகையில என் பிள்ளையைப் பாராட்டுறேன். ஏதோ ஒரு முடிவுக்கு வந்து வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டுன்னு சொன்னானே... அந்த மட்டும் ரொம்ப சந்தோஷம்...”

அவர் பேசிக்கொண்டு இருக்கும்போதே அந்தப் பக்கத்தில் இணைப்பைத் துண்டித்துவிட்டாள் நளினி. அவரும் எதிர்பார்த்தவர் போல, “பைத்தியகாரப் பொண்ணு. இனிமே சின்ன வயசுல இருந்தே ‘உனக்கு அவன்; அவனுக்கு நீ’ன்னு சொல்லிச் சொல்லி வளர்க்கற கொடுமையைக் கைவிடணும். ஏதோ அந்த நேரத்து அரிப்புக்கு



சொறிஞ்சுக்கற மாதிரி எதையாவது இப்படி பேசி வெச்சுடுறோம். ஆனா அது பின்னால விபரீதமா வேலை செய்யும்போது யாரால தாங்கிக்க முடியுது...?” என்று அவருக்கு அவரே புலம்ப ஆரம்பித்துவிட்டார்.

சாந்தலட்சுமி அப்படியெல்லாம் புலம்பவில்லை. ஆனால், கணவர் சொல்வதுதான் சரி என்று எண்ணினாள்.

**வி**மான நிலையம்!

உலோகத்துக்கு இறக்கை முளைக்க வைக்கும் இடம்... மனிதனின் மூளைக்கு எவ்வளவு சக்தி என்பதை இங்கே வந்தால் தெரிந்துகொள்ளலாம். அப்படியே உழைப்புக்கு ஆகாயம்கூட எல்லை இல்லை என்பதையும் சொல்லும் இடம்.

மகாலட்சுமியை குத்தகைக்கு எடுத்தவர்கள்- இழுத்துப் பிடித்து பூட்டி வைத்திருப்பவர்கள் எல்லாம் சரளமாய் வந்து போகிற இடம். வரவேற்பு பகுதியில் நந்து அமர்ந்திருந்தான். அவனோடு படப்பிடிப்பு குழுவினர்.

மார்புப் பகுதியை பழத்தோட்டமாக மாற்றியிருந்த நடிகை ஒருத்தி பக்கத்திலேயே அமர்ந்திருந்து அவனோடு சிரித்து சிரித்துப் பேசிக்கொண்டிருந்தாள்.

“மாப்ளே... சாருலதா மேடத்தைக் கவனிச்சியா... நந்தகுமார் புது ஆளு. பின்னால பெரிய ‘மார்க்கெட்’ இருக்கும்னு கணக்குப் பண்ணி இப்பவே வலை வீசறதை...”- உதவி இயக்குநர் ஒருவர் தன் மனதில் உள்ளதைச் சொன்னார்.

“வண்டி ஓடணும்ல... இல்லாட்டி ஏழு வருஷமா இவ கல்லாகட்ட முடியுமா?”

“அதுசரி... இந்தப் பய ஒரு ‘ரவுண்டு’ வருவான்னு நீ நம்பறியா?”

“இந்தக் காலத்துல யாரைப் பத்தியும் எதுவும் சொல்ல முடியாது. ஆந்திராவுல ஒருத்தர் முப்பது வருஷமா தாக்குப் பிடிக்கலையா?”

“யாரைச் சொல்றேன்னு தெரியலியே... அந்த மாதிரி ஏகப்பட்ட பேர் இருக்காங்களே... குரல் இல்லாட்டி ‘டப்பிங் வாய்ஸ்’,

எக்ஸர்ஸைஸ்', 'காமிராமேன்'
சண்டைக்கு 'டூப்', நடனம் தெரியாட்டி 'செட்டப்', 'மேக்கப்மேன்'
தயவுல சில 'ஆங்கிள்'ல மட்டும் சிரிக்கற சாயங்கள்னுதான்
தயவுல அம்மைத் தழும்பைக்கூட மூடி மறைக்கற
எவ்வளவோ இருக்குதே..."

"அப்ப ஒருத்தர் நடிகராக தகுதியே தேவையில்ல. ஒரு உடம்பும்,
அதுல உசிரும் இருந்தா போதும்கறியா?"

"அப்படித்தானே ஆகிப்போச்சு... யார் இப்ப சிவாஜி
மாதிரியெல்லாம் உசுரைக் கொடுத்து நடிக்கிறாங்க?"

"இப்படியெல்லாம் பொத்தாம் பொதுவா பேசாதே... அப்புறம்
டின்னு கட்டிடுவாங்க. இன்னிக்கெல்லாம் எல்லாத் துறையிலும்
பயங்கர போட்டி. அந்தக் காலம் மாதிரி சாணி தட்டிட்டு– சண்டை
போட்டேன்னு சொல்ல முடியாது. நிஜமா அடிச்சுக்கணும்..." –
அவர்கள் இருவரும் மாறிமாறி பேசிக்கொண்டதில் ஒரு விஷயம்
தெளிவாயிற்று.

நந்தகுமார் அவர்களை மிகவே பாதிக்கத் தொடங்கிவிட்டான்.

"இவனெல்லாம் பிரபலமானா அப்புறம் ரொம்ப கஷ்டம்ப்பா.
இன்னும் முதல் பட 'சூட்டிங்'கூட ஆரம்பிக்கல. ஆனா, அதுக்குள்ள
பேட்டிங்கற பேர்ல அவரு விட்டிருக்கற 'டூப்'பைப் பார்த்தியா?"

"அதையும் பார்த்தேன். அதை துளிகூட லட்சியம் பண்ணாத நம்ம
தயாரிப்பாளரையும் பார்த்தேனே! எனக்கென்னவோ இதெல்லாம்
'பப்ளிசிட்டி ஸ்டண்டு' மாதிரி தெரியுது. பத்திரிகைக்காரங்க வரையில
நல்லவிதமா எழுத வைக்கறதுதான் கஷ்டம். குண்டாங் குதுரையா
எழுத வைக்கறது ஒண்ணும் பெரிய விஷயமில்லையே...?"

"அட... அவங்களிலும் சிலர் மோசம்ப்பா. உலகத்துல யார்
யாரோ என்னவெல்லாமோ பண்ணுறாங்க. அதையெல்லாம்
உட்டுடுறாங்க. ஒரு சினிமாக்காரன் முதுகு சொறிஞ்சிக்கிட்டாக்கூட
அதுக்குப் பின்னால ஏதோ இருக்குன்னு எதையாவது எழுத
ஆரம்பிச்சிடுறாங்க. அது ஏம்ப்பா...?"

"என்ன நீ... கேணத்தனமா கேள்வி கேக்கறே..? யாரோ ஒரு
ராமசாமி ஏதோ ஒண்ணு பண்ணுறான்னு வை. அதை அப்படியே



எழுதினா யார் அந்த ராமசாமின்னுதான் முதல்ல கேட்பாங்க.
அப்புறம்தான் விஷயத்துக்கு வருவாங்க. ஆனா, ஒரு நடிகன்
பண்ணினா 'அட... அவனா?'ன்னு நேரா விஷயத்துக்குத்தான்
வருவாங்க. பத்திரிகைக்காரங்களுக்கு நல்லா தெரியும்ப்பா...
நாம மட்டும் என்ன யோக்கியம்? 'சூட்டிங்'ல எவ்வளவு
பித்தலாட்ட வேலை பண்றோம்?" – அவர்கள் பல மாதிரி அலசி
சடைத்துக்கொண்டனர்.

விமானம் தாமதமாக வந்தபடி இருந்தது. தொலைவில் ஒரு
கண்ணாடித் தடுப்புக்கு அப்பால் பட இயக்குநரும், தயாரிப்பாளரும்
பேசிக்கொண்டிருந்தனர்.

உதவி இயக்குநர் பேச்சுக்கு நடுவே – வழியனுப்ப வந்தவர்கள்
போய்விட்டார்களா என்று பார்க்கத் திரும்ப... பார்வையில்
பளிச்சென்று பட்டாள் நளினி.

பரிதாபமாக நின்று, நந்துவையே பார்த்துக்கொண்டிருந்தாள்.
அங்கிருந்து குரல் கொடுத்தால் காதில் விழாது. குரல் கொடுக்க சூழலும்
இடம் அளிக்கவில்லை. எனவே தத்தளித்துக்கொண்டிருந்தாள்.
அதைப் பார்த்த உதவி இயக்குநருக்குச் சங்கடமாகிவிடவே, மெல்ல
எழுந்து நந்தகுமாரை நெருங்கி அவனது கவனத்தைக் கலைத்து,
நளினியை நோக்கி கையைக் காட்ட...

நந்தகுமாருக்கு சற்று சுருக்கென்றுதான் இருந்தது.

அந்த நடிகையும் பார்த்தாள். அவன் அவளிடம் சொல்லிக்கொண்டு
அவளை நோக்கி மெல்ல நடந்து சென்றான். கிட்டே நெருங்கியவன்
அவளது கண்களில் கண்ணீர்த் துளிகளைப் பார்த்தான். அவன்
பார்க்கும்போது இரு கண்களிலும் இரு துளிகள், மலையில் இருந்து
குதிப்பது போல விழுந்து உருண்டன.

"என்ன நளினி! இங்க வந்து அழுது கலாட்டா பண்ணி 'சீன்
கிரியேட்' பண்ணப்போறியா? நான்தான் வர வேண்டாம்னு
சொன்னேன்ல...?"

அவனது ஆரம்பமே அவள் வரையில் விலாவைக் குத்தியது.

"நந்து... என்ன ஆச்சு! உங்களுக்கு என்ன ஆச்சு? ஒரு பூரானைக்

கூட உங்களுக்கு அடிச்சுக் கொல்லணும்னு தோணாதே. 'அதால எந்த ஒரு மனுஷனுக்கும் பாதிப்பு கிடையாது. அதை எதுக்கு பயந்து போய்க் கொல்லணும்?'ன்னு கேட்டு அப்படியே விட்டவர் நீங்க..."

"இதோ பாரு... இப்பவும் நான் அப்படித்தான். இப்ப எதுக்கு பூரான் கதை... அதை சொல்லு."

"நான் ஒரு தப்பும் பண்ணலியே... எனக்கு எதுக்கு இவ்வளவு பெரிய தண்டனை?"

"தண்டனையா... என்ன உளர்றே?"

"பின்ன... நடந்த நிச்சயதார்த்தத்தையே இல்லைன்னு பண்ணினா என்ன அர்த்தம்?"

"இதே பாரு... நான் சந்தோஷமா வெளிநாட்டுக்குப் போக விரும்பறேன். இப்படி தேடி வந்து என் நிம்மதியைக் கெடுக்காதே. உன் கேள்விக்கு சுருக்கமா பதில் சொல்லிடுறேன்.

உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்ட நந்தகுமார் வேற... இப்ப இருக்கற நந்தகுமார் வேற. அந்த நந்தகுமார் 'ஹீரோ' இல்ல. சாதாரண இளைஞன். ஆனா நான் இப்ப அப்படி இல்ல; ஒரு 'ஹீரோ'. எனக்கு நிறைய விஷயம் தேவைப்படுது. அதுல ஒண்ணு 'இமேஜ்'! கல்யாணம் பண்ணா அது வேற மாதிரி போயிடும். அதை புரிஞ்சுக்கிட்டு என்னைவிட்டு விலகிப் போ..."

"நந்து... இதுதான் விஷயம்னா நான் காத்துக்கிட்டு இருப்பேனே...?"

"அது சரி... அந்தப் பாவத்தை அப்புறம் எந்தக் கங்கையில நான் குளிச்சு கரைக்க?"

"நந்து.. காத்திருக்கறதுல எனக்கு எந்த வருத்தம்மும் இல்ல..."

"நாசூக்கா சொல்லிப் பார்த்தேன். உனக்குப் புரியல. இப்ப வெளிப்படையா சொல்றேன்... கேட்டுக்கோ. நான் ஒரு 'ஹீரோ'. நீயோ சாதாரணப் பெண். 'ஹீரோ'க்கு 'ஹீரோ'யின்தான் சரியான ஜோடியா இருக்க முடியும். அதோ தெரியறாளே... சாருலதா! அவளை மாதிரின்னு வெச்சுக்கயேன்..." – என்றபடி மந்தாகினியை



அவளுக்குக் காட்டினான்.

நளினிக்கு முதல் தடவையாக 'சுரீர்' என்று முள் குத்துவது போல இருந்தது.

அவனிடத்தில் ஒரு தெற்றுச் சிரிப்பு.

பார்த்துக்கொண்டிருந்த உதவி இயக்குநர்களில் ஒருவர் வரவும் அவரிடம் திரும்ப ஆரம்பித்தான். அவள் ஸ்தம்பித்துப் போய்விட்டிருந்தாள்.

## 8

**வா**ழ்க்கைச் சம்பவங்களுக்கு ஆதாரமாக இருப்பவை நமது செயல்கள்தான் என்பது பலரது கருத்து. நம் ஒட்டுமொத்த செயல்பாடுகளைத் தாம் வாழ்க்கை என்கிறோம். அதே நேரம் அந்த வாழ்வையும் நமது முனைப்பால் வாழ்வதாக நினைக்கிறோம். ஆனால் உண்மை அதுவன்று. இந்த உடம்பில் ஒரு விஷயம்கூட நம்முடைய கட்டுப்பாட்டில் கிடையாது. ரத்த ஓட்டம், இதயத் துடிப்பு, சுரப்பிகளின் செயல்பாடு, பசி– தாகம் என்று எல்லாமே அதனதன் போக்கில் நடைபெறுவனவே! மனம் அதை உணர்ந்து, அதற்குத் தேவையானதைச் செய்து தருகிறது. அந்தச் சித்தரும் இதையேதான் சொன்னார்.

"நீ சுவாசிப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறாய். உண்மை அதுவன்று... சுவாசம் ஓர் இயற்கை நடப்பு. உன் மனோதிடத்தால் அதைத் தடுத்து வேண்டுமானால் நிறுத்தலாம். தடுத்துக்கொள்வது என்பது மனோ முனைப்பு. ஆனால், எவ்வளவு நேரம் அப்படிச் செய்ய முடியும்? குறிப்பிட்ட காலவரையறை உள்ளது. அதற்கு மேல் செய்தால் உடம்பு ஒத்துழைக்காது.

வாழ்க்கையிலும் இயற்கைக்கு எதிராக செயல்களை ஏதோ சிறிது நேரம் செய்யலாம். தொடர்ச்சியாகச் செய்ய முடியாது.

**ந**ளினியின் அறைக் கதவு மூடியே இருந்தது. சாதாரணமாகக் காலை ஏழு மணிக்கு மேல் அது மூடிக் கிடந்ததே இல்லை. ஆனால், அன்று இதை யாரும் பார்த்ததில்லை. மணி ஒன்பதைத் தாண்டப்

போகிறது. கதவு திறக்கவில்லை. முகுந்தனுக்கு நெற்றிப் பொட்டில் குறுகுறுத்தது.

கதவு அருகே போய் நின்று பார்த்தான். மறுபுறமாக சாவித் துவாரத்தில் அடைப்பு. உள்ளே எதையும் பார்க்க முடியவில்லை. முகுந்தனுக்குள் துடிப்பு அதிகரிக்க ஆரம்பித்தது. அறையைச் சுற்றி வந்தான். ஜன்னலையும் அடைத்து வைத்திருந்தாள்.

"நளினி... ஏய், நளினி..."– என்று கதவுக்கு முன்னால் நின்று கத்தியவன், கையைப் பிசைந்துகொண்டான். ரங்கநாதனும், கனகமும் அவன் சப்தம் கேட்டு வந்தனர்.

"அப்பா... 'சம்திங் ராங்'. மணி ஒன்பதாகியும் எழுந்திருக்கல பாருங்க..."

"நானும் இதைத்தாம்ப்பா யோசிச்சேன்... உள்ளே இவ அப்படி என்னதான் பண்ணுறா?"

"என்னப்பா கேள்வி... கதவை உடைக்க வேண்டியதுதான். ஏன்னா... நளினி இப்ப சுயநினைவுல இருக்கற மாதிரியே எனக்குத் தெரியல..."

"ஐய்யய்யோ... என்னடா என்னென்னவோ சொல்றே. நளினி... அம்மாடி..."

கனகமும் சோக ராகம் பாட ஆரம்பித்தாள். இறுதியில் சினிமாக்களில் பார்ப்பது போல கதவை உடைத்துக்கொண்டுதான் உள்ளே செல்ல வேண்டியது வந்தது.

அங்கே கட்டிலின் மேல் நளினி ஆழ்ந்த தூக்கத்தில்... அருகில் அவள் விழுங்கிய தூக்க மாத்திரைகளின் அட்டைகள். சுமாராக ஐம்பதை விழுங்கி இருந்தாள்.

அதுவே முகுந்தனுக்குத் தீவிரத்தைப் புரிய வைத்துவிட்டது. அதையொட்டி ஒரு கடிதம். எடுத்துப் படித்தான்.

'நந்து அத்தான் இல்லாத கல்யாண வாழ்க்கையை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. இனி அவர் என்னைத் திருமணம் செய்வார் என்கிற



நம்பிக்கையும் போய்விட்டது. நான் ஒரு தவறும் செய்யவில்லை. ஆனால், எனக்குக் கடவுள் மிகப்பெரிய தண்டனையை அளித்துவிட்டான். அந்தக் கடவுளிடமே நியாயம் கேட்கச் செல்கிறேன். என் சாவுக்கு நானே காரணம்... வேறு யாருமல்ல!'

– என்று எழுதிக் கையெழுத்தும் போட்டிருந்தாள்.

படித்த நொடியில் அதை மடக்கிச் சட்டைப்பையில் வைத்துக்கொண்ட முகுந்தன், அவளை அப்படியே தூக்கியபடி கார் நோக்கி ஓடினான். பின்னாலேயே ரங்கநாதனும், கனகமும் ஓடினர்.

நியூயார்க்!

'மேன்ஹாட்டன்' என்னும் பகுதியில் படப்பிடிப்புக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தியாவை அப்படியே பிரதிபலிக்கும் இடம். எங்கு பார்த்தாலும் ஒரே கூட்டம். காரை 'பார்க்' செய்வதும்–எடுப்பதும் தினசரி 'ஜிம்'முக்குச் செல்வதைப் போல கடுமையான பயிற்சிக்குரிய செயல். நிறைய இந்தியர்கள் கண்ணில்பட்டனர். அவர்களில் குஜராத்தியினர் அதிகம்.

'மேக்கப்' போட்டுக்கொண்டு ஒரு கதாபாத்திரமாக காரில் அமர்ந்திருக்கும் நந்து அந்தச் சூழலில் தன்னை மறந்திருந்தான்... முற்றிலும் புதிய சூழல்; புதிய மனிதர்கள்! உலகம் எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்பதை ஐந்து நிமிடம் இங்கே அமர்ந்துகொண்டு கவனித்தாலே போதும். நந்தகுமாரும் கவனித்தான். 'சூட்டிங்' ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடந்துகொண்டிருந்தன.

கதாநாயகி பரபரப்பான கடை வீதியில் கதாநாயகனைத் தேடி வருகிறாள். அவளைப் பார்த்துவிடும் கதாநாயகன் அவளுக்கு விளையாட்டுக் காட்ட விரும்பி, ஒளிந்துகொள்கிறான். ஆனால், அவன் ஒளிந்துகொண்டதே விபரீதமாகிவிடுகிறது. அந்த இடைவெளியில் ஒரு தீவிரவாதி, காதலியை இழுத்துப் பிடித்து அவள் கழுத்துக்கு நேராகத் துப்பாக்கியை வைத்து தப்பிக்க முயல்கிறான்.

போலீஸ்காரர்கள் சுற்றி வளைக்கின்றனர். அந்தத் தெருவே வெறித்துப் போய் பார்க்கிறது.

அடுத்து என்ன நடக்கும் என்பது தெரியாத நிலை... திக் திக் நிமிடங்கள் ஆரம்பம்.

திரையில் சுமார் இருபது நிமிடம் வரப்போகும் காட்சி. அதற்குத்தான் வேலைகள் நடந்துகொண்டிருந்தன. கதாநாயகி இந்தியாவிலேயே மிக காற்றோட்டமான மார்பகங்களை உடையவள். அமெரிக்காவில் காற்றுக்குப் பதில் புயல் வீசலாம். அப்படியொரு தாராளம்!

புசுபுசுவென்று கம்பளி 'கோட்'. அதில் மேல் பாகத்தில் பட்டன் போடாமல் விட்டிருந்தாள். தலைமுடியையும் சாயம் போட்டு, ஏதேதோ செய்திருந்தாள். தோளில் ஒரு பை. அவள் பார்வை அவ்வப்போது நந்தகுமாரை அளந்தபடி இருந்தது. அவனும் அவளை நோக்கிக்கொண்டிருந்தான்.

தயாரிப்பு மேலாளர் அப்படியும் இப்படியுமாக நடந்தார். அவரது செல்போன் சப்திக்கவும் எடுத்துக் காதில் வைத்தார். முகத்தில் அதிர்ச்சி பரவியதை வைத்து அவர் காதில் கெட்ட செய்தி ஒரு எலி போல புகுந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. கையை உதறிக்கொண்டு– ஒரு காருக்குள் அடங்கி இருந்த நந்தகுமாரை நோக்கித்தான் ஓடி வந்தார்.

அப்படியே நம்ம ஊர் புத்தி! அவர் வந்த வேகத்தில் பல கார்கள் 'பிரேக்' அடித்து 'கிரீச்'சிட்டு நின்றதில் சில மோதிக் கொள்ளக்கூடச் செய்தன. உலகம் முழுக்க மனிதர்கள் ஒன்று போலத்தான் இருக்கிறார்கள்.

"டர்ட்டி பிட்ச்... இடியட்..." என்று கார்க்காரர்கள் முணுமுணுக்க... நந்துவை நெருங்கி அவனிடம் செல்போனை நீட்டினார் தயாரிப்பு மேலாளர்.

"என்ன சார்?"

"பேசுங்க... உங்க அம்மா 'லைன்'ல இருக்காங்க..."

"அம்மாவா...?" என்று வாயைப் பிளந்தபடியே செல்போனை



அரைமனதாகக் காதில் வைத்தான்.

"நந்தா..."

"என்னம்மா..."

"நல்லா இருக்கியா?"

"ம்... இப்ப இதை கேக்கத்தான் போன் பண்ணினியா?"

"இல்லப்பா... இங்க நடக்கக்கூடாத ஒரு விஷயம் நடந்து போச்சு..."

"என்னம்மா?"

"நளினி உன்னை பார்க்க 'ஏர்போர்ட்'டுக்கு வந்தாளா?"

"அதுக்கென்னம்மா... நான்தான் அவளுக்கு வேற கல்யாணம் பண்ணி வைன்னு சொல்லிட்டேன்ல. இன்னும் என்ன அவளைப் பத்தி பேச்சு?"

"அவகிட்டேயும் நீ இதே பேச்சு பேசினியா?"

"பேசினேன். நான் இப்ப 'ஷூட்டிங்'குல இருக்கேன். அதுவும் 'மெயின் ரோல்'ல.... இப்ப பேசற விஷயமா இது?"

"இல்லய்யா... அவ தூக்க மாத்தரை சாப்பிட்டுட்டா. நல்லவேளை.. முகுந்தன் பார்த்துட்டான். இல்லாட்டி ரொம்ப விபரீதமா போயிருக்கும்..."

"நினைச்சேன்... இப்படியெல்லாம் ஏதாவது அவ செய்துக்குவாள்ன்னு நானும் எதிர்பார்த்தேன். ஆனா ஒண்ணு... இதெல்லாம் சுத்த முட்டாள்தனம். இந்த மாதிரி ஏதாவது செய்துகிட்டால் எல்லாம் வருத்தப்பட்டு மனசை மாத்திக்குவேன்னு நினைக்காதீங்க. என் வரையில விட்டது விட்டதுதான்!"

"ஏண்டா இப்படியெல்லாம் பேசறே...? உனக்கே இது சரியாப் படுதா? அப்படி அவ என்னடா தப்பு பண்ணினா? ஏதோ தெரியாம பேட்டி கொடுத்துட்டா! அதுக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? உன் அத்தை– மாமா ரெண்டு பேரும் உன்னை நினைச்சு அப்படியே நொறுங்கிப் போய் கிடக்கறாங்கடா..."

“ஏம்மா... நளினிக்கு என்ன குறை? அவளுக்கு என்னை விட்டா வேறு மாப்பிளையே கிடைக்க மாட்டாங்களா? ஏன் இப்படி என்னை அவளுக்குக் கட்டி வைக்க போராடுறீங்க? கல்யாணம்கறது இயல்பா நடக்க வேண்டிய விஷயம்... அடிச்சு கனிய வைக்கறது இல்ல. இது உங்களுக்குத் தெரியாதா?”

“இல்லடா... அம்மா சொல்றேன்டா. உன் எதிர்ல இருந்தா கால்லகூட விழுந்துடுவேன். ‘நளினியைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்’னு சொல்லுடா. அப்பதான் அவ சீக்கிரம் குணமாகி எழுந்திருப்பா...”

“போதும்மா... இனி இது விஷயமா போன் எல்லாம் பண்ணாதே... கல்யாணம்கறது ரொம்ப ஆசையா நடக்க வேண்டிய விஷயம். என் ஆசை இப்ப அவ மேல இல்ல. இல்லவே இல்ல...”

“அவ மேல இல்லையா... இல்லாமலா கூட சேர்ந்து சுத்தினே? ‘உனக்கு அவ, அவளுக்கு நீ’ன்னு சொல்லிச் சொல்லி வளர்த்ததெல்லாம் ஊருக்கே தெரியுமேடா...”

“அம்மா... நான் இப்ப ‘சூட்டிங்’ல இருக்கேன். எப்ப எதைப் பேசறதுன்னு தெரியாதா உனக்கு...? சாதாரண சின்ன வயசுக் கதையையெல்லாம் இனியும் சொல்லாதேம்மா. இந்த மாதிரி என்கிட்ட மட்டுமில்ல, யாரும் யார்கிட்டேயும் சொல்லாதீங்க. கல்யாணம்கறது அவங்கவங்க சொந்த விஷயம். அதைத் தீர்மானிக்க வேண்டியது சம்பந்தப்பட்டவங்கதான். நீங்க இல்ல. உங்க ஆசைக்காகவெல்லாம் கல்யாணம் பண்ணிக்க முடியாது...”

“இவ்வளவு பேசற நீ எதுக்குடா நிச்சயத்துக்கு சம்மதிச்சே...? மாப்ளை மாதிரி அவ பக்கத்துல உட்கார்ந்து ‘போட்டோ’வும் எடுத்துக்கிட்டியே... அப்ப எங்க போச்சு இந்தப் புத்தி?”

“அப்பகூட குழப்பத்துலதான் இருந்தேன். சொல்லப்போனா உங்க தயவுல அந்நேரம் இருந்தேன். ஆகையால உங்க பேச்சைக் கேட்க வேண்டிய நிலை. ஆனா, இப்ப என் கால்ல நிக்கக் கத்துக்கிட்டேன். இனி எனக்கு யார் தயவும் தேவையில்லை.

தொடர்ந்து இதே மாதிரி நீ போன் பண்ணேன்னா... அவ தூக்க மாத்திரை சாப்பிட்ட மாதிரி இங்க நான் சாப்பிட்டுடுவேன்.



சின்னதா முடிய வேண்டியதைப் பெருசாக்காதே! மகனையே கொன்ன தாயால்ல அப்புறம் உன்னை இந்த உலகம் பார்க்கும். யோசிச்சுக்கோ...” என்று செல்போனை துண்டித்தான்.

வெளியே... தயாரிப்பு மேலாளர் எல்லோரிடமும் கெஞ்சிக்கொண்டிருந்தார். இந்தியாவாக இருந்தால்... ‘சரிதான் போங்கடா’ என்று போய்க்கொண்டே இருக்கலாம். இங்கே முடியாது. போலீசும் வந்துவிட்டது. பரங்கிப் பழத்தால் செய்தது மாதிரி உடம்பு. செர்ரி போன்ற கண்கள். யாரிடமும் உயரக் குறைவு இல்லை. எல்லோருமே புஷ்டி.

ஒன்றுக்கு பத்து ஜீவநதிகள்; விளைவதற்கான இடமோ இந்தியாவைப் போல பத்து மடங்கு கூடுதலாக... விளைச்சலுக்கு கேட்பானேன்! வீட்டுக்கு வீடு நான்கைந்து கார்கள்... அதுதான் அமெரிக்காவில் பெரிய சிக்கல். மனிதர்களுக்கு அங்கே தேவையான இடம் குறைவுதான்; கார்களுக்குத்தான் கூடுதலான இடம் தேவை. அதனாலேயே எப்பொழுதும் பிரச்சினை.

அங்கு நடந்து முடிந்துவிட்ட சம்பவம்- தயாரிப்பாளரையும் இழுத்து வந்தது. ‘ஹீரோ’யினும் தன் காரைவிட்டு இறங்கி நந்துவிடம் வந்தவளாக, “என்ன பிரச்சினை...?” என்றாள்.

சிடுசிடுவென்று இருந்த அவன், அவளைப் பார்க்கவும் சமாதானம் ஆனான். செயற்கையான சிரிப்புக்கு மாறினான்.

“நத்திங்.... ஒரு சின்ன ஆக்சிடென்ட்” என்றான்.

அவள்... காருக்குள்ளே ஏறி, அவன் அருகில் அமர்ந்தபடியே வெளியே பார்த்தாள்.

ஒரு வழியாக அபராதம் போட்டுப் பிரச்சினையை போலீஸ்காரர்கள் முடிவுக்குக் கொண்டு வந்திருந்தனர். தயாரிப்பு மேலாளர், வளத்தியான போலீஸ்காரருடன் கை குலுக்கிக்கொண்டிருந்தார்.

“அங்க பிரச்சினை முடிஞ்சிடுச்சி. பை த பை... நாளைக்கு நயாகராவுல ‘சூட்டிங்’காம். நீங்க ஏற்கெனவே அங்க

போயிருக்கீங்கதானே?” என்று கதாநாயகி சகஜமாகப் பேச ஆரம்பித்தாள்.

“இல்லை. எனக்கு இந்த வெளிநாட்டு ‘டிரிப்’ ரொம்பவும் புதுசு மேடம்...”

“மேடமா... வாட் இஸ் திஸ் நான்சென்ஸ்?”

“பின்ன.... உங்கள என்ன சொல்லி கூப்பிடுறது?”

“எனக்கு அழகா சாருலதான்னு பேர் இருக்கு மிஸ்டர் நந்தகுமார்...”

“ஸோ... சாருலதான்னு கூப்பிடுங்கிறீங்க...”

“நந்தா... என்ன இது? நாம நடிக்கற இந்தப் படம் மட்டும் நல்லா ஓடிட்டா நமக்கு குறைந்தது பத்து படம் நிச்சயம். நாமளும் ஒரு காதல்பறவையா பத்திரிகைக்காரங்க முன்னால திரியணும். நாம கல்யாணம் பண்ணிப்போமா... மாட்டோமான்னு எல்லாரும் சிண்டைப் பிச்சுக்கணும்...”

“ஏன் அப்படி?”

“உங்களுக்கு இந்த சினிமா உலகத்தைப் பத்தி சரியாத் தெரியல. ஒரு நடிகரோ, நடிகையோ ரசிகர்கள் மனசுல மிதமா கொதிச்சுட்டிருக்கற பால் மாதிரியே இருக்கணும். பொங்கி வழிஞ்சுடவும் கூடாது, ஆறிப் போயிடவும் கூடாது. அதேபோல ஒரு ஜோடி இங்க ‘செட்’ ஆகறது ரொம்பக் கஷ்டம். ஆகிட்டா அந்த ஜோடி பிரிஞ்சுடாம அவங்கதான் பார்த்துக்கணும். நான் சொல்றதுல பல ரகசியங்களும் இருக்கு...” – சாருலதா மார்பு விம்ம ஒரு விஷயத்தை சொல்லத் தொடங்கினாள்.

“என்னை ‘புக்’ பண்றதுக்கு வர்றவங்ககிட்ட ‘ஹீரோ யாரு?’ன்னு கேட்பேன். அவங்க யாரைப் போடலாம்னு என்னைக் கேட்டா... உடனே உங்க பேரைச் சொல்வேன். பதிலுக்கு நீங்களும் என் பெயரைச் சொல்லணும். இதனால இன்னொரு ஜோடி உள்ளே வராம பாத்துக்கலாம்...” – சாரு ஒரு ரகசியத்தைத்தான் சொல்லி இருந்தாள். அதற்குள் விசில் சப்தம் கேட்டு, காட்சிக்கான விஷயம் காதில் விழ ஆரம்பித்துவிட்டது.



“ஓ.கே... நான் ராத்திரி ‘ரூம்’ல பேசறேன். நம்ம ரெண்டு பேருக்கும் பக்கத்து பக்கத்து அறைதான். ஆனா, நமக்கு ஒரே அறை போதும். என்னவோ தெரியல... உங்கள எனக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு. ரெண்டு பேருக்கும் பேர் பொருத்தம் இருக்கறதாகவும் எங்க ஜோசியர் சொல்லிட்டார். நீங்க வேணா பாருங்க... இந்தப் படத்துலே நம்ம ஒவ்வொரு ‘டூயட்’டும் பின்னப் போகுது...” என்றபடியே இறங்கி தனக்கான ‘பொசிஷன்’ நோக்கி செல்லத் தொடங்கினாள் சாருலதா என்கிற அந்த நடிகை.

நந்தகுமாருக்கு எல்லாமே கனவு போல இருந்தது. சினிமா பத்திரிகை ‘ஸ்டில்’களில் அவளை நிறையவே பார்த்து ஜொள்ளு விட்டிருக்கிறான். அப்போதெல்லாம் அவளோடு நடிப்போம் என்றோ... அவள் இப்படிப் பேசுவாள் என்றோ அவன் கனவுகூட கண்டதில்லை.

வாயைப் பிளந்துவிட்டான். அதை யார் பார்த்தார்களோ இல்லையோ... இரண்டு ‘லைட் பாய்’கள் பார்த்தனர். அர்த்தத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்தும் கொண்டனர்.

“என்னா நாகராஜி... ‘பார்ட்டி’ ஒரு புதுமுகத்துக்கே ‘பிட்’டு போடுது...”

“அது சரியான பிசாசாச்சே...! இன்னிக்கு ராத்திரிக்கு எப்படியும் இந்தப் புள்ளையைப் பொட்லமா கட்டிடுவா. இவன் சம்பளத்தையும் அப்படியே கறந்துடுவா. இவனும் எல்லாம் போனதுக்கு பொறவுதான் கண்ணு முழிச்சுக்குவானோ... இல்லை முந்தியே முழிச்சுக்குவானோ... யாருக்குத் தெரியும்...?”

“பையனைப் பார்த்தா பாவமா இருக்கு. நல்ல குடும்பத்துல இருந்து வந்திருக்கிறான். எடுத்த எடுப்புல ‘ஹீரோ’ வேஷம். ஆனா, இது தயாரிப்பாளரைக் கவுத்து ‘ஹீரோ’யினா ஆகிடிச்சு. இப்ப இவனையும் கவுக்குது. கல்யாணத்துல போய் முடிக்கப் போகுது பாரு...” – என்று பேசிக்கொண்டே ஒரு ‘தெர்மோகோலை’ வளைத்துப் பிடித்து, அதன் மேல் படும் சூரிய ஒளியை சாலையில் சிதறச் செய்தான்.

அடுத்தவனும் அதே மாதிரி இன்னொரு பக்கமாய் நின்றுகொள்ள... சாலையில் புதுவித வெளிச்சம். அந்த மாதிரி வெளிச்சம்தான் சினிமா 'காமிரா'வுக்கும் பிடித்தமானது. காட்சிகளை லட்டு போல அள்ளி அள்ளி விழுங்கும். 'காமிராக்காரர் ஜாலம் செய்தார்' என்ற விமர்சனங்களும் எழுதுவார்கள்.

## 9

ஆசை என்னும் உணர்ச்சியைப் பற்றி யோசித்துப் பார்த்தால் இறுதியில் சிரிப்புதான் மிஞ்சும்! நாம் எதன் மேலெல்லாம் ஆசை வைத்திருக்கிறோமோ... அதெல்லாம் நம்மைவிட்டு பிரியப் போகிறது அல்லது பிரிந்து போயிருக்கிறது.

ஆசை என்பது ஓர் 'ஆசிட்' மாதிரி. எவ்வளவு அழகிய ஒன்றும் ஆசைப்பட்ட பின் செல்லரித்துப் போய் விகாரமாகிவிடும். முதலில் வாங்கிய கடிகாரம், முதலில் வாங்கிய வீடு, முதலில் வாங்கிய கார் என்று வரிசைப்படுத்திவிட்டு இன்று அதன் மேல் நமக்கு இருக்கும் பற்றைப் பற்றி யோசித்தால் வேடிக்கையாக இருக்கும்.

நாம் ஆசையா வாங்கிய ஒரு பொருள் அந்த நேரத்துக்கு மட்டும் மகிழ்ச்சியைத் தந்து– பின்னர் அதன் இடத்தை அடைத்துக்கொண்டிருக்கும் வேறு ஒன்றாக மாறி இருக்கும். இதையெல்லாம் பார்த்த பிறகும் ஆசைப்படாமல் இருக்க நம்மால் முடிவதில்லை என்பதுதான் கொடுமை.

அந்தச் சித்தரும் இதையேதான் சொன்னார். "ஆசை வைக்காதே... ஆசை வைக்காதே. அவன் மேல நீ வைக்கற ஆசை ரொம்ப ஆபத்தான ஆசை..." என்றார்– அதுவும் நளினி ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்கு திரும்பும்போது...

அது அவள் காதிலும் விழுந்தது.

அனந்தநாராயணனும், சாந்த லட்சுமியும் ரங்கநாதன் வீட்டுக்கே வந்து 'ஹாலில்' உட்கார்ந்திருந்தனர்.

எதிரில் ரங்கநாதன், கனகம் மற்றும் முகுந்தன்.





முகுந்தன் 'ஜிவுஜிவு' என சிவந்து- கோபத்தில் கொழுந்துவிட்டான்.

கனகம் கண்கள் கலங்கி இருந்தன.

"நடந்தது நடந்து போச்சு. இதுக்கு மேல அந்த நிச்சயதார்த்தத்தைப் பத்தி நினைச்சு நமக்கு நாமே குழப்பிக்கறதுல அர்த்தம் இல்ல..." என்ற அனந்தநாராயணனுக்கு ஆரம்பம் முதலே அதுதான் கருத்தாக இருந்தது.

"இந்தப் பொண்ணு இப்படி பண்ணிக்குவாள்ன்னு யாரும் எதிர்பார்க்கலை. நாமெல்லாம் ஒண்ணா சேர்ந்து இனி இந்தக் கல்யாணத்தைப் பத்தி யோசிக்க வேண்டாம்னு முடிவுக்கு வந்தாலும், அவளால வர முடியுமான்னு தெரியல. இப்போதைக்கு கொஞ்சநாள் வேணும்னா பேசாம இருக்கலாம். ஆனா தொடர்ந்து இருக்க முடியுமா... தெரியல..."

"போதும்.. இந்தப் பேச்சை இதோட விடுங்க. என் தங்கை மனசை மாத்தி அவளை ஒரு பெரிய அளவுக்குக் கொண்டு வர என்னால முடியும். இவ்வளவுக்கும் பிறகு ஒருவேளை நந்தகுமார் திரும்பி வந்தாலும், நான் அவனை மன்னிக்கறதா இல்லை..." என்று முகுந்தன் சினந்து சீறினான்.

அனந்தநாராயணன் சட்டென்று எழுந்தார்..

"நீ இப்ப சொன்ன மாதிரி நடந்தா என்னைவிட சந்தோஷப்படுற நபர் வேறு யாரும் இருக்க முடியாது. நந்து நிச்சயம் ஒரு நாள் வருத்தப்படத்தான் போறான். அவன் வருத்தப்படும்போது நளினி அமோகமா இருக்கணும். அப்படி இருந்தாத்தான் இந்தப் பயலுக்கு தான் போட்ட ஆட்டம் எவ்வளவு கோரமானதுன்னு புரியும்.

சாந்தா, புறப்படு... இனி நமக்கு இந்த வீட்ல எந்த வேலையும் இல்ல. ரங்கநாதா... உன் பொண்ணு இனி என் வீட்டுக்கு வர வேண்டாம். அவ கல்யாணப் பத்திரிகைதான் வரணும். நானும், சாந்தாவும் கல்யாணத்துக்குக் கட்டாயம் வருவோம்..." – என்று சொன்னபடியே வாசல் நோக்கி விறுவிறுவென்று நடந்தார் அனந்தநாராயணன். கூடவே சோகமாகத் தொடர்ந்தாள் சாந்த லட்சுமி.



ரங்கநாதனும், கனகமும் பார்த்துக்கொண்டே இருந்தனர். அவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை.

இரவு நேரம்!

ஆனால், மின்சாரத்தின் உதவியால் ஊரையே பகலாக்கி வைத்திருந்தனர் அமெரிக்கர்கள். ஓட்டலின் மாடியில் அமர்ந்திருந்த நந்தகுமாருக்குள் ஏராளமான பிரமிப்பு. 'இந்த உலகம், இதில் வாழும் மனிதன், அவனது விஸ்வரூபம் எல்லாம்தான் எத்தனை பெரியது?' என்று யோசித்துப் பெருமூச்சுவிட்டான். அவன் முன்னே மிக உயர்ந்த ஜாதி 'ஒயின்'.

அதன் வாசமே அமர்க்களமாக இருந்தது. 'சென்ட்' போல எடுத்துப் பூசிக்கொள்ளலாம். இருந்தும் அது குடிக்கும் பொருளாகிவிட்டதால் அவனுக்குத் தயக்கமாக இருந்தது.

சாருலதா தளர்ச்சியான ஒரு 'கவுன்' அணிந்து கையில் ஒரு 'பைப் சிகரெட்'டுடன் அவன் அருகில் வந்து அமர்ந்தாள். ஓரளவு குடித்து அலங்கோலமாகி இருந்தாள். பகல் முழுக்க 'சூட்டிங்'... பெண்டு கழன்றிருந்தது.

நந்தகுமார் நிறைய 'டேக்' வாங்கிவிட்டான். நடிப்பு விஷயத்தில் அவன் நினைத்துக்கொண்டிருந்தது ஒன்று. ஆனால் அன்று நடந்ததே வேறு.

டைரக்டர் படப்பிடிப்புத் தளத்தில், "சரியான மரக்கட்டையா இருக்கியேப்பா..." என்று பல பேர் காதில் விழும்படியாகத் திட்டிவிட்டார். அதெல்லாம் அவனை உறுத்திக்கொண்டே இருந்தது. தயாரிப்பாளர்கூட அவன் அருகே வந்து ஆறுதலாக எதுவும் பேசவில்லை.

"என்ன நந்தா... டைரக்டர் திட்டிட்டாருங்கற கவலையா?" – என்று சாருலதாதான் அந்த விஷயத்தில் இருந்தே பேச்சை ஆரம்பித்தாள்.

"ஆமாம்... நான் என்ன பிறவி நடிகனா...? புதுசுதானே, அதுக்காக இப்படியா பேசுவாரு...?" என்றபோது குரல் உடைந்துபோனது.

"ஹேய்... என்னய்யா நீ? 'கமான்'யா! நானெல்லாம் கன்னத்துல

அடியே வாங்கி இருக்கேன். டைரக்டருங்கன்னா அப்படித்தான்...” என்று ஒயினை எடுத்து அவன் உதடுகள் அருகே கொண்டு போனாள்.

நியூயார்க் நகர குளிருக்கு அவளது பேச்சும், அந்த நெருக்கமும், உதட்டோர ஒயினும் 'பரம சுகம்' என்பது இப்படித்தான் இருக்க முடியும்' என்றது.

அவளும் பருகினாள். கண்களில் மிக மிக சன்னமாக போதை ஊறி இருந்தது. செம்பட்டைக் கூந்தலை ஒதுக்கிவிட்டுக்கொண்டாள். வேண்டுமென்றே அவன் முன் மார்பை முன்னுக்குக் கொண்டு வந்து சோம்பல் முறித்தாள். அப்போது ஒரு முண்டுதல் நிகழ்ந்து, அதைப் பார்த்து நந்தகுமார் சூடானான். பின் செயற்கையாகக் கழுத்தை திருப்பிக்கொண்டான். அவளுக்கும் புரிந்தது.

“என்ன நந்தா... என்னை உனக்குப் பிடிக்கலையா?” என்றாள் சற்று கொண்டலான குரலில்.

“அது... அது...”

“எனக்கு எல்லா ஆம்பளைகளைப் பற்றியும் நல்லாவே தெரியும். குறிப்பா... உன்னைப் பற்றி ரொம்பவே தெரியும்...”– அவள் ஏதோ ரகசியம் பேசுகிற மாதிரி இருந்தது.

நந்தகுமார் அவளைக் கூர்ந்து பார்த்தான். இருப்பது அறுபது மாடிக் கட்டடத்தின் உயரத்தில்... அவ்வப்பொழுது தட்டாம்பூச்சிகள் போல விமானங்கள் வேறு போய் வந்தபடி இருந்தன. நம் ஊர் சோளக்கொல்லைதான் தட்டாம்பூச்சிகள் பறக்கும் வானம்... இங்கே அதுவே வேறாக இருந்து, தரையில் நியூயார்க் நகரம் ஜொலி ஜொலியென்று ஜொலித்தது.

“என்ன நந்தா... எதுவும் பேச மாட்டேங்கறே! காலையில மரியாதையா பேசினவ இப்ப வா... போன்னு பேசறாளேன்னா...? பழகப் பழக இந்த 'பீல்டு'ல இடைவெளி குறைஞ்சுக்கிட்டே போகும். போலித்தனத்துக்கெல்லாம் இடமே கிடையாது. எவ்வளவு வேணும்னாலும் சரி, 'கேமரா' முன்னால நடிக்கலாம். ஆனா, பின்னால கூடாது...”



“இப்ப நான் நடிக்கலையே சாரு...”

“நடிக்கறதா நான் சொல்லலை. ஆனா, நிறைய விஷயங்கள் உனக்குப் பின்னால மறைஞ்சிருக்கு...”

“மறைஞ்சிருக்கா...?”

“ஆமா. உன் விஷயத்தைப் பத்தி 'புரொட்யூசர்' என்கிட்ட பேசினார். உன் கூடவே உனக்கு ஆறுதலா இருக்கச் சொன்னார்...”

“சாரு...”

“நான் இருபது படம் பண்ணிட்டவ. நடிகையாகறதுக்கு முந்தி நான் பட்டபாடு ஒரு நாய்கூட பட்டிருக்காது. எப்படியோ முட்டி மோதி 'ஹீரோயினா'யிட்டேன். ரசிகர்கள் மனசுல கதாநாயகியா இருக்கறவ நிஜத்துல ஒரு சருகு. என் பழைய வாழ்க்கை பற்றிச் சுருக்கமா உன்கிட்ட சொல்லிட்டேன். எனக்குப் பெருசா எந்த எதிர்பார்ப்பும் கிடையாது. எவ்வளவு நாளைக்கு இப்படியே ஓட முடியுமோ ஓடிட்டு, அப்புறமா அப்படியே கதையை முடிச்சுக்கணும்.

நடிகைக்கும், செயற்கையான அழகுக்கும் மட்டும் தொடர்பு இருக்கறதா ரொம்ப பேர் நினைச்சுக்கிட்டு இருக்காங்க. அதெல்லாம் தப்பு. நடிகைக்கும், தற்கொலைக்கும்தான் பெரிய அளவுல சம்பந்தம் இருக்கு. 'அது ஏன்?'னு என்கிட்ட கேட்டா, ஒரு புத்தகம் எழுதற அளவுக்கு விஷயத்தைச் சொல்வேன்...” – அந்த இரவில் அவன் முற்றிலும் எதிர்பாராத ஒரு பேச்சை அவள் பேச, நந்தகுமாருக்கு நாக்கு வறளத் தொடங்கியது.

“ஒரு வகையில உன்னை நினைச்சு பெருமைப்படுறேன். உன் மாதிரி 'கேரக்டர்'கள் சினிமா கதையிலதான் வந்திருக்காங்க. ஆனா, நிஜ வாழ்க்கையில இப்பத்தான் பார்க்கறேன். நந்து! உனக்கு எப்படிப்பட்ட உதவி வேணும்னாலும் செய்யத் தயாரா இருக்கேன். சொல்லப்போனா ஒரு வாடகை மனைவியா உன்கூட வாழக்கூட நான் தயார். ஆனா, அது உன்னை கொச்சைப்படுத்திடும். அதனால அந்த விஷயத்துல உன்னை கட்டாயப்படுத்தத் தயாரில்லை...” – சாருலதா அவ்வளவு விஸ்தாரமாகப் பேசி முடிக்கவும், அவன் கண்கள் முதல் தடவையாக கலங்கவும் சரியாக இருந்தது.

"சாரு... நான் அழவே கூடாதுங்கற கொள்கை உடையவன். சாகும்போதுகூட சிரிச்சுக்கிட்டுச் சாகணும்கறது என் விருப்பம். ஆனா தயாரிப்பாளரும், நீயும் என்னைக் கண் கலங்க வெச்சுட்டீங்க. இந்தத் துறை மேல எனக்கு பெருசா மதிப்பு கிடையாது. இதை ஒரு சூதாட்டக் களமாகத்தான் பார்க்கறேன். அதேபோல இந்த உலகத்துல நுழைஞ்சிட்ட உன்னைப் போன்ற நடிகைகள் மேலேயும் பெருசா மதிப்போ, மரியாதையோ கிடையாது. 'உடம்பை வெச்சு பிழைக்கறவங்கதானே?'ங்கற எண்ணம்தான் காரணம். ஆனா, இப்ப அது மாறிப்போச்சு. உனக்கு இப்ப எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியல. தயவுசெய்து என்னைப் பற்றி உனக்குத் தெரிஞ்சது உன்னோடு போகட்டும். அது யாருக்கும் தெரியக்கூடாது..."

"தெரியாது நந்தா... நிச்சயமா தெரியாது. 'புரொட்யூசரே'கூட உன்கிட்ட... 'நான் ரெண்டே ரெண்டு பேர்கிட்ட சொல்வேன்'னு சொல்லி இருந்தாராமே...?"

"ஆமா. அந்த ரெண்டு பேர்ல ஒருத்தர் என் அப்பாங்கறது தெரியும். ஆனா, ரெண்டாவது நபர் நீயா இருப்பேன்னு நான் கொஞ்சமும் எதிர்ப்பார்க்கல..."

"நானா இருக்கறதுதான் உனக்கு நல்லது. ஏன்னா... என்னாலதான் உனக்கு பெரிய அளவுல உதவிகள் செய்ய முடியும். ஆமா, அந்தப் பொண்ணு... அது யார் மாலினியோ, நளினியோ... ஏதோ ஒரு பேர் சொன்னாரே..."

"நளினி..."

"அவ ரொம்ப 'சென்சிடிவ்'வா..?"

"அப்படிச் சொன்னா அது சாதாரணம். அவ ரொம்ப 'பொசசிவ்'. அதுலேயும் என் விஷயத்துல ரொம்ப ரொம்ப..."

"ஆமாமா... உனக்கு அம்மை போட்டதுக்கு அந்தப் பொண்ணு அங்கப்பிரதட்சணம் பண்ணி மண்சோறு சாப்பிட்டுச்சாமே?"

"ஓ... இதையெல்லாமும் 'புரொட்யூசர்' சொல்லிட்டாரா?"

"சும்மா சொல்லலை... அப்படியே உருகிப் போய் சொன்னார். கடைசியா நிஜமாலுமே கண் கலங்கிட்டார்..."



"சாருலதா! போதும். என்னால தாங்கிக்க முடியாது. நான் இந்த நியூயார்க்ல அதையெல்லாம் மறந்திருக்கேன்..."

"அது எப்படி நந்தா... உன்னால மறக்க முடிஞ்ச விஷயங்களா இதெல்லாம்? கவலைப்படாதே... இனி உன் துக்கத்தைப் பங்கு போட்டுக்க நான் வந்துட்டேன். சினிமா கற்பனைக் கதைகள்ல நாயகியா நடிச்சுக்கிட்டிருந்த எனக்கு உலகத்துல யாருக்கும் கிடைக்காத ஒரு வாய்ப்பை நீ தந்திருக்கே! நிஜ வாழ்க்கையில – அதுவும் உயர்ந்த ஒரு நோக்கத்துக்காக நடிக்கற வாய்ப்புங்கறது சாதாரண விஷயமா என்ன?" – கேட்கும்போதே அவள் கண்கள் கலங்கின.

மீண்டும் தொடர்ந்தாள்.

"ஏன்டா பொண்ணா பிறந்தோம்... நடிகையானோம்... எவ்வளவு பாவம் பண்ணி இருந்தா இப்படி ஆகி இருப்போம்னு நான் பல முறை நினைச்சுக் குமுறினதுண்டு. ஆனா, இப்ப எனக்கு கொஞ்சம் ஆறுதலா இருக்கு. இல்லேன்னா உனக்கு உதவி செய்ய முடியுமா?" – அவள் கேட்க, முதல் தடவையாக அவளது கைகளைத் தேடிப் பற்றினான் நந்தகுமார்.

அந்தக் கைகளின் மேல் அவளது இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்தபோது... அங்கே 'மப்ளரும்– ஸ்வெட்டருமாய்' ஆஜரான தயாரிப்பு மேலாளர் அவனிடம் செல்போனை தந்து, "சார்! உங்க அப்பா 'லைன்'ல..." என்றார். அதன் பிறகு அந்த போனைக் காதில் வைக்கவே அவனுக்குத் தயக்கமாகிவிட்டது. கையிலும் ஒரு மெல்லிய நடுக்கம். தயங்கியபடியே காதருகே வைத்தான்.

"ஹலோ..."

"நான் அனந்தநாராயணன் பேசறேன். நடிகர் சார்..."

"அப்பா..."

"அட.... நான் என்ன உறவுங்கறதுகூட உனக்கு ஞாபகமிருக்கா? பரவாயில்ல... நான் கொஞ்சம் புண்ணியம் செய்திருக்கேன். உனக்கு ஒரு தகவல. அது நல்ல தகவலா... இல்லை கெட்ட தகவலான்னு எனக்குத் தெரியாது. என் வரையில கெட்ட செய்திப்பா...."

"என்ன செய்திப்பா...?"

"ஒண்ணுமில்ல. உன் அம்மாவுக்கு இந்த பூமியில வாழப் பிடிக்கலையாம். அதான் போய்ச் சேர்ந்துட்டா.."

"அப்பா...!"

அவனிடம் இருந்து செல்போன் நழுவியது. அதை சாருலதா வேகமாகக் கையில் எடுத்து காதில் வைத்தாள். அவர் பேசிக்கொண்டிருந்தார்.

"சாகும்போதுகூட அவளுக்கு உன் ஞாபகம்தான். அதே நேரம் நெஞ்சு துடிச்சு அவ சாக நீதான் காரணம்னு நான் சொல்லுவேன். ஆனா நீ அதையெல்லாம் கேட்டுக்கமாட்டே! 'விதி முடிஞ்சு போச்சு. போய்ச் சேர்ந்துட்டாள்'ன்னு சொல்வே. அதுகூட உண்மையா இருக்கலாம். வளர்ச்சிங்கற பேர்ல ஒரு பேராசை உன்னைத் திசை திருப்பி, இந்தக் குடும்பத்தையும் இப்பக் கதற விட்டுடிச்சி. அவ விருப்பப்படியே உனக்குத் தகவல் கொடுத்துட்டேன். கிளம்பி வந்து கொள்ளி போடுறதும்... போடாததும் உன் விருப்பம்.

ஏன்னா... நான் உன் வரையில தலைக்கு முழுக்குப் போட்டுட்டேன். பாவம் சாந்த லட்சுமி... அவளால முடியல!" – அனந்தநாராயணன் பேசி முடிக்கும் முன், சாருலதாவே ஸ்தம்பித்துவிட்டாள்.

நந்தகுமார் அப்படியே அவள் மடியில் முகம் புதைத்திருந்தான். சாரு அவனது சிரத்தின் மேல் கையை வைத்து நிமிர்த்தினாள். அவன் கண்களில் அப்படி ஓர் ஈரம். உதடு ரெண்டும்கூட துடித்தன.

"தயாரிப்பாளர் சொன்னப்பகூட அவர் கொஞ்சம் மிகையா சொல்றாரோன்னு நினைச்சேன். இப்பதான் தெரியுது... அவர் சொன்னது. நீ இங்க 'ஹீரோ'வா நடிக்க வந்தது, உன்னோட அந்த பொய்யான பேட்டின்னு எல்லாமே எவ்வளவு சரின்னு... நீ பயந்த மாதிரியே உன் அம்மா உயிர் போயிடிச்சு. குறைந்தபட்சம் அந்தப் பொண்ணு நளினியையாவது வாழ வைக்கணும். இப்ப அதுக்கு என்ன வழின்னு யோசிக்கறதுதான் புத்திசாலித்தனம்..." – என்றவளை சிறு குழந்தை போல் அழுதபடி பார்த்தான்.

கண்ணீரைத் துடைத்துவிட்டாள் அவள்.

"சாரு! என் நிலைமை யாருக்கும் வரக்கூடாது. யாருக்குமே



வரக்கூடாது..." என்று தொடர்ந்து விசும்பி விசும்பி அழுதான்.

"நல்லா அழு நந்தா... நல்லா அழு. என் அம்மா செத்துப் போனப்பகூட உன்னை மாதிரி இக்கட்டான சூழ்நிலையிலதான் இருந்தேன். அப்ப நான் ஒரு காட்சியில் பொணமா நடிச்சிக்கிட்டிருந்தேன். உயிருள்ள இந்தப் பிணத்தோட காதுல உண்மையான பிணம் பத்தி எதுக்கு சொல்லிகிட்டுன்னு 'யூனிட்'ல யாரும் எதுவுமே சொல்லலை.

நடிப்பு முடிஞ்சு நான் 'மேக்கப்'பைக் கலைக்கும்போதுதான் சொன்னாங்க... அதுவும் அப்பதான் தகவல் வந்ததா பொய் சொன்னாங்க. ஆனா ஒரு 'லைட்மேன்'... 'காலையிலயே தகவல் வந்துடிச்சும்மா. டைரக்டர்தான் இப்ப விட்டா உன் 'கால்ஷீட்' கிடைக்க அப்புறமா பத்து, பதினைஞ்சு நாள் ஆகும்னு இன்னிக்கே இழுத்துட்டாரு'ன்னான்.

அதுக்குப் பிறகு அலறி அடிச்சு ஓடிப் போனா... அவங்க உடம்பை எடுத்துக்கிட்டு போயிட்டாங்க. காட்டுக்கும் ஓடினேன். ஆனா, அதுக்குள்ள கட்டையில போட்டு தீ வச்சுட்டாங்க. நான் கடைசியாப் பார்த்தது அம்மாவை இல்ல. அம்மாவோட நெருப்பைத்தான்..." – என்று சாருவும் கண் கலங்கிவிட்டிருந்தாள்.

## 10

பிறக்கும்போது நமக்கான முடிவு தேதியும் தீர்மானம் செய்யப்பட்டுவிடுகிறது. ஆனால், அதைத் தெரிந்துகொள்வது என்பது நமது முதுகை நாம் எப்படி பார்க்க முடியாதோ அப்படியொரு விஷயமாகவே இந்த மரணம் இருந்து வருகிறது. மறைவாக இருக்க வேண்டியவை– மறைவாக இருப்பதுதான் சரி. அது தெரிந்துவிட்டால்... தெரிந்த அந்த நொடியில் இருந்தே ஒருவித மனோ மரணம் ஏற்பட்டுவிடுகிறது.

சாந்தலட்சுமியின் சாவுக்கு எல்லோருமே வந்திருந்தனர். மிகவும் துவண்ட நிலையில் நளினியும் வந்திருந்தாள். எதிரில் மர நிழலில்

சிறுகதை

# நேர்முகம்

இளா. அழகிரி

ஆறாவதாக வந்த நபரைப் பார்த்ததும், "யூ ஆர் செலக்ட்டட்..." என்று சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் அசோக்குமாருக்கு தோன்றவில்லை.

'கேள்வி ஏதும் கேட்காமல் வேலையா?'- பிரமித்த சரவணன் பேச்சு வராமல் தவித்தான்.

"மிஸ்டர் சரவணன்... 'பைல்' வாங்கி உங்க தகுதி என்னங்கிறதை தெரிஞ்சுக்கலையேன்னு நினைச்சுக்க வேண்டாம். தெய்வத்தோட சிபாரிசு உங்களுக்கு இருக்கு. நாளைக்கே வேலையில சேர்ந்திடுங்க..."- கை குலுக்கி அனுப்பி வைத்தார் கம்பெனி நிர்வாகி அசோக்குமார்.

அப்படியே காலையில் நடந்த நிகழ்ச்சி காட்சியாக அவர் மனதுக்குள் ஓடியது.

அதிகாலையில் கோவிலுக்குப் போன அம்மாவை மணி எட்டாகியும் காணவில்லை. நேரம் ஆக...ஆக... பதற்றம் கூடியது, அசோக்குமாருக்கும்-மனைவிக்கும்!

தாயைத் தேடி அரக்க பரக்க கோவிலுக்கு ஓடினார்.

"பூஜை முடிச்சு அப்பவே திரும்பிட்டாங்களே நாராயணியம்மா"- பழக்கப்பட்ட பூசாரி சொல்ல, வியர்த்துப் போனான்.

வீட்டுக்கும், கோவிலுக்கும் அதிக தூரமில்லை. ஒரு வேண்டுதலாக அடி மேல் அடி எடுத்து வைத்தாலும், அரை மணி நேரத்தில் வந்து சேர்ந்திருக்கலாம்.

அகன்று விரிந்து கிடந்த கோவில் குளத்தைக்கூட விபரீத எண்ணத்துடன் அசோக்குமார் சுற்றிப் பார்த்தார். தெரிந்தவர் வீட்டுக்கெல்லாம் 'செல்'லில் பேசினார். யார் வீட்டுக்கும் அம்மா போகவில்லை.

இடையில் மனைவி போனில் அழைத்து, "என்னங்க... அத்தை இன்னும் வீட்டுக்கு வரலைங்க. பயமா இருக்கு" என்று பயத்தை மேலும் அதிகரித்தாள்.

அப்போது... வயதான பெண்மணி, "தம்பி... நானும், உங்க அம்மாவும் ஒண்ணாதான் சாமி கும்பிட்டோம்" என்றார்.

நெடுநேரம் தேடி அலைந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய அசோக்குமாரிடம், "எனக்கு ரொம்ப பயமா இருக்குங்க... எங்கே போனாலும் சொல்லிட்டுத்தானே போவாங்க அத்தை"- அழும் நிலையில் அம்மாவின் இனிய மருமகள்.

ஒன்பதாவது படிக்கும் பேத்திகூட... 'பாட்டியைப் பார்க்காமல் பள்ளிக்கூடம் போகமாட்டேன்' என அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினாள். கடிகாரம் வேறு- இன்று 'இன்டர்வியூ' இருப்பதை அசோக்குமாருக்கு ஞாபகப்படுத்தியது.

'ஏதாவது விபத்தாகி இருக்குமோ? போலீசுக்கு போகலாமா? வெளியில் செய்தியாகிவிடுமே?' பல்வேறு குழப்பத்தில் இருந்தபோது போன் ஒலித்தது.

தாவிப் போய் 'ரிசீவரை' எடுத்துப் பேசினாள் மருமகள்.

"என்னங்க... ஆஸ்பத்திரியில இருந்து போன். அம்மா ரோட்டுல மயக்கம் போட்டு விழுந்திருக்காங்க..."

கொஞ்சம் நிம்மதி பெற்ற அவர்கள், ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள். அடி ஏதும் படாத நாராயணி அம்மாள், மகன் வந்திருப்பதை உணர்ந்து கண் மலர்ந்தாள்.

ஆள்காட்டி விரலால் அந்த இளைஞனை சுட்டிக் காட்டினாள். "அசோக்... ரோட்டுல திடீர்னு மயக்கம் போட்டு விழுந்துட்டேன். அதோ அந்தப் பையன் மட்டும் சரியான நேரத்துல வந்து உதவி



செய்யலன்னா... நீ என்னை உசுரோட பார்த்திருக்கவே முடியாதுப்பா...”

தாய் சுட்டிக் காட்டியவனை நன்றிப் பெருக்கோடு பார்த்தான்.

மறுநாள் காலை எட்டு மணி.

மகன் எவ்வளவு தடுத்தும் தினசரி வழக்கத்தை மாற்றிக்கொள்ள முடியாமல் கோவிலுக்கு வந்திருந்த நாராயணி அம்மாளை பார்த்ததும், அந்த அம்பாளையே நேரில் பார்த்தது மாதிரி கையெடுத்துக் கும்பிட்டான் சரவணன்.

“இந்த சாமிங்க எல்லாம் கைவிட்டப்ப நீங்கதாம்மா குலதெய்வமா வந்து கைதூக்கி விட்டீங்க என்னை. உங்க தயவாலதான் எனக்கு வேலை கிடைச்சிருக்கு.”

“அப்படியெல்லாம் சொல்லக் கூடாதுப்பா. மனுஷனுக்கு மனுஷன் உதவி செய்யலேன்னா அப்புறம் எதுக்கு இந்த ஜென்மம்? வேலை கிடைச்சதை அதிர்ஷ்டமா நினைச்சுக்க... திறமையை வளர்த்துக்க...” என்றதும், அவன் கண்ணில் மின்னல் அடித்ததைக் கண்டு நாராயணி அம்மாள் பூரித்தாள்..

இதே சரவணன் இரண்டு நாட்களுக்கு முன் கண்ணீர் ததும்ப இதே சந்நதியில் மனம் உருக வேண்டி நின்றது இன்னமும் அவள் காதில் ஒலித்தது.

அவனிடம் விசாரித்தபோதுதான் தெரிந்தது. வேலை கிடைக்காமல் திண்டாடுவது!

அப்பா இறந்துவிட்டார். கண்ணு தெரியாத அம்மா; கல்யாண வயசுல அக்கா; வயதுக்கு வந்து நிற்கும் தங்கை மூவரும் இவனையே நம்பி உள்ளனர்.

அடுத்து அவன் ‘இன்டர்வியூ’ செல்ல இருப்பது தனது மகன் நிர்வாகிக்கும் கம்பெனி என்பது நாராயணிக்கு தெரியவந்தது. நேர்மையாக வளர்க்கப்பட்ட மகன் அசோக்குமாருக்கு சிபாரிசு என்றால் பிடிக்காது. ஆகவே, தந்திரத்தை கையாள வேண்டும் என்ற முடிவுக்கு வந்து நடத்தப்பட்டதுதான் கோவிலில் மயக்கம்... சரவணனின் உதவியால் உயிர் பிழைத்தது போன்ற நாடகம்.

நினைத்தது சரியாக நடந்துவிட்ட சந்தோஷம் நாராயணி அம்மாளுக்கு!

அவரிடம் சரவணன் விடைபெற்று சில அடி தூரம் சென்றதும் திடீர் ஆச்சரியம்.

அவன் கண் முன்னே தலைவிரி கோலமாய் இளம்பெண் மயங்கிச் சாய்ந்தாள்.

ஒன்றும் புரியாத அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் இல்லை. உடனே ஒருவித அலட்சியத்துடன் அவசரமாக நடந்தான்.

“தண்ணீ... தண்ணீ...” என அவள் முனகியதையும் பொருட்படுத்தாமல் அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

சரியாக காலை ஒன்பது மணி.. ‘டிப்டாப்’ உடையுடன் அலுவலகத்துக்குள் நுழைந்தான் சரவணன். சக பணியாளர்களை இளக்கார பார்வை பார்த்தான்.

“உங்கள சார் கூப்பிட்டாங்க...” என்றான்.



எல்லோரும் அவனையே பார்க்க, மனதுக்குள் மேலும் ஒரு பெருமிதத் துள்ளலுடன், ‘வந்ததும் வராததுமாக பதவி உயர்வு இருக்குமோ...?’ என்று எண்ணியவாறு மகிழ்ந்தான்.

கண்ணாடிக் கதவைத் திறந்து ‘கேபினுள்’ நுழைந்த மறுநிமிடம், ‘ஏ.சி.’ ஜில்லிர்ப்பையும் மீறி, அசோக் குமாரின் வார்த்தை அவனை சூடாக்கியது.

“ஸாரி மிஸ்டர் சரவணன்... நடைமுறை வாழ்க்கையில மனிதாபிமானத்தோட நடந்துக்க நீங்க முயற்சி பண்ணி இருக்கலாம். எங்க அம்மா என்கிட்ட இதுவரை பொய் சொன்னதே இல்ல. உன் வாழ்க்கைக்காக இப்ப சொல்லி இருக்காங்க. ஆனா, அது பொய்யின்னு எனக்கு முதல்லயே தெரிஞ்சிடுச்சு. சரி... அந்தப் பொய்யான நாடகத்துக்கு உண்மையிலேயே தகுதியானவரான்னு சின்னதா ஒரு சோதனை வெச்சேன். அதுல நீங்க தேறலை. கிளம்பலாம்...” என்று வேறு திசை நோக்கி திரும்பிவிட்டார் அசோக்.

சோகத்துடன் வெளியே வந்த சரவணன், அசோக்குமாரின் உதவியாளினியைப் பார்த்ததும் அதிர்ந்தான். கண்ணீரும், கம்பலையுமாய் தலைவிரி கோலத்துடன் அன்று சாலையில் தன் முன் மயங்கி விழுந்தாளே அதே இளம்பெண்தான் அவள்.

★

## படைப்பாளர்கள் கவனத்துக்கு...

‘ராணி’, ‘ராணிமுத்து’ இதழ்களில் இடம்பெறும் படைப்புகளுக்கு சன்மானத் தொகை, காசோலையாகவோ... ‘மணியார்டர்’ மூலமாகவோ அனுப்புவதற்குப் பதிலாக இனி அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாக வழங்கப்படும். ஏற்கெனவே படைப்புகள் அனுப்பியவர்களும், இனி அனுப்புகிறவர்களும் தாங்கள் **கணக்கு வைத்திருக்கும் பெயர், வங்கி மற்றும் கிளை விபரங்கள், கணக்கு எண், வங்கியின் IFS CODE** ஆகியவற்றுடன் செல்போன் எண், அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் முழு முகவரியையும் தவறாமல் குறிப்பிடுமாறு வேண்டுகிறோம்.

**– ஆசிரியர்**

உங்கள் படைப்புகளை மின்னஞ்சலிலும் அனுப்பலாம்:

editor@raniweekly.in

சிரித்தபடியே அந்தச் சித்தர் பார்த்துக்கொண்டே இருந்தார். கடைசி வரை நந்தகுமார் வரவில்லை. எல்லோரும் அதைப் பற்றியே பேசி மாய்ந்துபோனார்கள். 'அவன் ஒரு மனிதனே இல்லை', 'கல் நெஞ்சக்காரன்', 'சினிமா மாற்றிவிட்டது' என்றனர்.

சித்தர் மட்டும் சிரித்தார்.

"எப்பவும், எல்லாத்தையும் இந்த உலகம் தலைகீழாக்கிவிடும்" என்றவர், கச்சிதமாக நளினி அவரைத் தாண்டும்போது... "உன்னைக் காப்பாத்திட்டான்... உன்னைக் காப்பாத்திட்டான்..." என்றார்.

"என்ன இது உளறல்...? எப்பப் பாரு என்னைப் பார்த்து ஏதாவது பேசிக்கிட்டு...? எதுவா இருந்தாலும் நேர்ல சொல்லுங்க... பெரிய கடவுள்னு நினைப்போ?" – என்று ஒரு சீறு சீறினாள்.

அவர் அரசவில்லை.

"ஆமா... ஆனா நான் இல்ல... அவன்!" என்றார், இரு பொருளாக!

**எ**ல்லாக் காரியங்களும் முடிந்துவிட்டன!

சாந்த லட்சுமியின் படத்தின் முன்னால் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. சற்றுத் தள்ளி மவுனமாக அமர்ந்திருந்தார் அனந்தநாராயணன். உள்ளே வீட்டுக் காரியங்களை நளினிதான் செய்துகொண்டிருந்தாள்.

மிக இறுக்கமாக இருந்தாள்.

வீட்டில் அங்கங்கே நந்தகுமாரின் புகைப்படங்கள்.

அனந்தநாராயணன் எழுந்தார். ஒவ்வொரு படத்தையும் கழற்றத்தொடங்கினார். அதைப் பார்த்த கனகத்துக்கும் மனது பதறியது.

"வேண்டாண்ணே... அதையெல்லாம் இப்ப எதுக்கு கழட்டுறீங்க?"

"............."

"சொன்னாக் கேளுங்க... அவ்வளவு தூரத்துல இருந்து 'டிக்கெட்' கிடைச்சு வர வேண்டாமா?"



"கனகம்... வாயை மூடு! எவ்வளவு 'டிக்கெட்' உனக்கு வேணும்? நான் வாங்கித் தரட்டுமா? என்ன பேசறே நீ...? பெத்த தாயோட ஈமக்கிரியையைவிட அவனுக்கு 'சூட்டிங்' பெருசா போச்சா....?" என்று அனந்தநாராயணனுக்கு வக்காலத்து வாங்கினார் ரங்கநாதன்.

"இல்லை... இது ரொம்ப அதிகம். தண்ணி அடிச்சு தண்ணி விலகாது. இன்னிக்கெல்லாம் சினிமா வாய்ப்புங்கறது பெரிய குதிரைக் கொம்புங்க. அதுலேயும் 'ஹீரோ' வாய்ப்புங்கறது சாதாரண விஷயமில்ல. அதைத் தக்க வெச்சுக்கற 'டென்ஷன்'ல நந்தகுமார் எப்படி நடந்துக்கறதுன்னே தெரியாம நடந்துக்கறான்" என்று கனகமும் தனது நம்பிக்கையைக் கோடு காட்டினாள்.

அந்தப் பேச்சை கண்டிப்பது போல ஒரு பார்வை பார்த்தான் முகுந்தன்.

"எவ்வளவு மனசு வருத்தப்பட்டிருந்தா சாந்த லட்சுமிக்கு 'ஹார்ட் அட்டாக்' வந்திருக்குமா? யோசிச்சுப் பாரு. இவ உயிர் போனதுக்கே அவன்தான் காரணம். என் வரையில இனி அவன் என் மகனில்லை. கொலைகாரன்..." – என்று ரவுத்ரமாகவே கர்ஜனை செய்தார் அனந்தநாராயணன்.

அவ்வளவையும் கேட்டபடி சின்னச் சின்ன வேலைகளைச் செய்துகொண்டே இருந்தாள் நளினி.

அவள் என்ன-நினைக்கிறாள் என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவளும் அந்த நிலையில் உடைந்துபோய் தான் நினைப்பதைப் பேசுவதாகத் தெரியவில்லை.

முகுந்தன் மெல்ல அருகே சென்றான். கனைத்தான். அவளும் நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன நளினி... இவ்வளவு தூரம் நடந்திருக்கு. எதுவும் பேசமாட்டேங்கறே?"

"என்ன பேசணும்?"

"அவன் செய்தது சரியா?"

"யாரு?"

“நளினி! என்ன... என்னையே ஆழம் பார்க்கிறியா?”

“நீதான் என்னை ஆழம் பார்க்க வந்திருக்கே...”

“சரி... அப்படித்தான் வெச்சுக்கோ... அவனுக்காக தூக்க மாத்திரை சாப்பிட்டியே... இப்ப என்ன சொல்றே?”

“எதுவும் சொல்லலையே நான்...”

“நளினி! என் கோபத்தை கிளறாதே. அல்ப சினிமா ‘ஹீரோ’ வாய்ப்புக்காக உறவுகளையே தூக்கி எறிஞ்சிட்ட அவனை நீ இன்னும் நினைச்சுக்கிட்டு இருந்தா அது அபத்தம்...”

“அப்புறம்?”

“என்ன அப்புறம்..?”

“உங்க பிரச்சினையால ஒரு உயிரே போயிடிச்சு. இன்னும் புத்தி வரலைன்னா அப்புறம் உன்னைக் கடவுள்தான் காப்பாத்தணும்...”

“அவர்தான் உன் உருவத்துல வந்து கதவை உடைச்சுக் காப்பாத்திட்டாரே...!”

“போதும். உயிருங்கறது விலை மதிப்பு இல்லாதது. அதை ஒரு நல்ல விஷயத்துக்காக இழக்கலாம். இப்படி ‘ஹீரோ’வாகிட்டேன்கறதுக்காக, தலை கால் தெரியாதபடி ஆடுற கேவலமான ஒருத்தனுக்காக அதை இழந்துடாதே...”

“பார்ப்போம்...”

“என்ன பார்ப்போம்...? இன்னுமா உனக்கு அவன் மேல நம்பிக்கை இருக்கு?”

“நான் என்ன செய்யட்டும்? எனக்கும், அவருக்குமான உறவு பல வருஷ சொந்தத்தால அமைந்தது. ஆனா, இப்ப நடக்கற கசப்பான விஷயங்களெல்லாம் அதிகபட்சம் ஒரு மாசம்கூட இல்லை. இந்த சில நாட்களா... அந்த வருஷங்களை ஜெயிக்கிறது?”

“கெட்டு அழிய நாள் இல்ல... நொடி போதும். அதுதான் அவன் வரையில நடந்திருக்கு. அத்தை சாகும்போது ஒரு விஷயத்தை



சொல்லிட்டுச் செத்திருக்காங்க... தெரியும்தானே?”

“............”– அவள் அமைதியானாள்.

“உன்னைத்தான்... அவங்க விருப்பப்படிதான் இனி நீ நடந்துக்கணும்.”

“அத்தை இப்படி ஒரு தர்மசங்கடத்தை எனக்குத் தந்திருக்க வேண்டாம்...”

“அது தர்மசங்கடமல்ல! உனக்கான விடுதலை. அத்தையை நினைக்க எனக்கு இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?”

சாந்த லட்சுமியை நினைத்து முகுந்தன் நெகிழும்போது... அனந்தநாராயணனும் அங்கே வந்தார்.

“ஆமாம்மா... முகுந்தன் சொல்றதுதான் சரி. நீ உன் மனசை மாத்திக்கோ. நானே உனக்கு நல்ல இடம் பார்க்கறேன். ‘என்னோட

## 9



- ★ சீனர்களின் அதிர்ஷ்ட எண் 9.
- ★ பைசா நகரக் கோபுரம் 9 மாடிகளைக் கொண்டது.
- ★ ஆஸ்கார் சிலை எடை 9 ‘பவுண்டு’.
- ★ ஈரான் – ஈராக் போர் 9 ஆண்டுகள் நடைபெற்றது.
- ★ செவ்வாய்க்கிரகத்தில் ஆண்டுக்கு 9 மாதங்கள் பகலாக இருக்கும்.
- ★ சூரிய ஒளியானது பூமியை வந்தடைய 9 நிமிடங்கள் ஆகும்.



- ★ ஐ.நா. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 9.
- ★ நிலவு சாதாரண நாட்களைவிட பவுர்ணமியில்' 9 மடங்கு அதிகமாக பிரகாசிக்கும்.
- ★ புத்த மதச் சடங்குகளை நடத்தி வைக்க 9 துறவிகள் இருப்பர்.

– அ.சா.குருசாமி, செவல்குளம்.

பத்தாம் நாள் காரியம் நடக்கறதுக்குள்ளே நளினிக்கு மாப்பிள்ளை முடிவாயிடணும்'ன்னு அவ சொல்லி இருக்கா. அவளோட ஆத்ம சந்தோஷமே... நீ அதுக்கு சம்மதிக்கறதுலதான் இருக்கு..." என்றார்.

நளினி மவுனமாய் வேறு வழியின்றி அவரை வெறித்தாள்.

ஒன்பதாம் நாள்!

வரன் வந்து எல்லாமே முடிவு செய்யப்பட்டுவிட்டது. அனந்தநாராயணன் அந்த மாப்பிள்ளையிடமே பேசினார்.

"மாப்ள சார்... உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி. என் வரையில நீங்க யாரா இருந்தாலும் என் பிள்ளை மாதிரிதான் உங்களை நினைக்கிறேன். நான் பெத்தபிள்ளை கழுத்தை அறுத்துட்டான். ஆனா, எல்லாம் தெரிஞ்சும் நீங்க கை கொடுத்துட்டீங்க. என் மனைவி போய் இன்னியோட ஒன்பது நாளாகுது. அவன்கிட்ட இருந்து ஒரு போன் கூட கிடையாது. அவன் என்னமோ உலகத்துக்கே அரசனாயிட்ட மாதிரி நினைச்சுக்கிட்டிருக்கான்.

என் சொத்து- பத்துன்னு எதன் மேலயும் அவனுக்கு அக்கறை இல்லை. அதெல்லாம் எங்க போயிடப் போகுது? ஒரே வாரிசான தனக்குத்தான் வந்து சேர்ந்துடும்கறது அவன் எண்ணமா இருக்கலாம். ஆனா, ஒரு துரோகியான அவனுக்கு நான் என் சொத்துல கால் காசைக்கூட கொடுக்கத் தயார் இல்லை. இதெல்லாம் என் சுய சம்பாத்தியத்துல வந்தது.

என் வரையில நளினி மருமகளா வேண்டியவ. ஆனா, அவளை என் மகளா தத்து எடுத்துக்கப் போறேன். இந்தச் சொத்து இனிமே இவளுக்கும், உங்களுக்கும்தான். எனக்கு ஒரே ஒரு ஆசைதான். என் மகன் எதிர்ல நீங்க நிறைய பிள்ளை குட்டி பெத்து அமோகமா வாழ்ந்து காட்டணும். அவ்வளவுதான்..." என்று அனந்தநாராயணன் பொங்கி வழிந்தார்.

அந்த மாப்பிள்ளையும் ஆமோதிக்கும் பாவனையில் அவரின் கரங்களைப் பற்றிக்கொண்டார்.



பார்த்துக்கொண்டே இருந்தான் முகுந்தன். நளினி ஏதாவது ரகளை செய்து கெடுத்துவிடுவாளோ என்கிற ஒரு பயம் அவனிடம் திரிந்துகொண்டே இருந்தது.

அப்பொழுது பார்த்து ஒரு 'கூரியர்' தபால்.

முகுந்தன்தான் போய்க் கையெழுத்துப் போட்டு வாங்கினான்.

அமெரிக்காவில் இருந்து நந்தகுமார் அனுப்பி இருந்தான். அவன் கையெழுத்தைப் பார்த்த நொடி... முகுந்தனிடம் நடுக்கம்

நந்தகுமார் உருக்கமாக எதையாவது எழுதி, அது இப்போது வெளிப்பட்டால் நளினி அதனால் வேகமாக மனம் மாறி... 'பழைய குருடி- நீ கதவைத் திறடி' என்றாகிவிட்டால் என்பதால் தபாலை அப்படியே மறைக்க முயன்றான்.

"என்ன தபால்... யார்கிட்ட இருந்து?" - ரங்கநாதன் பலமான குரலில் கேட்க, "ஒண்ணுமில்லப்பா! 'டெலிபோன் பில்' வந்திருக்கு" என்றான்.

அது நளினியை சட்டென்று திருப்பியது. ஏனென்றால், நேற்றுதான் 'பில்' வந்து அதற்கான தபாலை அவள்தான் வாங்கி இருந்தாள். எனவே, முகுந்தன் எதையோ மறைக்கிறான் என்று எண்ணியவள்- அந்தச் சூழலைப் பற்றி கவலையேபடாமல் வேகமாக அவன்முன் வந்து நின்றாள். செங்குத்தாக வெறித்தாள்.

"என்ன நளினி...?"

"எங்க அந்தத் தபாலைக் காட்டு பார்ப்போம்..."

"இப்ப எதுக்கு அது? நீ கல்யாணப் பொண்ணு. மாப்ளை பார்த்துக்கிட்டு இருக்கார் பாரு..."

"அது எனக்கும் தெரியும். அதுக்காகவெல்லாம் என் நம்பிக்கையை இழக்க முடியாது. அந்த 'லெட்டர்' நிச்சயம் அமெரிக்காவுல இருந்து அத்தான் எழுதி இருக்கணும்..."

"..................."

"என்ன திருதிருன்னு முழிக்கறே? ஆமாம்தானே...?" - நளினியின் குரலில் வேகமும், சப்தமும் கூடிப்போனது.

முகுந்தனும் தர்மசங்கடமாக உணர்ந்தான்.

அனந்தநாராயணன் விறுவிறுவென்று வந்து, அவன் கையில் இருந்த கடிதத்தை வாங்கி உறையைப் பார்த்தார். கவனமாக பிரித்தார். சில 'போட்டோ'க்களோடு தபால் இருந்தது.

எல்லோரும் பேரமைதியோடு பார்த்தபடி இருந்தனர். குறிப்பாக நளினிக்கு நிச்சயிக்கப்பட்ட அந்தப் புதிய மாப்பிள்ளை!

கடிதத்தைப் படித்த அனந்தநாராயணன் முகம் சிவந்து போனது.

"இவனெல்லாம் ஒரு பிள்ளையா?" என்று சீற ஆரம்பித்தார். அவர் கையில் இருந்த கடிதத்தையும், 'போட்டோ'வையும் ரங்கநாதனும் பிடுங்கிப் பார்த்தார். அவர் முகமும் சுணங்கிப் போனது.

அடுத்து முகுந்தன். பிறகு கனகம். நிறைவாக நளினி.

புகைப்படத்தில் கல்யாணக் கோலத்தில் சாருலதாவோடு நந்தகுமார்! பின்பக்கமாய் ஒரு குறிப்பு.

'இது 'சூட்டிங்' படம் அல்ல... 'ஒரிஜினல்'! சினிமா துறையைச் சேர்ந்த எனக்கு சாருலதாதான் பொருத்தமானவள். நாங்கள் வெற்றி ஜோடியாவோம். இதற்குப் பிறகும் நளினி மனம் மாறவில்லை என்றால், அவளை இரண்டாம் தாராமாக மணந்து என் வீட்டு வேலைக்காரியாக ஆக்கிக்கொள்ள தயார்!'

– என்று இருக்க, அதைப் படித்தவள் அப்படியே மயங்கி விழுந்தாள்.

**நா**ட்கள் வெகுவேகமாக ஓடிவிட்டன.

நளினிக்கு மணம் முடிந்து அவள் வயிற்றில் ஒரு குழந்தைகூட உருவாகிவிட்டது. நந்தகுமார் 'ஹீரோ'வாக நடித்த படமும் வெளியாகப்போகிறது. ஊர் முழுக்க அதன் 'போஸ்டர்'தான். காரில் போகும்போது கண்ணில்படும் அந்தப் 'போஸ்டரை' பார்த்தபோது நளினி காறி உமிழ்ந்தாள்.

முகுந்தன் அதற்கு மேல் சீறினான். அதைக் கிழித்தான்.



அனந்தநாராயணன் தாடி விட்டிருந்தார். 'நந்துவின் படம் தோல்வி அடைய வேண்டும். அவன் தலையெடுக்கவே கூடாது. தெருத் தெருவாய் அலைந்து பிச்சை எடுக்க வேண்டும்' என்பதெல்லாம் அவர் விருப்பங்கள். பார்க்கிறவர்களிடம் எல்லாம்கூட இதையே சொன்னார்.

நந்துவின் படத்தைப் 'பிரிவியூ'வின்போது பார்த்த விநியோகஸ்தர்கள் 'கிளைமாக்ஸை' மாத்தி எடுத்தால் படம் ஓடும் என்பதுபோலச் சொல்லி இருந்தனர். தயாரிப்பாளர் அதற்கான எண்ணத்தில் இருந்தார்.

கதைப்படி அவன் காதலித்த பெண்ணை அவள் தூங்கும்போது தீயிட்டுக் கொளுத்திவிடத் திட்டம் தீட்டுகிறார்கள். அவள் எழுந்து எங்கும் நழுவிவிடக்கூடாது என்று தூக்க மாத்திரையைக் கொடுத்துவிடுகிறார்கள். இது தெரிந்த கதாநாயகன் அவளைக் காப்பாற்ற முயற்சிக்கிறான். அந்தப் போராட்டத்தில் அப்படியே உயிரை விட்டுவிட – இருவருடைய உடல்களும் கட்டிக்கொண்டு எரிகின்றன.

'காதலுக்கு உலகில் இதுதான் முடிவு' என்று அப்போது திரையில் எழுத்து விழ, படம் முடியும். நந்தகுமாரும் தயாரிப்பாளரை வலியுறுத்தினான். 'டூப்' போடாமல் தானே நடிப்பதாகக் கூறினான். அவரோ அவனைச் சந்தேகத்தோடு பார்த்தார்.

"வேண்டாம் நந்தா.. இன்னும் கொஞ்சம் நாளாவது நீங்க சாருவோடு சந்தோஷமாக வாழப் பாருங்க..." என்றார்.

"இல்ல சார்.. என் திட்டப்படி எல்லாமே நடந்து முடிஞ்சாச்சு.

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்,
ஆசிரியர்: ர.பாஸ்கரன், அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம்.
ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.
தொலைபேசி: 25324771 FAX: 044-26426884
E-MAIL:
admin@raniweekly.in
raniweekly@vsnl.net

நான்தான் இப்ப என் குடும்பத்தினருக்கு வில்லன். ரசிகர்களுக்கு மட்டும்தான் 'ஹீரோ'. இந்த 'ஹீரோ', வில்லனாவே நீடிச்சாதான் நான் எதற்காக இவ்வளவு கஷ்டப்பட்டேனோ அதுக்கு ஓர் அர்த்தம் இருக்க முடியும். பிளீஸ் சார்...'' என்று வலியுறுத்தினான்.

இறுதி வரை தயாரிப்பாளர் சம்மதிக்கவில்லை. ஆனால், அவருக்கே தெரியாமல் டைரக்டரிடம் படப்பிடிப்பு வைக்கச் சொல்லி காட்சியிலும் நடிக்கத் தயாராகிவிட்டான்.

கதாநாயகி சாருலதா மயங்கிக் கிடக்கும் வீடு எரிய ஆரம்பிக்க; "ரெடி, ஸ்டார்ட், காமிரா" என்று டைரக்டரும் குரல் கொடுக்க, ஆவேசமாக உள்ளே ஓடினான் நந்தகுமார்.

போன வேகத்தில் மறுபடியும் வந்துவிட வேண்டும். உள்ளே கட்டிலில் சாருவுக்குப் பதிலாக அவளது பொம்மை உடம்பு. அதைப் போய்க் கட்டிக்கொண்டவன் அப்படியே தீயில் போய் விழுந்தான்.

டைரக்டர் அலறினார். "கட்" என்று அதன்பின் அவர் கத்தியதாலோ, இல்லை... குறுக்கும் நெடுக்கும் ஓடியதாலோ ஒரு பயனும் இல்லை.

சாருலதா அங்கே இருக்கப் பிடிக்காமல் ஓடிப் போய் காரில் ஏறிக்கொண்டாள். அழுதபடியே காரை அவள் கிளப்பச் சொல்ல, காரும் புறப்பட்டது.

அவள் நினைப்பு அப்படியே பின்நோக்கி செல்லத் தொடங்கியது.

'ஒரு புதுமுகத்துடன் சேர்ந்து நடிக்க முடியுமா?' என்று கேட்ட தயாரிப்பாளர் அவளை அழைத்துப் பேசியபோது சொன்னதெல்லாம் ஒரு கல்வெட்டு போல நெஞ்சில் வரி வரியாக பதிந்துவிட்டது.

"சாரு... நான் ஒரு நம்ப முடியாத- அதேநேரம் சத்தியமான உண்மையைச் சொல்லப் போறேன். நந்தகுமார்னு ஓர் இளைஞர். அவருக்குக் கல்யாணம்கூட முடிவாகிடிச்சு. நிச்சயதார்த்தமும் நடந்துடுச்சு. ஆனா இப்படியொரு நிலைலதான் அவருக்கு ரத்தப்





பரிமாற்றத்துல 'எய்ட்ஸ்' வந்திருக்கறது தெரிஞ்சிருக்கு. ரொம்பக் கவனமாக இருந்து மாத்திரை– மருந்து சாப்பிட்டாலும் ஒரு பத்து வருஷம் உயிரோடு வாழ முடிஞ்சா அதிகம்.

இதை அவர் வெளியே சொல்லவும் முடியாத நிலை. ஏன்னா... அவருக்குப் பாத்திருக்கற பொண்ணு இவரோட உறவாம். பிறந்ததுல இருந்து ரெண்டு பேருக்கும் அப்படியொரு காதலாம். அம்மா– அப்பாவுக்கு இவர் ஒரே பிள்ளை.

இப்படிப்பட்ட நிலையில இவர் கல்யாணம் செய்துக்கத் தயார் இல்லை. அதுதானே நல்ல முடிவாகவும் இருக்க முடியும்! ஆனா, அந்தப் பொண்ணு காரணம் கேட்குமே... அதுக்கு என்ன சொல்ல...? 'எய்ட்ஸ்'ன்னு சொன்னா 'பரவாயில்ல'ன்னு அது சேர்ந்து வாழத்தான் முயற்சி செய்யுமாம். அது அப்படிப்பட்ட பொண்ணு. அது வெறுக்கணும். பெத்தவங்கக்கூட இவரை வெறுக்கணும். அவருக்கு 'எயிட்ஸ்' வந்திருக்கறது வெளியே தெரியவும் கூடாது. இதுதான் இப்ப மிஸ்டர் நந்தகுமாருக்கு தேவை. 'எனக்கு 'ஹீரோ' வாய்ப்பு கொடுங்க. மிச்சத்தை நான் பார்த்துக்கறேன்'னு சொன்னார். எனக்குப் புரிஞ்சு போச்சு. ஒரு நல்ல காரியத்துக்கு உதவி கேக்கறாரு. நானும் செய்யத் துணிஞ்சுட்டேன். நீயும் ஒத்துழைச்சா நல்லா இருக்கும். என்ன சொல்றே?" – சாரு மனதில்... அன்று அவர் கேட்டது ஓடியது.

நந்தகுமார் நினைத்ததைச் சாதித்துவிட்டான். ஒருவ்கையில் தன் தியாகத்தால் விதியையே வெற்றி கொண்டுவிட்டான். 'எய்ட்ஸ்' நோயால் உளுத்துப் போக வேண்டிய உடம்பை முன்னதாகவே விபத்து என்னும் பெயரில் நெருப்புக்குக் கொடுத்துவிட்டான். இதனால் அவனுடைய அப்பா முதல் எல்லோருமே மகிழ்ந்து போவார்கள்.

'இப்படிக்கூட ஒரு தியாகத்தை ஒருவரால் செய்ய முடியுமா?'

சாருலதா விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தாள்.

கூடவே... நம்மில் பலரும்!

முற்றும்